உ

ஓம் விராட் விஸ்வப் பிரஹ்மணே நமஹ:

# விஸ்வகுல விநாயகர் பெருமை

## உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு, விஸ்வகுல விநாயகர்

## மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்



வெளியீடு:

திருப்பணிச் சபை, விஸ்வகுல விநாயகர் தேவஸ்தானம்,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

20-07-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III

## “ஆய்வறிஞர் பண்பாட்டில்”







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு

வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர்,
முன்னாள் கலைப் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை திருக்கோயில்கள். எனவே, காலங்காலமாக அவை பண்பாட்டின் உறைவிடமாகவும், சமய வாழ்க்கையின் கேந்திரமாகவும் விளங்கி வந்துள்ளன. திருக்கோயிலும், அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் தலப்பெருமைக்கு வழிவகுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே, திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மரபு உருவாயிற்று. மூர்த்தியை வழிபடுவதற்கு ஓரிடத்திற்குச் செல்வது 'தலயாத்திரை' என்று 'தீர்த்தயாத்திரை' என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதனை 'க்ஷேத்திராடனம்' எனவும் குறிப்பிடுவர்.

புராணங்களில் இறைவனது பெருமை சிறப்பாகப் பேசப்படுகின்றது. எடுத்துக்காட்டாக விநாயகர் புராணம் விநாயகரின் மகிமைகளைக் கூறும். அதுபோன்று மகாபுராணங்கள் சிவனது அட்ட வீரட்டங்களையும் விஷ்ணுவின் தசாவதார மகிமைகளையும் கூறுகின்றன. இத்தகைய புராணமரபை அடியொற்றிப் பல தலங்கள் இந்தியாவில் எழுச்சியுற்றன. இதன் காரணமாக எண்ணற்ற தல புராணங்களும் எழலாயின. இத்தகைய தலங்கள், பல ஐதீகங்களைக் கொண்டு விளங்கியதோடு மக்கள் பக்தியுடன் யாத்திரை செய்து வழிபடும் இடங்களாகவும் திகழ்ந்தன. சிவாகமங்கள் சிறப்பித்துக் கூறும் திருவுருவ வழிபாட்டிற்குப் புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளும் மரபுகளும் சிறந்த விளக்கமாக அமைந்தன. திருவுருவங்களுக்குரிய விளக்கங்களைப் புராணங்கள் கூற, மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்தின் மகிமையைத் தல புராணங்கள் கூறின. புராணங்கூறும் தெய்வீகக் கதைகளுக்கேற்ற தலங்கள் சிறப்பாகத் தென்னாட்டில் எழுச்சி பெற்றன. இவற்றில் சிவமகிமைக்குரிய சிவத்தலங்களும் விஷ்ணுவின் பெருமைகூறும் வைணவத் தலங்களும் அடங்குகின்றன. விநாயகருக்குரிய தலங்களுள் திருச்சி உச்சிப் பிள்ளையார் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

அருளாளர்கள் சில அற்புதச் செயல்களைச் சில தலங்களில் நிகழ்த்தினர். இத்தகைய அற்புதம் நிகழ்ந்த தலங்கள் பின்னும் சிறப்பையடைந்தன. அற்புதம் நிகழ்ந்த தலங்களும் அருளாளர்களின் பாடல் பெற்ற தலங்களும் காலங்காலமாகச் சிறப்புப் பெற்று வருகின்றன. திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்களும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்யதேசங்களும் அருணகிரிநாதருடைய திருப்புகழைப் பெற்ற முருகனது திருப்பதிகளும் அடியவர்களது வழிபாட்டிற்கும் பக்திப் பெருக்கத்திற்கும் உரிய இடங்களாக விளங்கின. சிதம்பரம், மதுரை, திருவாரூர் போன்ற தலங்களுக்கு ஏனைய தலங்களைவிடப் பெருமை அதிகமாயிற்று. முனிவர்கள் பூசித்த தலங்கள் புராணங்களில் புகழப் பெற்றன. இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையாலும் சிறப்படைந்த 274 சிவத்தலங்கள் மிக முக்கியமானவையாகப் போற்றப்படுகின்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தலங்கள் இச்சிவத்தல எண்ணிக்கையில் இடம் பெறுகின்றன.

இந்தியாவில் தலங்களில் சிற்சில ஒவ்வொரு வகைச் சிறப்புக் காரணமாகத் தொகுதிகளாக வகுக்கப்பெற்றுப் போற்றப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, முத்தித் தலங்கள் என்றவகையில் காசி, காஞ்சி, வடமதுரை, அயோத்தி, பூரி, அவந்திகா, துவாரகை ஆகிய ஏழு தலங்களும் முக்கியமானவையாகும். இதேபோன்று பஞ்சபூதத் தலங்கள், தென்கைலாயத் தலங்கள், காசிக்குச் சமமான தலங்கள், பஞ்ச சபைத் தலங்கள், அட்ட வீரட்டத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள் எனப் பல்வேறு வகையாகத் தலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய தல விசேடத்தின் பயனாய் யாத்திரிகர்கள் இவற்றைத் தரிசித்து வழிபடுவது சமயச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்களில் நிகழும் கும்பாபிஷேகத்தின் போது மூன்று அம்சங்கள் மூர்த்தியில் நிலைபேறு கொள்கின்றன. திருவடிவம், யந்திரம், மந்திரம் ஆகியவையாகும். யந்திரத்தில் அமைக்கப்படும் பீஜமந்திரமும் தியான மந்திரங்களும், மூர்த்தியின் காரண சரீரமாகக் கொள்ளப்படுவன. சிவாசாரியார் மந்திரம் முதலிய தியானத்தினாலும் மற்றைய கிரியைகளினாலும் இறைவனது மூர்த்தியில் ஆவாகனம் செய்யும் வகையால் அது மந்திர மூர்த்தி என்ற சிறப்பைப் பெறுகின்றது. இது மூர்த்தியின் சூக்கும நிலையாகும். மூர்த்திக்கு நிகழும் மந்திரம், பாவனை ஆகியவற்றால் அடியவர்களின் உள்ளத்தில் திருவருட் பிரகாசம் தோன்ற வழியேற்றப்படுகின்றது. இறைவனது தூல சூக்கும நிலைகளுக்கு ஆதாரமாயுள்ளது யந்திரமாகிய காரண சரீரமாகும். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றினாலும் இறைவனது திருவடிவத்தில் தெய்வ சாந்நித்தியம் ஏற்படுகின்றது. திருக்கோயில்களில் கருவறையில் இடம்பெறும் மூர்த்திக்குரிய இலக்கணங்களாக மேற்கூறப்பட்டவை சிறப்பாகப் பொருந்துவனவாகும். இத்தகைய சிறப்புடன் விளங்கும் மூர்த்திக்கு 'மூலமூர்த்தி' என்ற சிறப்புப் பெயர் உண்டு.

மூலமூர்த்தியிலிருந்தே உற்சவ மூர்த்திகளுக்குரிய சக்திகள் பெறப்படுகின்றன. மூலமூர்த்தி அசையாது நிலைபெற்றுக் கருவறையில் சாந்நித்தியம் கொண்டு விளங்குவதாகும். எனவே அதனை அசலமூர்த்தி எனச் சுட்டுவது மரபு. அகண்டமாய் அருவுருவாயிருக்கும் பரம்பொருளை மனத்தினால் தியானஞ் செய்து உடலினால் வழிபாடு செய்தவற்கு எமக்குத் துணை புரிபவையே இறைவனது திருவடிவங்கள். இறைவனின் தெய்வீக நிலையை எடுத்துக்கூறும் பெற்றி வாய்ந்தவை. எனவே, இவற்றை முறையாகவும் சாஸ்திர ரீதியாகவும் உருவாக்கும் வழிவகை பற்றிச் சிவாகமங்களும் சிற்பநூல்களும் எடுத்துக்கூறுகின்றன. மந்திர நியாசத்தின் பின்னர் தான் திருவுருவங்களில் இறைவனது சாந்நித்தியம் ஏற்படுகின்றது. அதற்கு முன்னர் ஏற்படுவதில்லை. கும்பாபிஷேகக் கிரியைகள் மூலம் மந்திரங்கள் வழியாக இறைவனைத் திருவுருவத்தில் சாந்நித்தியம் கொள்ளச் செய்த பின்னர் முறையாக நித்திய நைமித்திகக் கிரியைகள் நிகழும். திருவுருவமும் மூர்த்தி விசேடத்தைப் பெறும்.

மூர்த்தி விசேடத்தினால் ஓர் ஊர் சிறப்புப்பெறுமிடத்து, அது தலமாகச் சிறப்பிக்கப்படுகின்றது. இயற்கையாக மூர்த்தி எழுந்தருளும் இடம் தான்தோன்றி ஈச்சுவரமாகவும் மூர்த்தியானது 'சுயம்புமூர்த்தி' என்ற நிலையிலும் பெருமை பெறுகின்றன. இத்தகைய மூர்த்திக்குரிய தலங்களுக்குச் செல்வதே தலயாத்திரை. தலயாத்திரை திருக்கோயில் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. புண்ணியத் தலங்கள் எம்முடைய உள்ளத்தைப் புனிதமாக்குவதோடு மனதை லயப்படுத்துவனவாகவும் உள்ளன. பக்தியை வளர்ப்பன. உள்ளத்தில் அமைதியையும், நிறைவையும் தருவன. இத்தகைய தலங்களில் தீர்த்த விசேடமுமுண்டு. தீர்த்தமும் தலமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக அமைவன. மூர்த்தியினால் ஒருவனுக்கு அருட்பேறு கிட்டும். தலத்தினால் மனத்தூய்மையும், தீர்த்தத்தினால் உடற்றூய்மையும் கிட்டுவன. எனவேதான் எமது வழிபாட்டிற்குரிய தெய்வங்களை வழிபடுவதிலும் பக்தி உணர்வை வளர்ப்பதிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த தலங்கள் சிறப்புப் பெறுகின்றன. உண்மையான ஆத்மீக நலனுக்கு இவை பெரிதும் உதவுவன. பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகம் இவற்றின் திருவருட் சக்தியைப் புதுப்பித்துத் தருவதோடு இறைவனின் சாந்நித்தியத்தை நாம் மனதார உணர்வதற்கும் வழிவகுக்கின்றது.

இந்தியாவில் மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தினால் சிறப்புப் பெற்றவை வடக்கில் காசியும், தெற்கில் இராமேஸ்வரமும் எனக் கூறலாம். 'காசிக்குப் போனால் புண்ணியமுண்டு' என்பதும் 'கங்கையில் மூழ்கி நீராடினால் செய்த வினைகள் அகலும்' என்பதும் ஆஸ்திகர்களின் நம்பிக்கையாகும். இவ்விரு தலங்களை எல்லையாகக் கொண்ட திவ்வியபூமி 'புண்ணிய பாரதம்' எனப் போற்றப்படுகின்றது. இந்துக்களின் புனிதத் தலங்களில் காசி, மூர்த்தி, தல விசேடமும் கங்கை தீர்த்த விசேடமும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் தென்னாட்டில் பெருமையுடன் விளங்கிய கங்கை கொண்ட சோழபுரம் கங்கையின் புனித மகிமையை நினைவு கூர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிக்குச் செல்பவர்கள் தங்கள் யாத்திரையை இராமேஸ்வரத்திற்குச் சென்ற நிறைவு செய்வது மரபாகும். இவ்விரு தலயாத்திரைகளும் ஆன்மீகத் துறையில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒரே குறிக்கோளுடன் ஒன்றுபடும் நிலையை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. இவ்விரு தலங்களும் 'புண்ணிய ஆட்சித் தலங்கள்' எனவும் போற்றப்படுகின்றன. இவ்விரு தலங்களையும் தரிசித்தால் இவற்றின் இடைப்பட்ட அனைத்துத் தலங்களையும் தரிசித்த பேறு கிட்டும் என்பதும் மரபுவழி நம்பிக்கையாகும். காசிக்குரிய மற்றொரு பெயர் வாரணாசி என்பதாகும். கங்கைப் பெருநதியில் கலக்கும் இரு ஆறுகளுக்கிடையில் இத்தலம் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. இங்கு தலப் பெருமையுடன் விளங்குபவர் 'விசுவநாதர்' என்ற திருநாமத்தினால் சிறப்பிக்கப்படுகின்றார். காசியில் ஒரே நாளில் வழிபட வேண்டிய சந்நிதிகளில் துண்டி ராஜ விநாயகப் பெருமானின் சந்நிதியும் முக்கியமானதாகும். இப்புண்ணிய தீர்த்தத்தின் சிறப்புக்கு மணிகர்ணிகை, ஞானவாவி, கங்கை ஆகிய மூன்றும் முக்கியத்துவமுடையன புனித கங்கையில் அறுபத்துநான்கு நீராடற்றுறைகள் அமைந்துள்ளன. இவற்றைக் 'காட்' (கட்டம்) என்று கூறும் மரபுண்டு, அசிசங்கம கட்டம், தசாசுவமேத கட்டம், வருண சங்கம கட்டம், பஞ்சா கங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம் ஆகிய பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவற்றை உள்ளடக்கிய யாத்திரையும் இவ்வைந்து தீர்த்தங்களிலும் ஒரே நாளில் நீராடுவதும் 'பஞ்ச தீர்த்த யாத்திரை' என அழைக்கப்படுகின்றது.

காசி யாத்திரையின் பின்பு இராமேஸ்வரம். சென்று தனுஷ் கோடியில் தீர்த்தமாடி இராமேஸ்வர லிங்கத்தை வழிபடின் காசி யாத்திரையின் முழுப்பயனும் கிட்டுவதோடு யாத்திரையும் நிறைவுபெறும் என்பது நம்பிக்கை. இத்தலத்தில் அறுபத்து நான்கு தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் சேது தீர்த்தம் முக்கியத்தும் உடையது. தனுஷ்கோடி 'கோடித் தீர்த்தம்' என்று வழங்கப்படுகின்றது. இத்தீர்த்த நீரை மக்கள் கலசங்களில் கொண்டு செல்வது மரபு. கங்கை நீரையும் மக்கள் கொண்டு செல்லும் மரபுண்டு. எக்காலத்திலும் இந்நீர் கெடாது என்பது ஐதீகமாகும். இத்தகைய தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் பயன்களும் கூறப்படுகின்றன.

புனிதமாகக் கருதப்படும் குளங்களும் கடற்பகுதிகளும் தீர்த்தமாடுவதற்கு உரியவையாகின்றன. சிறப்பான நாட்களில் இந்நீர் நிலைகளில் தீர்த்தமாடுவதற்கு மக்கள் ஏராளமாகக் கூடுவர். இந்தியாவில் இவ்வகையில் 'கும்பமேளா' முக்கியத்துவம் பெறுகின்றது. ஹரித்துவார், பிரயாகை, உஜ்ஜயினி, கோதாவரி ஆகிய நான்கு இடங்களிலும் முறை வைத்து, இப்புனித நீராடும் விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வோர் இடத்திலும் நடைபெறும். தெற்கில் பன்னிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கும்பகோணத்தில் உள்ள புனித குளத்தில் நடைபெறும் நீராடும் விழா 'மகாமகம்' என்று வழங்கப்படுகின்றது. அனைத்துக் கோயில்களும் மகோற்சவ காலங்களில் இறுதி நிகழ்ச்சியாகிய 'தீர்த்தம்' முக்கியத்துவம் பெறுகின்றது. கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பன திருக்கோயில் நைமித்திகங்களில் சிறப்புப் பெறுவன.

இவ்வாறாக மூர்த்தியின் பெருமையால் தலம், தீர்த்தம் சிறப்புற்று மக்களது ஆன்மீக வாழ்க்கை செம்மையுறப் பெரிதும் உதவுகின்றன. திருக்கோயில் வழிபாட்டில் சிறப்புப் பெறும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை பற்றித் தாயுமானவர்,

**மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற்**
**றொடங்கினர்க்கோர்**
**வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே**

என உணர்த்தியுள்ளமை மனங்கொளத் தக்கதாகும். எனவே, திருக்கோயில் வழிபாட்டின் அடிப்படை உபாசனையாக இவை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.


**உசாவியவை :**

10 ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேச வைபவமும் புராண அபிமான ஸ்தலங்களும், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி சென்னை 1986.

மகாலிங்கம், எஸ்., தலவரலாறு அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில், திருச்சி. 1979.

முத்துப்பிள்ளை, சி., சிறப்பு மிக்க சிவாலயங்கள், பைலட் பப்ளி கேஷன்ஸ், சென்னை. 1978.

முத்தையா, கே. எஸ்., காசி அல்லது நமது புண்ணிய பூமி, முத்தையா பிரஸ், சென்னை. 1929.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாட்டின் தொன்மையும் வரலாறும்

வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி. சி. க. சிற்றம்பலம் MA. Ph.D.

வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தென்னாசியா கற்காலந்தொட்டு மனித நடமாட்டத்திற்குரிய பிராந்தியமாக விளங்கியதால் பல்வேறு இன மக்கள் பல்வேறு காலங்களில் கடைப்பிடித்த மன நம்பிக்கைகளின் சங்கமிப்பாகவே இந்துமதம் விளங்குகிறது. இப்பிராந்தியத்தின் ஆதிக்குடிகளை மானிட இயலாளர் ஒஸ்ரலோயிட் அல்லது வேடோயிட் இன மக்களெனவும் இவர்கள் பேசிய மொழியை ஒஸ்ரிக் மொழி எனவும் கூறுவர். இவர்களைத் தொடர்ந்து திராவிடர், ஆரியர் போன்ற மக்கட் கூட்டத்தினர் இப்பிராந்தியத்தில் கால் வைத்தனர் இவர்களது பங்களிப்பே இன்றைய இந்துமதமாகும். கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி காணபத்தியமாகும். ஆதிசங்கரர் இந்துசமயத்தின் ஆறு பிரிவுகளில் இதனையும் தனித்துவமான ஒன்றாக இணைத்துள்ளார். ஏனைய பிரிவுகளாக சைவம் சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் ஆகியன காணப்படுகின்றன. காணபத்தியம் காலகதியில் சைவம், சாக்தம், கௌமாரம் ஆகிய பிரிவுகளுடன் சங்கமித்தது மட்டுமன்றிச் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்த மூத்த மகனாகக் கணபதி தோற்றம் பெற முருகனுக்கு அண்ணனானார். நாளடைவில் விநாயகர் இந்துக்கள் மத்தியில் பிரபல்யமானார். இந்துக்கள் எக்காரியத்தைத் தொடங்கும் போதும் கணபதியை வழிபட்டு அதனை ஆரம்பித்தல் வழக்கமாக விநாயகரே முதன்மை பெற்றார். இவ்வழிபாடு இந்தியா, ஈழம் ஆகிய நாடுகளில் மட்டுமன்றி ஆப்கானிஸ்தான், திபேத், சீனா, யப்பான், தென்கிழக்காசியா நாடுகளிலும் பரவியது. தமக்கொரு தலைவரில்லாத தன்னிகரற்ற கடவுளாகிய விநாயகர் 'உலகை வலம் வந்த பிள்ளையாராக' செல்வாக்குப் பெற்றார். இந்து மதத்தில் மட்டுமன்றி விநாயக வழிபாட்டின் செல்வாக்கு அவைதீக மதங்களாக பௌத்தம், சமணம் ஆகியவற்றில் காணப்படுவதும் இவ்வழிபாட்டிற்குரிய மற்றைய சிறப்பாகும்.

விநாயக வழிபாட்டின் பழைமையை எடுத்தியம்பும் சான்றுகள் ஏனைய வழிபாட்டு நெறிகளான சிவ, சக்தி, முருக வழிபாடு போன்று காணப்படாவிட்டாலுங் கூட உலகின் பழைய நாகரிகங்களின் வரிசையில் காணப்படும் இந்திய சிந்துவெளி நாகரிகத்தின் முத்திரைகள், வேதங்கள் ஆகியவற்றில் தொன்மையான சான்றுகள் உள. இலக்கியங்கள், இதிகாச, புராணங்கள், திருமுறைகள், சிற்பங்கள், நாணயங்கள், சாசனங்கள் ஆகியவற்றிலும் விரிவான சான்றுகள் உள.

காணபத்தியத்தின் ஆரம்பத்தினை இந்தியாவின் தொன்மையான கி.மு. 3000 ஆண்டுகளைச் சார்ந்த சிந்துவெளி நாகரிகம் தொட்டுக் காணலாம். இந்நாகரிகத்தில் மிருகங்களான எருது, யானை, பசு, குதிரை, சிங்கம் போன்றன மட்டுமன்றி மயில், கருடன் போன்ற பறவைகளோடு நாகமும் வழிபடப்பட்டதற்கான சான்றுகள் உள. இதற்கான சான்றுகளாக இங்குள்ள முத்திரைகளில் இவ்வுருவங்கள் காணப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகத்தைப் போன்று பழமைமிக்க சுமேரிய, எகிப்திய நாகரிகங்களில் மிருகத்தலையும், மனித உடம்பும், மனிதத் தலையும், மிருக உடம்பும் கொண்ட உருவங்கள் வழிபாட்டிற்குரிய பொருள்களாக விளங்கின. இந்தியாவிலும் மிருகத்தலையும் மனித உடலும் கொண்ட இவ்வழிபாடு ஆரியருக்கு முந்திய திராவிடரின் வழிபாட்டுநெறி எனப் புகழ்பூத்த இந்திய அறிஞரான சுனித்குமார் சட்டர்ஜி கருதுகிறார். இத்தகைய கருத்தினையே கணேச வழிபாடு பற்றி ஆராய்ந்துள்ள அலிஸ் கெற்றியும் உறுதி செய்துள்ளார். சிந்துவெளி எழுத்துக்களைக் கணனிமூலம் வாசிக்க முயன்ற ஸ்கந்திநேவிய ஆசிய கல்வி நிறுவனத்தைச் சார்ந்த அஸ்கோபர், போலா போன்ற அறிஞர்களும் சிந்துவெளி நாகரிகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக வழிபாடு காணப்பட்டதை எடுத்துக் காட்டியுள்ளார்.

கணபதி பற்றிய மிகப் பழைய இலக்கியச் சான்றாக கி.மு. 1500 ஆம் ஆண்டைச் சேர்ந்த இருக்வேதம் அமைகின்றது. ஆரியரது மிகப்பழைய வேதமாகிய இதில் இரு இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. அவையாவன பிரஹஸ்பதி பற்றிய பாடலும் (2.23.1) இந்திரனைப் பற்றிய பாடலும் (10.112.9) ஆகும். இவற்றில் முதலாவது குறிப்பில் "தெய்வங்களின் மிகப் பிரதான தலைவரும், முதலில் உதித்தவரும், ஞானிகளிலே மிகச் சிறந்தவரும், எவ்வகையான உணவுப் பொருட்களையும் அளவற்று வைத்திருப்பவருமாகிப் பிரார்த்தனையின் பெருந்தலைவரானவரே (வேதங்களுக்கு முதல்வரானவரே), தேவரீரை அடியோராகிய நாங்கள் மெய்யன்புடன் வரவழைக்கின்றோம். எமது பிரார்த்தனைகளைத் திருச்செவி மடுத்துப் பாதுகாப்புடன் இக்கிரியையிலுள்ள திருவாசனத்திற்கு எழுந்தருளுவீராக".

யசுர் வேதத்திலும் குறிப்பாக கிருஷ்ண யசுர் வேதத்திலுள்ள சதருத்திரீயம் (45.4.1), வாஜசனேயி சம்ஹிதை (22.30) ஆகியவற்றில் கணபதி பற்றிய சான்றுகள் உள. இவற்றுள் சதருத்திரீயத்தில் உருத்திரனின் 100 திருநாமங்களுக்கு வணக்கம் கூறப்படுகின்றன இங்கே கூறப்படும் கணபதிக்கான வணக்கம் சிவபிரானையே குறிக்கின்றது எனவும் கொள்ளப்படுகிறது. ஐதரேய பிராமணத்தில் (1.21) விநாயகர் விக்கினங்களை ஏற்படுத்துபவராகவும் அவரை எளிதில் சாந்தப்படுத்தலாம் என்றும் குறிப்புக் காணப்படுகின்றது. தைத்திரிய ஆரண்யத்தில் கணேச காயத்திரி மந்திரம் விநாயகரைப் பின்வருமாறு அழைக்கின்றது. "தத் புருஷனாக விளங்கும் பெருமானை உபதேசப்படி அறிவோம். வளைந்த துதிக்கையுடைய அவரைத் தியானஞ் செய்வோம். இவ்விடத்திலே யானை முகப் பெருமான் எங்களின் புத்தி சக்திகளைத் தூண்டிவிடுவாராக."

உபநிடதங்களும் விநாயகர் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. அதிர்வாசிரஸ் உபநிடதம் விநாயகரை உருத்திரனுடன் அடையாளம் கண்டுள்ளது. கணபதி உபநிடதம் விநாயகரைப் பற்றி விரிவாக உரைக்கிறது. மேற்கூறிய குறிப்புகள் வேத, பிராமண, ஆரண்ய உபநிடதங்கள் ஆகியவற்றுள் காணப்பட்டாலும் தனித்துவம் வாய்ந்த தெய்வமாக இவ்வழிபாடு இவற்றுள் குறிப்பிடப்படவில்லை. கணபதியைச் சூத்திரரின் தெய்வமாக கூறும் மனுதர்ம சாஸ்திரம் சிவனைப் பிராமணர்களின் தெய்வம் என விழிக்கிறது.

இதிகாச புராணங்களில் கணபதி பற்றிய கதைகள் உள. இவரது அவதாரம், கஜமுக அசுரனைக் கொன்று உலகினைக் காப்பாற்றியமை, வியாசரின் வேண்டுகோளுக்கிணங்க மகாபாரதத்தை எழுதியமை ஆகியன காணப்பட்டாலும் சிலர் இதிகாசங்களில் காணப்படும் 'கணேச', 'கணேஸ்வரர்' போன்ற குறிப்புகள் சிவனுக்கும் பொருந்தும் எனவும் அபிப்பிராயப்படுகின்றனர். கி.மு. 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தியாவின் பண்டைய நாணயங்களாகிய முத்திரை நாணயங்களில் யானை, பிற மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றுடன் சித்தரிக்கப்படுவதை நோக்கும்போது பிற மிருகங்களைப் போன்று யானையும் வழிபாட்டு நெறியாக விளங்கியிருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. யானை முகத்தினையுடைய விநாயகரோடு இது தொடர்புபட்டுள்ளதோடு இந்திரன், முருகன், ஐயனார் போன்றோரின் வாகனமாகவும் இது சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே கஜலஷ்மி உருவங்களிலும் யானை முக்கியம் பெறுகிறது. யானை கூட மழை வளத்தின், பலத்தின் சின்னம் என்ற ஐதீகமும் உண்டு. யானை உருவம் பௌத்த தாது கோபுரத்திலும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. இதற்கான சான்றாக அமைவதுதான் கி.மு, 1ம் நூற்றாண்டுக்குரிய வடஇந்தியாவிலுள்ள காஞ்சி கோபுரத்தில் காணப்படும் சிற்பங்களாகும்.

மேற்கூறிய பின்னணியில் நோக்கும்போது மிருகங்களை வழிபடும் மரபு ஆதியானது என்றும் இவற்றுடன் தான் மனித உருவம் இணைந்து வழிபாடாக உருப்பெற்றிருக்கலாம் போலத் தெரிகிறது. இந்தியா, ஈழம் போன்ற நாடுகளில் உருவ வழிபாட்டின் எக்கசொச்சமாக விளங்குவது யக்ஷ, யக்ஷி உருவங்களாகும். இவற்றின் தோற்றம் கி.மு. 4ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதெனக் கொள்வர் அறிஞர். யக்ஷ என்றால் இராட்சதர், வெறுக்கத்தக்கவர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளில் இன்று இது நோக்கப்பட்டாலும் கூட ஆரம்பகாலத்தில் வணங்குதல், வணக்கத்துக்குரியவர், பூசிக்கத்தக்கவர் என்ற பொருளையே இது தந்துள்ளதென்றும் பிற்காலத்தில் தான் எதிர்மாறான கருத்தினை சுட்டி நின்றது எனவும் அறிஞர் கொள்வர். இத்தகைய மனித உருவங்கள் வழிபாட்டுப் பொருட்களாக வடஇந்தியாவின் பலபகுதிகளிலும் விளங்கியதை எடுத்துக்கூறும் ஆனந்தகுமாரசுவாமி விநாயகரின் உடலமைப்புக்கும் இவ் யக்ஷ உருவங்களுக்குமிடையேயும் இழைவிட்டோடும் தொடர்வினை எடுத்துக்காட்டி இவ் யக்ஷ உருவங்கள் தான் விநாயகரின் உடலமைப்புக்குப் பின்னணியாக விளங்கின எனவும் கூறியுள்ளார். இவ் யக்ஷ உருவங்களே கணங்கள் அல்லது பூதங்கள் என அழைக்கப்படுகின்றன. விநாயகர் மட்டுமன்றிப் பழைய இந்துக் கடவுளாரின் உருவங்கள் கூட ஆரம்பத்தில் யக்ஷ உருவங்களின் தோற்ற அமைப்பைப் பெற்றிருந்ததும் அவதானிக்கத்தக்கது. உதாரணமாக இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்திலுள்ள குடிமல்லத்திலுள்ள மிகப் பழைய சிவனுடன் கூடிய லிங்க உருவத்தில் காணப்படும் சிவனின் உருவத்திற்கூட யக்ஷ உருவங்களின் தோற்ற அமைப்பு உள்ளதை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

கி.பி. 2ம் நூற்றாண்டுக்குரிய ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதிச் சிற்பத்தில் கணங்களில் ஒன்று யானை முகத்துடன் காணப்படுவது ஆனந்த குமாரசுவாமியினால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே வடஇந்தியாவிலுள்ள மதுரைக் கலைக் கூடத்திற் கண்டெடுக்கப்பட்ட சிற்பத்திலும் யானை முகக்கடவுளின் யானை முகத்திலுள்ள தும்பிக்கை வளைந்து காணப்பட்டாலும் இதன் வலது பக்கத்தில் தந்தம் மட்டும் உளது. இச் சிற்பத்தில் எதுவித அணிகலன்கள் காணப்படாததும் இதன் பழையமையை எடுத்துரைக்கிறது எனலாம். எனினும் வடமேற்கிந்தியாவில் ஆட்சி செய்த கிரேக்க வம்சத்தவரால் வெளியிடப்பட்ட நாணயம் ஒன்றை எடுத்துகாட்டும் பேராசிரியர் நரையின் கி.மு. 1ம் நூற்றாண்டிலேயே இவ்வழிபாடு முதன்மை பெறத் தொடங்கியதை விளக்கியுள்ளார். இந் நாணயம் பிரித்தானிய நூதனசாலையில் உள்ளது. இதனை வெளியிட்ட மன்னனின் பெயர் கெமயூஸ் ஆகும். இதன் முன்பக்கத்தில் யானைமுகக் கடவுள் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் வலது கரம் அபய முத்திரை பாவனையிற் காணப்பட இடது கரம் செங்கோலுடன் (சூலத்துடன்) சித்தரிக்கப்பட்டுள்ளதோடு அவ்வுருவத்தைச் சுற்றிக் கரோஷ்டி மொழியில் வாசகமும் உளது. இதனால் கணேச வழிபாட்டின் மிகப்பழைய எச்சமாக இந்நாணயப் பொறிப்பு கொள்ளப்படுகிறது.

கி.பி. 4ம் நூற்றாண்டுக்குரிய சமுத்திரகுப்தனுடைய அலகபாத் கல்வெட்டில் 'கணபதி' என்ற பெயர் காணப்படுகிறது. இக்கல்வெட்டிற்குரிய குப்த பேரரசனாகிய சமுத்திரகுப்தன் கணபதிநாதன் என்ற அரசனை பூண்டோடு அழித்ததாகக் குறிப்பிடுகிறான். இதனால் கணபதி வழிபாட்டில் திளைத்திருந்ததால் இம்மன்னன் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. குப்தர் காலத்திற்குரிய விநாயகர் சிலைகளில் வட இந்தியாவில் உள்ள பூமார என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலை ஒன்று தனிரகமானது இதன் துதிக்கையின் நுனி முறிந்துள்ளது. மார்பு, கை, கழல், ஆகியவற்றில் மணிமாலைகள் உள. குப்தர் காலக் கோயில்களில் தசாவதாரக்கோயில் முக்கியமானது. இதன் காலம் கி.பி. 6ம் நூற்றாண்டாகும். இதனைப் பஞ்சயதனக் கோயில் என்பர். விநாயகர், பார்வதி, சிவன், விஷ்ணு, சூரியன் ஆகிய ஐவரது படிமங்களும் ஒரே கோயிலில் அமைக்கப்பட்டிருந்தால் இது இவ்வாறு பெயர் பெற்றது. இக் கோயிலின் கருவறையில் சிவனும் பிரகாரத்திலுள்ள நான்கு மூலைகளிலும் தனித்தனி மேடைகளில் விநாயகர், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய நான்கு கடவுளரும் காணப்படுகின்றனர். இதே ஆலயம் ஆகும். இதிலும் கணேசரது சிற்பங்கள் உள. கிழக்கிலும் தெற்கிலுமுள்ள சுவர்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன.

தக்கணத்திலும் கணேச சிலைகள் உள. சாளுக்கிய வம்சத்தவரால் எழுப்பப்பட்ட கோயில்களில் சப்த மாதர்களுடன் அவர்களது இடதுபக்க எல்லையில் விநாயகரது சிலை காணப்படுகின்றது. இம் மன்னர்களது தலைநகரான வாதாபியில் உள்ள சைவக் கோயில் ஒன்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே தூண்கள் நிறைந்த மண்டபத்திற்கு இடது புறம் காணப்படும் ஓவியமான சிவதாண்டவத்திற்கு அருகில் கணேசரது வடிவம் காணப்படுகிறது இவ்வாறே இப்பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற எல்லோராக் குகைக்கோயில்களிலும் சப்த மாதர்களுடன் இணைந்து கணபதி சிற்பங்கள் உள. இன்றும் இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்திற்றான் கணபதி வழிபாடு பிரபல்யமான வழிபாட்டு நெறியாக மிளிர்கிறது. கணபதிக்குரிய சிறந்த ஆவணிச் சதுர்த்தித் திருவிழா இங்கு தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. காணபத்தியம் பற்றி மிக விரிவான நூல் "கணேசகோசம்" என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் இயற்றிய பஞ்சரத்தினம் என்ற நூலில் கணேசர் பற்றிய ஐந்து சுலோகங்கள் உள. அவையாவன

1. இத் தெய்வத்தின் கையில் மோதகம் இருக்கிறது. தம்மை அண்டியவர்களுக்கு இவர் மோதகத்தை அருளுகிறார், சந்தரனுடைய பிறையைச் சூடியுள்ளார், உலகத்தைக் காத்து நிற்பவர், தனக்குத் தலைவனின்றித் தானே தலைவராக விளங்குபவர் கஜமுகனை அழித்தவர், தன்னை வழிபடுபவருக்கு விரைவில் பலனளிக்கிறார்.
2. தன்னை வணங்காதவருக்குப் பயத்தைக் கொடுக்கிறார். உதிக்கும் இளஞ்சூரியனின் கிரணங்களையுடையவர், தன்னை வணங்குபவரை ஆபத்திலிருந்து காப்பவர், பக்தர்களின் பொக்கிஷம், சிறந்த யானை வடிவுடையவர், பிரதம கணங்களின் தலைவர், ஒப்பற்ற தலைவன்.
3. இவர் எல்லா உலகங்களுக்கும் நன்மை பயப்பவர். கஜமுகனைச் சங்கரித்தவர். சகல உலகங்களையும் தன்வயிற்றுள் வைத்துக் காப்பாற்றுவதால் பெருத்த வயிறு படைத்தவர். சிறந்த யானை முகத்தையுடையவர். கருணை புரிபவர். பொறுமை மிக்கவர். சந்தோஷத்தைப் பெருக்குபவர், புகழைத் தருபவர்.
4. தன்னை வழிபடுபவரின் பீடைகளை ஒழிப்பவர். ஆநாதியான வேதவாக்கியங்களால் துதிக்கப்படும் பெருமையுடையவர். முப்புரங்களை அழித்த சிவபெருமானின் புதல்வர்.
5. மிக அழகிய சாந்தி வீசும் பற்களின் சோபையையுடையவர். யமனுக்கும் யமனான பரமேஸ்வரரின் புத்திரன். மனதினாலும் நினைக்கமுடியாத சக்தியுடையவர். பக்தர்களின் சகல விக்கினங்களையும் அழிப்பவர். யோகிகளது இருதயத்தில் நிரந்தரமாக வசிப்பவர். ஒப்பற்ற ஒற்றைக் கொம்பையுடைய விநாயகர் ஒருவரையே இடையறாது சிந்திக்கிறேன்.

தமிழ் நாட்டில் கணபதி வழிபாட்டின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள. பல்லவர் காலத்தின் தான் (கி.பி 6ம் நூற்றாண்டில்) இவ்வழிபாடு தமிழகத்தில் ஆரம்பமானது என்று கருதி இதற்கான சான்றுகளையும் சிலர் நிரைப்படுத்தியுள்ளனர்.

எனினும் சில அறிஞர்கள் இவ்வழிபாட்டின் தோற்றத்தைக் கிறீஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள நிகழ்ச்சி எனக் கொள்வர். இவர்களில் வரலாற்றறிஞரான சுப்பிரமணியன் சங்க இலக்கியங்களில் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் காணப்படாவிட்டாலும் விநாயகர் வழிபாட்டின் யக்ஷ உருவ அமைப்புப் பின்னணியை மையமாகக் கொண்டு தமிழகத்தில் வழக்கிலிருந்த பூத (கணங்களின்) வழிபாட்டில் விநாயக வழிபாட்டின் தோற்றத்தினை இனங்காண முயல்கின்றார். சேர நாட்டின் தலைநகரான வஞ்சியில் காணப்பட்ட பெருச்சதுக்கத்துப் பூதந்தான் இவ்வழிபாட்டைக் குறிக்கிறது என்பதும் இவரது கருத்தாகும். பெரும்பாலும் சந்திகளில் இப்பூதம் வழிபட்டதால் பூதநாதன் எனவும் இது அழைக்கப்பட்டது. விநாயகரின் நாமங்களில் ஒன்றாகிய் கணநாதன் என்பதும் இப்பதத்தின் பொருளைத் தந்து நிற்பது குறிப்பிடத்தக்கது. சங்ககாலப் புலவர்களில் ஒருவர் "பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்" எனவும் பெயர் பெற்றிருந்தமை அவதானிக்கத்தக்கது. சங்க நூல்களில் 'கணபதி', 'பூதநாதன்' போன்ற பதங்கள் காணப்படாவிட்டாலும் கூட பிற்காலத்தில் விநாயக வழிபாட்டம்சங்களைக் கொண்ட கடவுள் பற்றிய குறிப்புக் காணப்படுவதால் இக்காலத்தில் விநாயக வழிபாடு தமிழகத்தில் நிலவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதனை உறுதிப்படுத்துவதற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய புறநானூற்றில் எருக்கலம் பற்றி வரும் குறிப்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தேவாரத்திற் கூடச் சிவனின் சடாமுடியிற் காணப்படும் எருக்கலம் பூ பற்றிய குறிப்புள்ளது. கம்பராமாயணத்திலும் 'சிவன்' வெள்ளெருக்கம் சடை முடியோன் எனக் குறிப்பிடப்படுகிறான். ஆனால் எருக்கலம் பூ சிவனுக்கும், கணபதிக்கும் மிகவும் பிரியமானவை எனக் கருதப்படுகிறது. கணேச ஆகமத்திற் கூட கணபதியை மந்திரங்களை உபாசித்துப் பிரதிஷ்டை செய்யாவிட்டாலுங் கூட வெள்ளெருக்கம் மரத்தின் வேரில் உறைகிறான் என்றும் இவனை இவ்வாறு உபாசிப்பதின் மூலம் ஒருவன் பெரிய புண்ணியத்தைத் தேடிக் கொள்கிறான் என்றும் கூறப்படுகிறது. எருக்கலம் மலரில் அன்றி எருக்கலம் வேரிலும் கணபதி உறைகிறான் என்ற ஐதீகம் காணப்படுகிறது. எருக்கலம் வேரிலிருந்து உருவாக்கப்பட்ட பிள்ளையார் "வெள்ளைப் பிள்ளையார்" என்று அழைக்கப்பட்டார்.

சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய புறநானூற்றில் கபிலரால் பாடப்பட்ட பாடலொன்றில் (106ம் பாடல்) எருக்கலம் பற்றிய குறிப்புள்ளது. இப்பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

"நல்லவுந் தீயவுமல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கு மாயினு முடையவை
கடவுள் பேனே மென்னா வாங்கு
மடவர் மெல்லியா செல்லினும்
கடவன் பாரி கை வண்ணமே"

இப்பாடல் எருக்கலம் பூவைக் கடவுள் ஏற்கும் மலராக குறிப்பிடுகிறது. கணபதிக்கு ஏற்புடைய மலராகவும் இலையாகவும் எருக்கலம் விளங்குவதால் இதில் கணபதி என்ற குறிப்பு இடம்பெறாவிட்டாலும் 'கடவுள்' என்ற பதம் கணபதியையே சுட்டி நிற்கின்றது எனக் கூறப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் பூத வழிபாட்டின் பின்னணியிலும், வடக்கே மதுரை தெற்கே அமராவதி ஆகிய இடங்களிலுள்ள கலைச்சின்னங்களில் யானைமுகக் கடவுளின் தோற்றம் காணப்படுவதாலும் கிறீஸ்தாப்த காலத்திலேயே கணபதி வழிபாடு தமிழகத்தில் நிலவியிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. இதனை உறுதிப்படுத்துவதாக அமைவது தான் ஈழத்தின் பழைய தாதுகோபுரங்களில் ஒன்றாகிய கண்டக சேத்தியத்தின் அலங்காரப் பொருளாக விளங்கும் யானைமுகக் கடவுளின் சிற்பமாகும். இதன் காலம் கி.மு. 1ம் நூற்றாண்டு எனக் கொள்ளப்படுகிறது. இச் சிற்பத்தொகுதியில் பல்வேறு பாவனைகளில் கணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குதிரை, பன்றி ஆகியவற்றுடன் யானை முகத்துடன் காணப்படும் சிற்பத்தைக் கணபதியின் சிற்பமே எனலாம். இருகரங்களுடன் கூடிய தும்பிக்கையுடன் காணப்படும் இச்சிற்பம் கணபதியையே குறிக்கிறது என எல்லாவெல இனங்கண்டுள்ளார். அத்துடன் ஈழத்திலும், இந்தியாவைப்போல் யானை மிகப் பழைய நாணயங்களான முத்திரை நாணயங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி சுடுமண்பாவைகளிலும் காணப்படுகிறது. அத்துடன் கி.மு. 3/2ஆம் நூற்றாண்டுக்குரிய ஈழத்தின் மிகப்பழைய கல்வெட்டாகிய பிராமிக் கல்வெட்டொன்றில் கணபதி பற்றிய குறிப்புள்ளது. இக் கல்வெட்டு அநுராதபுர மாவட்டத்திலுள்ள வனசிம்ஹ விகாரையிலுள்ளது. இதில் 'கணஸ லெணெ ஸகஸ' என்ற குறிப்புக் காணப்படுகிறது. இதனைக் கணபதி வழிபாட்டில் திழைத்த ஒருவன் வழங்கப்பட்ட குகைத்தானமாகக் கொள்வதில் தவறில்லை. காரணம் ஈழத்திலுள்ள இதே பிராமிக் கல்வெட்டுகளில் சிவன், முருகன், உமை, விஷ்ணு, லஷ்மி ஆகியோரது வழிபாட்டில் திளைத்திருந்தோர் இத்தெய்வங்களுக்குரிய பெயரைச் சூடியிருந்ததை நாக்கும்போது கணபதி வழிபாடும் இந்தியா, ஈழம், ஆகிய பகுதிகளில் கிறீஸ்தாப்த காலத்திலேயே வழக்கில் காணப்பட்டது எனலாம்.

சிலப்பதிகாரத்தில் சிவபெருமான், முருகன், பலராமன், திருமால், இந்திரன், கொற்றவை, கதிரவன் போன்ற கடவுளர் பற்றிக் குறிப்புகள் காணப்பட்டாலும் விநாயகர் பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. ஆனால் விநாயகர் பற்றிய செய்திகள் திருமுறைகளில் குறிப்பாக அப்பர், சம்பந்தர் தேவாரங்களில் கிடைக்கின்றன. இவர்களில் காலம் கி.பி. 7ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் தொடக்கமாகும். இவர்களது பாடல்களில் விநாயகரின் தோற்றம் பற்றிய செய்திகள் உள. ஆண், பெண், யானை வடிவங்களை முறையே எடுத்த சிவன், பார்வதி ஆகியோரது மகனே விநாயகர் என்று இரண்டு பதிகங்களில் சம்பந்தர் விளங்குகிறார். சிவபெருமானைப் பற்றி கூறும்போது விநாயகரின் தந்தை என்பதை 'தந்த மதத்தவன் தாதை', 'மருப்புறுவன் தாதை', 'கரியின் மாமுகமுடைய கணபதி தாதை' போன்ற அடைமொழிகள் சம்பந்தரின் தேவாரத்தில் காணப்படுகின்றன.

திருநாவுக்கரசர் தேவாரத்திலும் 'கைவேழ முகத்தவனைப் படைத்தவர்', 'விநாயகர் தோற்றங்கண்டேன்', 'ஆனைமுகத்திற்கு அப்பன்', 'கணபதி என்னும் களிறு' போன்ற தொடர்கள் காணப்படுகின்றன. சுந்தரரின் தேவாரத்திலும் கணபதி 'எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்', 'கணபதியேல் வயிறு உதாரி' போன்ற அடிகள் உள. திருமந்திரத்தில் 'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை...' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துக் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் காணப்படும் மிகப்பழைய விநாயகர் சிற்பங்கள் பல்லவர் - பாண்டியர் - முத்தரையர் ஆகியோர் அமைத்த குடைவரைக் கோயில்களில் காணப்படுகின்றன. மாமல்லபுரத்திலமைந்த இராமாநுஜர் குடைவரைக் கோயிலுள்ள பூதகண வரிசையில் கணபதி இடம்பெற்றுள்ளார். இத்தகைய யானைமுகக் கணங்கள் இவ்விடத்திலுள்ள தர்மராஜர் ரதத்திலும் காணப்படுகின்றன. பல்லவ மன்னன் இராஜசிம்மன் அமைத்த கடற்கரைக் கோயிலிலும் கூடுகளில் கணபதி சித்தரிக்கப்பட்டுள்ளார். இதைவிடக் கணபதியின் உருவங்கள் சிராப்பள்ளி, வல்லம், குன்றக்குடி, அரிட்டாபட்டி, காஞ்சிபுரம், மலையடிப்பட்டி, திருக்கோலக்குடி, செவல்பட்டி, பிள்ளையார்பட்டி ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன.

சோழர்களது காலத்து இலக்கியங்களிலும் விநாயகர் பலவாறு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளார். சேக்கிழாரின் பெரியபுராணம், கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி போன்றவற்றுள் பலவாறு செய்திகள் காணப்படுவதோடு, மெய்கண்ட சாத்திரங்களிலும் விநாயகர் காப்புச் செய்யுளில் போற்றப்பட்டுள்ளார்.

உதாரணமாகச் சிவஞானபோதம்

'கல்லார் மலையின் வில்லார் அருளிய பொல்லார்'
எனக்கூறத்

திருவருட்பயன்

'நற்குஞ் சரக்கன்று கண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்' எனக்கூற

சிவப்பிரகாசம்

'ஒளியான திருமேனி யுமிழ் தான மிகமேவு
களியார வருமானை கழனாளு மறவாம
வளியாளு மலர் தூவு மடியார்களுமான
வெளியாரும் வலிதாய வினைகூட தநினையாமே
என விளிக்கிறது.

சோழர் காலத்திற்குரிய கோயில்களிலும் தேவகோட்டத்தில் விநாயகர் இடம்பெற்றுள்ளதோடு பரிவாரத் தெய்வமாகவும் விநாயகருக்குத் தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. விநாயகரின் பல்வேறு வடிவங்கள் கல், செம்பு ஆகிய பொருட்களில் சோழர் காலச் சிற்பங்களால் உருவாக்கப்பெற்றன. விஜயநகர நாயக்கர் காலங்களிலும், கல்லிலும், செம்பிலும் விநாயகரின் பல்வேறு வடிவங்கள் ஆக்கப்பெற்றன.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இந்தியாவில் விநாயக வழிபாடு மிகப் பழைமையானது. இதன் ஆரம்பத்தைச் சிந்துவெளி நாகரிகத்தில் காணலாம். தொடர்ந்து வேதங்களிலும் உபநிடதங்களிலும் குறிப்புகள் உள. கிறிஸ்தாப்த காலத்திலிருந்தே விநாயகர் வழிபாடு பற்றிய விரிவான தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன. வட நாட்டில் குப்தர் காலக் கோயில்களில் விநாயகர் சித்தரிக்கப்படுவது போன்று தமிழகத்தில் பல்லவர் - பாண்டியர் - முத்தரையர் அமைத்த குடைவரைக்கோயில்களில் விநாயகர் சிற்பம் காணப்படுகின்றது. சோழர் காலத்தில் பரிவார தெய்வமாக விநாயகர் இடம்பெற்றுள்ளார். திருமுறைகளில் மட்டுமன்றி மெய்கண்ட சாத்திரங்களிலும் விநாயகர் போற்றப்பட்டுள்ளார். சோழரைத் தொடர்ந்து விஜயநகர நாயக்க மன்னர் காலத்திலும் விநாயகர் இலக்கியங்களில் மட்டுமன்றி ஆலயங்களிலும் பல்வேறு மூர்த்தங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைகளும் நூல்களும்


1. சிவசாமி. வி. காணபத்தியம் - வரலாறும் சிறப்பும் குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேக, சங்காபிஷேக மலர் - 1973

2. கைலாசநாதக் குருக்கள். கா. 'கணபதி' திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர், திருநெல்வேலி - 1998

3. சிற்றம்பலம் சி. க. ஈழத்து இந்துசமய வரலாறு - பாகம் I
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி) - 1996

4. ஏகாம்பரநாதன். ஏ. கோயிலும் இறை வழிபாடும் (சென்னை) - 1986

5. Narain, A.K. "On the earliest Ganesa" Senarat Paranavitana Commenoration Volume (ed) Prematilleka Leelananda et.al. (leiden) – 1978 Pages 142 – 144

6. Paranavitana. S. "Pre – Buddhist Religious Beliefs in Ceylon'. J.R.A-S Vol XXXI. No. 82 1929 Pages 302 – 327

7. Paranvitana. S. Inscriptions of Ceylon Vol I. Brahmi Inscriptions (Colombo) 1970 In No. 201.


8. Sitrampalam, S.K. 'The Brahmi Inscriptions as a source for the study of Puranic Hinduism in Ancient Sri Lanka' Ancient Ceylon, Vol I No. 1990.

9. Ellawala. H Social History of Early Ceylon (Colombo) 1969 page 169.

10. Majumdar R.C. The Vedic Age (lond) 1957

11. Alice Getty – Ganesa - (Oxford) 1936

12. Coomaraswamy. Ananda. Yaksas (Delhi) 1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விநாயகர் தத்துவம்

கலாநிதி மா. வேதநாதன், M.A., Ph.D,
தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விநாயகர் என்றால் தனக்கு மேலான தலைவர் இல்லாதவர் என்பது பொருளாகும். இவர் இடையூறுகளை நீக்குபவராகவும், இடையூறுகளின் தலைவராகவும் (விக்னராஜா) விளங்குகின்றார்.

எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் போதும் அதற்கு இடர் வராமல் இருப்பதற்காக முதல் வணங்கும் கடவுள் விநாயகர் ஆவார். விநாயகரைக் கணபதி என்று ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுகிறார். கணங்களில் தலைவர் என்பது இதன் அர்த்தமாகும். கணபதியை உயர் தெய்வமாக வழிபடும் சமயம் காணபத்தியமாகும். கணபதியைப் பரம்பொருளாகக் கொள்வோர் தாம் விநாயக வழிபாட்டினர் என்பதைக் குறிக்கத் தமது நெற்றியில் ஒரு சிவப்பு வட்டமிடுவர். இவ்வாறான உயர் பரம்பொருளாக விளங்கும் விநாயகர் பற்றி தத்துவ நோக்கில் இக்கட்டுரை விளக்குகின்றது.

மும்மூர்த்திகளின் முதல்வராக விநாயகர் போற்றப்படுகின்றார். "நீயே பிரம்மா! நீயே விஷ்ணு! நீயே உருத்திரன்! நீயே மும்மூர்த்திகளிலும் மேம்பட்டவன்" என்பது கணபதியின் பிரதான தோத்திரமாகும்.

விநாயகர், பிரணவத்தின் வடிவமாக விளங்குகின்றார். இதனையே ஔவையாரும் "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்பர். துதிக்கையுடன் கூடிய அவரின் திருமுகம் அவர் ஓங்கார மூர்த்தி என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது. ஓம் என்னும் ஓங்காரத்துள் அ, உ, ம் என்னும் மூன்று எழுத்துக்கள் உள்ளன. இதில் "அ" பிரம்மாவையும், "உ" விஷ்ணுவையும், "ம்" சிவனையும் குறிப்பதாகக் கூறப்படும். இதனால் விநாயகர் மும்மூர்த்திகளின் வடிவம் என்பது விளக்கம் பெறுகின்றது. மேலும் ஓம் என்பதனை "உ" என்று எழுதும் வழக்கமும் உண்டு. இதனைப் பிள்ளையார் சுழி என்பர். இதிலுள்ள வட்டம் விந்துவையும் நீண்ட கோடு நாதத்தையும் குறித்து நிற்கும். இதனால் சிவசக்தி வடிவமே விநாயகர் என்பது பெறப்படும்.

விநாயகர் ஐந்தொழில் புரிகின்றவர் என்பது அவரது கரங்களில் காணப்படும் பொருட்களைக் கொண்டு அறியலாம். அவர் ஏந்தியுள்ள பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், மோதகம் அருளலையும், துதிக்கை மறைத்தலையும் குறிக்கும். துதிக்கை முத்தொழிலைக் குறிக்குமென்று கூறப்படும். வைச சித்தாந்த நோக்கில் சிவன் ஐந்தொழில், முத்தொழில் என்பவற்றைப் புரிபவர் போன்று விநாயகரும் ஐந்தொழிலும் முத்தொழிலும் புரிபவர் என்பது அவரது உருவத்தால் தெரிய வருகின்றது.

சிவபெருமான் ஐந்து திருமுகங்களுடன் விளங்குவது போலவே விநாயகரும் பஞ்சமுக விநாயகராகக் காட்சி தருகின்றார். விநாயகரின் திருவுருவத்திலே யானைத்தலை விலங்கு உருவத்தையும், இரு கால் மனித உருவத்தையும், நான்கு கரங்கள் தேவ உருவத்தையும் கட்டி நிற்பதால் விநாயகர், விலங்காய், மனிதராய், தேவராய் விளங்குகின்றார் என்னும் தத்துவம் புரிகின்றது.

விநாயகர் மனித உடலின் மூலாதாரத்தில் வீற்றிருக்கின்றார். இதனால் விநாயகரைக் குண்டலினி சக்தி என்றும் நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவதையே எமது ஆலயங்களின் கொடிமரத்துக்கு அடியிற் காணப்படும் ஸ்தம்பத்துப் பிள்ளையார் உருவம் கட்டி நிற்கின்றது. உடம்பின் மூலாதார சக்திக்கு யானைமுக வடிவமளித்து அதனை விநாயகர் எனக் குறிப்பிடுவது நோக்குதற்குரியதாகும். பரநாதமும், பரவிந்துவுமாகிய பரமசிவமும், பராசக்தியும் கலக்குமிடமே மூலாதாரம் ஆகும். அங்கு பிரணவ நாதம் விநாயகர் உருவில் தோன்றி ஒலிக்கும். மகா பஞ்சகிருத்தியத்தின் ஆரம்பமும், உலகுயிர்களின் தோற்றத்தின் தொடக்கமும் இதுவேயாகும்.

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங்களில் ஆவணிச் சதுர்த்தியும் மாசிச் சங்கட சதுர்த்தியும் மிகவும் விசேடமானவையாகும். குற்றம் செய்தவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போகமோட்சங்களை விநாயகர் அளிப்பவர் என்பதே ஆவணிமாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்.

விநாயகரை அறுகு மற்றும் மந்தாரம், வன்னி என்பவற்றாலும் அர்ச்சிக்கலாம். ஓர் அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்ததால் இடபம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோக முத்தி கிடைத்ததாக விநாயக புராணம் குறிப்பிடப்படுகின்றது. எனவே விநாயகரை அறுகம்புல் கொண்டு வழிபட்டால் ஆன்மாக்கள் கிடைத்ததற்கரிய முத்தியைப் பெறுவர் என்னும் தத்துவம் தெரிகின்றது.

விநாயகரும் சிவனைப்போன்றே மூன்று கண்களை உடையராக விளங்கும் இயல்பினராவர். உச்சிஸ்ட கணபதி, ஏரம்ப கணபதி, ஏகாஷரகணபதி, வரகணபதி, சர்வசக்திகணபதி ஆகிய திருக்கோலங்களில் விநாயகர் முக்கண்ணராக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். இது விநாயகர் இரவு, பகல் மற்றும் எல்லா நேரங்களிலும் எல்லாம் அறிபவர் என்கின்ற கடவுட் தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது.

விநாயகர் ஞானக் கடவுளாவார். இதன் காரணமாகவே ஒருவருக்கு வித்தியாரம்பம் செய்யும் போது முதலில் விநாயகரை வழிபட்டே செய்வதும் மரபாக உள்ளது. திருமூலனுடைய திருமந்திரத்தில் வரும் "நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை" என வரும் அடிகள் விநாயகரை அறிவுத் தெய்வமாகக் குறிப்பிடுவதும் நோக்கற்பாலதாகும்.

இவ்வாறாக விநாயகர் உயரிய த்த்துவங்கள் பலவற்றைப் புலப்படுத்தி நிற்கும் ஞானக் கடவுளாக வித்தக விநாயகராக தொன்றுதொட்டு இன்றுவரை இந்துக்களால் வணங்கப்படுகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமுக விநாயகர்

எஸ். கே. நடராஜா, பொறியியலாளர்

'விநாயகர்' என்றால் தனக்கு மேலான தலைவர் இல்லாதவர் என்பது பொருள். வி - மேலான, நாயகர் - தலைவர், விநாயகப் பெருமான் பிரணவப் பொருளாய் விளங்குகின்றார். அவரது திருமேனி ஞானமேயாம். அதனால் அவரை 'பிரணவப் பொருளாம் பெருந்தகையைங்கரன், என்றும் "ஞான முதல்வன்" "ஞானக் கொழுந்து" என்றும் நூல்கள் போற்றுகின்றன.

(இவர் இடையூறுகளை நீக்குபவராகவும், இடையூறுகளின் தலைவராகவும் (விக்னராஜா) விளங்குகின்றார்.)

யானைமுகம் ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தைக் குறிப்பது, ஓம் - அ - உ -ம் ஒருமுறை உச்சரித்த மாத்திரையே உயர்ந்த கதியிற் சேர்ப்பதால் ஓங்காரமெனப்படும். எல்லா பிராணன்களையும் (உயிர்களையும்) இறைவனிடம் சேர்ப்பிப்பதால் பிரணவம் எனப்படும். பிரணவம் வியட்டி, சமட்டி என இருவகைப்படும். வியட்டி, அகர, உகர மரங்களாகும். சமட்டி அம் மூன்றுஞ் சேர்ந்து ஓம் என்பதாகும். உலகங்களாகிய சராசரிப் பிரபஞ்சங்களெல்லாம் அவ்மூவகையினடங்கும். அதன்கண் அடங்காதது ஒன்றுமில்லை. எனவே, பிரணவத்தின் எல்லாமடங்கும். பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுளே பரப்பிரமமாகவும் விளங்குகின்றார்.

சைவசமயம் சிவபெருமான் ஒருவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. எனவே, சிவபெருமானே, விநாயகக் கடவுளாக எழுந்தருளியிருக்கிறார் என்பது கருத்து. "ஏகப்பராத்மா பகுதேக வர்த்தி" என்னும் வேதம். அதாவது பராத்மா ஒருவர் திருமேனிகள் பல. இதையே "யச்சமகேச்வர; யாசோமர் யச்ச விநாயக யச்ச ஸ்கந்த" என்று சொல்கிறது. அவனே மகேசுபரன் ; அவனே உமை; அவனே விநாயகர், அவனே ஸ்கந்தர். மேலும்,

"ஒருமையால் உணருவோர் உணர்வினுக் குணர்வதாம்
பெருமையால் எங்கணும் பிரிவரும் பெற்றியால்
அருமையால் ஏவரும் அடிதெழும் தன்மையால்
இருமையாம் ஈசனே என்ற நின்றருளுவான்"

என்னும் கந்தபுராணச் செய்யுளின்படியும்,

'.................. .......... சங்கரா குலபாணியே
தாணுவே சிவனே
கனகநற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமர சேகரனே"

என்னும் திருவிசைப்பாவின்படியும் விநாயகக் கடவுள் சிவக் கடவுளேயெனத் தெளிவாகிறது.

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் பத்துத் திருக்கரங்கள், பதினைந்து திருக்கண்கள், ஐம்முகக் கடவுள் என்றால் சிறப்பாகச் சிவபெருமானையும் ஐங்கரக் கடவுள் என்றால் விநாயகரையுமே குறிக்கும். ஆனால் விநாயக சிவ அபேதப்படி விநாயகர் ஐந்து திருமுகங் கொண்டருளும் போது பஞ்சமுக விநாயகர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார். பஞ்சமுக விநாயகருக்கு தனியாகப் பத்துத் திருக்கரங்களும் ஐந்து துதிக்கைகளோடு சேர்ந்து பதினைந்து திருக்கண்களும் உண்டு. அபய வரத கரங்களோடு பாசம், அங்குசம் முதலியனவும் மும்மூர்த்திகளின் ஆயுதங்களையும் தரித்திருக்கின்றார். பஞ்சமுக விநாயகரின் தோற்றத்திற்கு ஒரு கதையுண்டு.

திருபுராசுரனால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட சிவபெருமான் யுத்தத்திற்கு முதலில் விநாயகரைத் தியானஞ் செய்கிறார். விநாயகர் சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றி பஞ்சமுக விநாயகராகக் காட்சியளிக்கின்றார். சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருபுராசுரனை அழித்தார். இக்கதை விநாயக புராணத்தில் காணப்படுகின்றது.

விநாயக பெருமானது சகஸ்ர நாமஸ் தோத்திரத்திலே "பஞ்சகராய, பஞ்சாட்ச, ராத்மாய, பஞ்சதாலய, பஞ்சவர்ணாய, பஞ்சப்ராணக மாத்ராய, பஞ்சபாணாய, பஞ்சபாணி நிவாரிதாய, பஞ்சக்ருத்யாய, பஞ்சாஷரபாராயணாய, பஞ்சசிவாத்மகாய, பஞ்சபட்சிபரியாய, பஞ்சாதாராய்', என்று வருவது கவனித்தற்குரியது.

ஐந்தொழிலைச் செய்கின்றவரும், ஐம்பொறிகளையும் அடக்கி ஐந்தெழுத்தை யோதும் அன்பர்களை ஆள்கின்றவரும், ஐந்து மூர்த்திகளுக்கும் அதிபரான பரம்பொருள் தாமே என்பதைக் குறிப்பதாக பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமையும்

மேலும்,

எமது உடலின் ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்திற்கு அதிதேவதை விநாயகர். குய்யத்திற்கும் குத்தத்திற்கும் நடுவில் குண்டலினி என்னுஞ் சக்தி வட்டவடிவமாக இருக்கும். அதன் நடுவில் முக்கோணம் இருக்கும். அதில் வ,ச, ஷ, ஸ, என்னும் நாலிதழ்க் கமலம் இருக்கும் அதன் நடுவில் ஓம் என்னும் பிரணவம் இருக்கும். இவ்வைந்தின் அமைப்பே பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் என்றும் அமையும். நான்கு எழுத்துக்களும் நான்கு திருமுகங்களாகவும் உச்சிமுகம் ஓம் என்னும் எழுத்தாகவும் அமைந்துள்ளது போன்று பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் காணப்படுகின்றது. மேலும்,

விநாயகக் கடவுள் பிரணலவஸ்வ ரூபி என்று முன்பு கூறப்பட்டது. பிரணவ முத்திகாமிகளால் தியானிக்கப்படுமொன்று, அது ..........

.........."அஷ்டாங்கஞ்ச சதுஷ்பாதம் திருஸ்தானம் பஞ்சதைவதம்" என்ற தேவ வசனப்படி பிரணவம் எட்டு அம்சங்களையும் மூன்று தானங்களையும் ஐந்து தேவதைகளையுமுடையது. இதன்படிக்கு பிரணவ தேவதைகளைந்தும் விநாயகருக்கு பஞ்ச முகங்களாக அமைந்து பஞ்சமுக விநாயரராகக் காட்சி தருவது நாம் செய்த பாக்கியமே. ஆதலால் பஞ்ச பொறிகளின் வயப்பட்டு பஞ்சமாபாதங்களையுஞ் செய்யாது பஞ்ச பூதங்களின் சேர்க்கையான இந்த உடம்பின் பற்றை விடுத்து பஞ்ச புலங்களையுமடக்கி பஞ்ச தொழிலினிற்கு அதிபரும் பஞ்சாஷத்தின் உட்பொருளாய் விளங்கும் பிரணவப் பொருளாய் விளங்குகின்ற பஞ்சமுக விநாயகரின் பாதங்களைத் தஞ்சமடைபவர் பெறுவதும் பதமுத்தியாகிய பேரின்பவீடாம்.

பிள்ளையாரைக் குறித்து வழிபாடு செய்யும் சோடச நாமம் எனப்படும் பதினாறு திருப்பெயர்களும், அவற்றின் பொருளும் பின்வருமாறு

**பதினாறு திருப்பெயர்கள்**

1. ஓம் சமுகாய நம
2. ஓம் ஏகதந்தாய நம
3. ஓம் கபிலாய நம
4. ஓம் சஜகர்ணிகாய நம
5. ஓம் லம்போதராய நம
6. ஓம் விகடாய நம
7. ஓம் விக்கினராஜாரா நம
8. ஓம் கணாதிபதயே நம
9. ஓம் தூ மகேதவே நம
10. ஓம் கனாத்யசஷாய நம
11. ஓம் பாலசந்த்ராய நம
12. ஓம் கஜானனாய நம
13. ஓம் வக்ரதுண்டாய நம
14. ஓம் சூர்ப்பகர்ணாய நம
15. ஓம் ஹேரம்பாய நம
16. ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம

**1. ஓம் சுமுகாய நம :**

திருவருள் பொழியும் நல்ல முகமுடையவருக்கு வணக்கம்

**2. ஓம் ஏகதந்தாய நம :**

ஏகசந்தர் - அகில புவனங்களுக்கும் ஒரே தலைவர் எனக் குறிக்கும் ஒற்றைத்தந்தம் உடையவர்

**3. ஓம் கபிலாய நம :**

கபிலர் - சிவமும் சிவசக்தியும் பேதமறப் பொருந்திய தன்மையை விளக்கும் கருமை கலந்த பொன் வண்ணம் உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. ஓம் கஜகர்ணிகாய நம :**

கஜகர்ண - யானையின் செவிகள் ஓயாது அசைந்து கொண்டே இருப்பன. அகில சீவராசிகளின் துன்பங்களையெல்லாம் துடைப்பனவாக அமைந்தயானைத் திருச் செவிகளை உடையவர்.

**5. ஓம் லம்போதராய நம :**

லம்ப - உதரன் - லம்போதரன் - தளர்ந்த பெருவயிற்றை உடையவன். அகில சீவராசிகளையும் தமது திருவயிற்றில் கொண்டமையால் தளர்ந்த பேழை வயிற்றினை உடையவர்.

**6. ஓம் விகடாய நம :**

விகடம் - பகிடி, அழகு எனப் பொருள்படும். ஆன்மாக்களின் இன்பமயமான விகடக் கூத்தை விரும்பும் பெருமான். இனி வி-கடம் எனப் பிரித்து (வி-அறிவு கடம் - அருள்நெறி) ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை நீக்கி அறிவுமயமான ஞான அருள் நெறியைப் பரப்புவர் எனவும் பொருள் கொள்ளலாம்.

**7. ஓம் விக்கினராஜாய நம :**

விக்கினராஜர் - இடையூறுகளை, ஆளும் அரசராகி, ஆன்மாக்களுக்கு அவரவர் வினைப்பயன்களுக்கேற்ப இடையூறுகளை ஆக்கவும், போக்கவும் வல்லபமுடையவர். "தனதடி வழிபடும் அவரிடம் கடிகணபதி" என்பது தேவாரம்

**8. ஓம் கணாதிபதயே நம :**

சிவகணங்களுக்கெல்லாம் அதிபதியானவர்

**9. ஓம் தூ மகேதவே நம:**

தூபம் - புகை, கேது - கொடி. புகைக்கொடியை உடைய அக்கினியின் சொருபரான மகாதேவர் சிவபிரானும் விநாயகரும் தம்முள் அபேதமானவர் என்பது இதனாலும் பெறப்படுகின்றது.

**10. ஓம் கணாத்யசக்ஷ நம :**

சிவ கணங்களை வழி நடத்தும் தலைவரானவர்.

**11. ஓம் பாலச்சந்த்ராய நம :**

(பாலம் - நெற்றி) சாட்சாத் சிவபரம பொருளை விநாயக மூர்த்தமாதலின் சிவபெருமானைப் போல நெற்றியில் பிறை சூடியவர் என்பது ஒரு பொருள். இனி, பாலன் - சிறுவன் எனக்கொண்டு விநாயகப் பெருமான் பிராமணச் சிறுவனாகத் தோன்றி எல்லோருக்கும் இடர்விளைத்த அனலாசுரனைத் தம் திருக்கரத்தினால் எடுத்து விழுங்கித் தமது திருவயிற்றில் அடக்கியபோது அகில ஜீவராசிகளும் அனல் வெப்பத்தினால் வருந்தினமையால் முனிவர்களும் யாவரும் அறுகினாற் பூஜிக்க, அகிலத்தையும் சந்திரனைப் போலக் குளிர் வித்த காரணம் பற்றி பாலச்சந்திரன் எனத் திருப்பெயர் பூண்டார் என்பதுமாம்.

**12. ஓம் கஜாநநாய நம :**

கஜாநகர் - கஜ் - ஆநநர் - ஓங்கார வடிவான யானை முகத்தை உடையவர்.

(கஜ - யானை, ஆநநகம் - (முகம்)

**13. ஓம் வக்ரதுண்டாய நம :**

வக்ரதுண்டர் - வளைந்த துதிக்கரத்தை உடையவர்

**14. ஓம் சூர்ப்பகர்ணாய நம:**

சூர்ப்பகர்ணர் - சுளகு போன்ற பரந்த இரு செவி உடையவர்.

**15. ஓம் ஹேரம்பாய நம :**

ஏரம்பர் - அழகு வாய்ந்தவர்.

**16. ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:**

ஸ்கந்தபூர்வஜர் - கந்தக் கடவுளுக்கு முதல்வராய்த் தோன்றியவர்.

பிள்ளையாருக்குரிய இந்தப் பதினாறு திருப்பெயர்களையும் வித்தியாரம்பத்திலும், விவாகத்திலும், கிரகப்பிரவேசத்திலும், பிரயாண ஆரம்பத்திலும், போர் முனையிலும் வேறு வேறு எக்கருமத்தைத் தொடங்கும் போதும் எவன் ஒருவன் பக்தியோடு சொல்லுகின்றானோ அல்லது பிறர் சொல்லும் போது இவற்றைக் கேட்டிருந்து வணங்குகின்றானோ அவனுக்கு எந்தவித இடையூறும் நேராது. நாம் எல்லாம் பிள்ளையாரின் பெருமைகளை அறிந்து போற்றித் திருவருளுக்குப் பாத்திரர் ஆவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பக் கலை மரபு பேணும் சிற்பக்கலைஞன்

வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர்,
முன்னாள் கலைப் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்துக்கள் காலம் காலமாக வளர்த்து வந்த கலைகளின் உறைவிடங்களாக விளங்குபவை ஆலயங்கள். இந்து ஆலயங்கள் சிற்பக்கலையின் மூலமாகவே தெய்வீக உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. விக்கிர ஆராதனை அல்லது உருவ வழிபாடு இந்து மதத்தின் முக்கிய அம்சமாக இருப்பதால் இந்த ஆலயங்களை உருவாக்கிய சிற்பிகள் சிற்பக்கலையின் உன்னத நிலைகளை எட்டிப் பிடித்தார்கள். சிற்பி வடித்த இறைவனது திருவுருவங்களை திருக்கோயில்களில் தெய்வீகப் பொலிவு பெற்று விளகங்கச் செய்பவன் சிவாசாரியன். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய அம்சங்காளல் சிற்பியின் கலைபடைப்புக்கள் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்குரியவையாகின்றன. இவ்வகையில் சிற்பக் கலைஞனும் சிவாசாரியனும் ஆகமங்கள் வகுத்துக்கூறும் நெறிநின்று சமயப்பணி புரிவதில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவ்விருவரது கைவண்ணத்தால் கலையும் வழிபாடும் இந்துமதத்தில் இரண்டறக் கலந்திருப்பதைப் போல வேறு எந்த மதத்திலும் நாம் காண்பதற்கில்லை. இந்துக்களைப் பொறுத்த வரையில் கலையில் தெய்வீகத்தையும் தெய்வீகத்தில் கலையினையும் கண்டு வழிபட்டவர்கள் ஆவார்கள். இதன் காரணமாக இந்துக்களின் சமய உணர்வோடு கலை உணர்வும் சேர்ந்து வளர்ச்சி பெற்றது.

இந்து சிற்பக்கலை மரபினைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வரும் பெருமைக்குரியவன் சிற்பக்கலைஞன். இந்தியாவிலும் அதனை அண்டியுள்ள இலங்கையிலும் உள்ள இந்து ஆலயங்களில் காணப் பெறும் எண்ணற்ற சிற்பங்களைச் சாஸ்திர பிரமாணங்களுக்கேற்பக் கலை நுட்பத்துடன் அமைத்துச் சிற்பக்கலை மரபினைப் பேணி வருபவனும் அவனே. இந்து விக்கிரகவியலைப் பொறுத்தமட்டில் சிற்பக் கலைஞன் பற்றிய கருத்துக்கள் ஒரு வகையில் விக்கிர அமைப்புப் பற்றிய விளக்கத்திற்கும் பின்னணியாக அமைந்து துணை புரிவன. ஆகமங்களும் சிற்ப நூல்களும் சிற்பக்கலைஞன் பற்றிய விஷயங்களை விரித்துக் கூறும் வகையில் அவனது மரபு, தகைமை, ஒழுக்க விதிகள் ஆகியவற்றைக் கூறுகின்றன.

தொழில் நுட்பத் திறனோடு கூடிய சிற்பக் கலையிலே தேர்ச்சி பெற்ற கலைஞனே "சிற்பி" எனப்படுவன். சிற்பக்கலையையும் உள்ளடக்கிய ஏனைய கலை ஆக்கங்களை நெறிப்படுத்தும் மேலவனே ஸ்தபதி. ஆகம மரபு குறிக்கும் கோயில் நிர்மாணம், அக்கோயிலில் இடம்பெறும் விக்கிரங்களை அமைக்கும் கலை ஆகியவற்றை நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு ஸ்தபதியைச் சார்ந்ததாகும்.

சிற்பியோடு தொடர்புபடுத்தக் கூடிய தெய்வீக மரபுக்கருத்துக்கள் இருக்குவேதத்தில் இடம்பெறுகின்றன. 'விஸ்வகர்மன்' என்ற பெயர் சிற்பவியற்றுறையோடு தொடர்புடையது. இப்பெயர் இருக்குவேதத்தில் உள்ளது. இவ்வேதத்தின் பத்தாம் மண்டலப் பாடல்களிற் சில விஸ்வகர்மன் என்ற தெய்வத்தின் மீது பாடப்பெற்றவை. அப்பாடல்களில் ஒன்றில் இவ்வுலகின் சிற்பி யாவன்? என்ற வினா வழிபடுவோனது உள்ளத்தில் எழுகின்றது. இதற்கான விடை இருக்குவேதத்தில் பத்தாம் மண்டலத்தில் வரும் ஹிரண்யகர்பன் பற்றிய பாடலில் வருகின்றது. பிரபஞ்சத்தைப் படைத்த சிற்பக்கலைஞனின் அம்சமாக பிரஜாபதி குறிப்பிடப்படுகின்றான். இவ்வுலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டிக்குக் காரணமானவன் அவனே. இருக்கு வேதம் குறிப்பிடும் விஸ்வகர்மன் என்ற தெய்வத்தின் மீதும் இக்கருத்துப் பிரதிபலிப்பதோடு சிற்பியின் தெய்வீக மரபினையும் உணர்த்துகின்றது. நிறைவு பெற்ற கலையம்சத்தோடு சிற்பங்களை வடிப்பதே தெய்வீகக் கலைக்குரிய பண்பாக அமைகின்றது. 'தெய்விகத் தூண்டுதலால் மனிதனது உள்ளத்தில் ஏற்பட்ட எண்ணங்களைக் கலையாக வடிப்பதே இந்தியக் கலையின் அடிப்படை அம்சமாகுமென' எரிக் கிரில் என்பார் கூறும் கருத்தும் இங்கு பொருத்தமுடையது.

சிற்பியின் தெய்வீக மரபு பற்றியும் அவனுக்குரிய தகுதி பற்றியும் மானசாரம் என்ற நூலில் சில்பிலக்ஷணம் என்ற இயலில் கூறப்படுகின்றது. இங்கு பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களதும் மரபு குறிப்பிடப்படுகின்றது. படைப்புத் தொழில் புரியும் பிரமன் மகாவிஸ்வர்மனாகக் குறிக்கப்படுகின்றான். இவனது நான்கு முகங்களும் நான்கு திக்குகளுக்குரியன. கிழக்கு முகம் 'விஸ்வபூ' என்றும் தென் திசைக்குரியது 'விஸ்வவித்' எனவும் வடதிசைக்குரியது 'விஸ்வஸ்த' என்றும் மேற்குத் திசைக்குரியது 'விஸ்வஸ்ரஷ்டா' என்றும் பெயர் பெற்றன. இந்நான்கு முகங்களிலிருந்தும் முறையே விஸ்வகர்மா, மயன், துவஷ்டா, மனு ஆகியோர் தோற்றம் பெற்று முறையே இந்திரன், சுரேந்திரன், வைஸ்ரவணன், நளன் ஆகியோரது புத்திரிகளை மணந்து நால்வரைப் புத்திரர்களாகப் பெற்றனர். ஸ்பததி, சூத்திரகிராகி, வர்த்தகி, தக்ஷன் என்பவர்களே அவர்கள். இவர்களில் ஸ்பததி கட்டட நிபுணன். சூத்திரகிராகி கட்டப் படவரைஞர். வர்த்தகி என்பவன் அளவுப் பிரமாண விதிகளையுணர்ந்தவனாகவும் ஓவியக் கலைஞனாகவும் விளங்குபவன். தக்ஷன் சிற்பியாவான்.

ஸ்தபதி என்பவன் ஏனைய மூவருக்கும் குரு. ஸ்தபதி என்ற பெயரே யாவரையும் உரியவாறு காண்பதற்குத் தகுதியுடையவன் என்பதைக் குறிக்கும். இவன் சாஸ்திரங்களைக் கற்றவன். சூத்திரகிராகியும் ஏனையோரும் அவனது வழிகாட்டலினால் வாஸ்து சாஸ்திர விதிகளைப் பின்பற்றினர். கலைநுட்பத்தோடு ஈடுபாடு கொண்ட யாவருக்கும் மேலவனாக விளங்கும் ஆசாரிய லட்சணங்களைக் கொண்டவன் ஸ்பதிக்கு வேண்டிய தகுதிகளை மகாபாரதம் கூறும் 'ஸ்தபதி கல்வியிற் சிறந்தவனாகவும் அறிவுக் கூர்மை மிக்கவனாகவும் அமைதி கொண்ட உள்ளத்தினனாகவும் ஆண்மை மிக்கோனாகவும் கல்வி கேள்விகளிற் சிறந்தவனாகவும் நற்குணம் பொருந்தியவனாகவும் செயல்கள் யாவற்றிலும் தாம் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் திறம்படப் பிரயோகிக்கும் ஆற்றலுள்ளவனாகவும் விளங்க வேண்டியவனாவவான்' என அந்நூல் கூறும்.

அடுத்து முக்கியத்துவம் பெறுபவன் சூத்திரகிராகி, இவன் ஏனைய இருவருக்கும் குரு. இவனும் சுருதி, சாஸ்திர நுட்பங்களையும் நன்கு அறிந்தவன். அளவைகளை மதிப்பிடுவதில் வல்லவனான மூன்றாமவன் சுருதி மற்றும் ஓவியம் பற்றிய அறிவிலும் சிறந்தவன். இறுதியிற் குறிப்பிடப்பட்ட தக்ஷனாகிய சிற்பியே செயற்திறன் கொண்டவன்.

மகாபாரத்தில் விஸ்வகர்மன், மயன் பற்றிய குறிப்புகள் உண்டு. இவர்கள் முறையே தெய்வங்களினதும் தானவர்களினதும் வாஸ்துவித்தை வல்லுனர்களாக விளங்கியவர்கள். விஸ்வகர்மன் ஆயிரக்கணக்கான கலைகளில் வல்லவன். தெய்வங்களுக்குத் தேவையான பொருட்களை உருவாக்கியவன் இவனே. மயன் என்பவன் தானவர்களின் விஸ்வகர்மனாகச் சுட்டப்படுகின்றான். தெய்வங்களின் சிற்பக்கலை வல்லுனனாக விளங்கிய விஸ்வகர்மாவின் பெயர் பிற்காலத்தில் இத்துறையில் நிபுணர்களாக விளங்கியவர்களுக்கும் உரியதாயிற்று. தமது வழிமுறை தெய்வீகம் வாய்ந்தது என்பதைக் காட்டுவதற்கு இப்பெயரைத் தமக்குரியதாகக் கொண்ட பலர் பிற்காலத்தில் இருந்திருக்க முடியும். தெற்கிலும் வடக்கிலும் எழுந்த இந்தியச் சிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் வாஸ்து வித்தையின் குருவாக விஸ்வகர்மாவையே குறிப்பிடுகின்றன. இப்பெயரைக் கொண்ட சிற்ப நூல்கள் பல தென்னாட்டில் காணப்படுகின்ற படியால் இப்பெயருடன் விளங்கிய சிற்ப வல்லுனர்கள் தெற்கிலும் இருந்திருக்கலாம். தென்னாட்டிலுள்ள அத்தகைய நூல்களில் விஸ்வகர்மீயம், விஸ்வகர்மசில்பம், விஸ்வகர்மா வாஸ்துசாஸ்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. மரபு வழியாக இப்பெயரைத் தாங்கிய சிற்பிகள் குடும்பம் தென்னாட்டில் விளங்கி வந்திருக்க முடியும். சிற்பக் கலையில் முதல்வனாகிய மயன் என்பவன் பற்றி இதிகாசங்கள் குறிப்பிடுகின்றன. இவன் பற்றிய மரபு தென்னிந்தியச் சிற்பக்கலை மரபோடு தொடர்புறுகின்றது. இவனது பெயரும் பிற்கால வாஸ்து வித்தைக்கு உரியவர்கள் தமக்கெனக் கொண்டுள்ளதை நாம் ஊகிக்க முடிகின்றது. மயமதம் என்ற வாஸ்துசாஸ்திரம் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூலிலிருந்து பல மேற்கோள்களை நூல்கள் எடுத்தாளுகின்றன. இக்குறிப்புகளிலிருந்து விஸ்வகர்மன், மயன் ஆகியோரை முதன் மையாகக் கொண்ட மரபுகள் உருவாகி வந்துள்ளமை தெரிய வருகின்றது. இந்திய கட்டட சிற்பக்கலைக்குரிய ஆசிரியர்களாக மேலும் பலர் குறிப்பிடப்படுகின்றனர். பிருகு, அத்திரி, வசிட்டர், நாரதர், நக்னஜித், சௌனகர், கார்கர், அநிருத்தர், சுக்கிரர், மனு, பராசரர், காசியபர் ஆகியோர் இத்தகையோரில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை உள்ளடக்கிய குருசீடமரபொன்று உருவாகி வந்துள்ளதெனக் கொள்வதிலே தவறில்லை. இந்தியச் சிற்பக்கலை மரபுக்கு இவர்களே முன்னோடிகளாக விளங்கியிருக்க முடியும்.

இந்தியாவில் சிற்பக்கலைப் பயிற்சி பாரம்பரிய முறையிலேயே இடம்பெற்றது. இக்கலையிலே தேர்ச்சிபெறக் குருவின் வழிகாட்டல் இன்றியமைதாதகாக் கருதப்பட்டது. அத்தகைய வழிகாட்டலின்றிப் பெறப்படும் கல்வி சித்திக்காது என்ற நம்பிக்கை நிலவியது. எனவே, சிற்பக் கலைஞன் இக்கலையிலே தேர்ச்சி பெறுவதற்கு முறைப்படி குருகுலவாசம் செய்வது அவசியமாக இருந்தது. பெரும்பாலும் சிற்பத் தொழில் பயில்பவனுக்கு ஆசாரியனாக விளங்கியவன் தந்தையே. சிற்பக்கலையைத் தந்தை தன் மைந்தனுக்குக் கற்பிக்க, பின்னர் அவன் அதனைத் தன் மைந்தனுக்கு வழங்கினான். இவ்வாறு தொன்றுதொட்டு வழிவழியாக இக்கலை பயிலப்பட்டு வந்தது. தந்தையின் தொழிற்கூடமே மகனது கலைபயில் சாலையாக இருந்தது. தொழிற்பயிற்சியும் நூற்பயிற்சியும் இணைந்தே சென்றன. இப்பயிற்சி நிலையின் பின்னர் சிற்பக் கலைஞன் கைதேர்ந்த கைவினைஞனாகவும் கணித அறிவு பெற்றவனாகவும் அளவிலக்கணம் அறிந்தவனாகவும் கலைவளம் பெற்றவனாகவும் பல்வேறு கலைமரபுகளை உணர்ந்தவனாகவும் வரலாற்று இலக்கியங்களைக் கற்றவனாகவும் தத்துவ அறிவு வாய்க்கப்பெற்றவனாகவும் இருத்தல் அவசியமாகவிருந்தது.

தெய்விக விக்கிரங்களை வடிக்கும் காரணத்தால் சிற்பக் கலைஞன் தனது ஆன்மாவைத் தூய்மையுள்ளதாக வளர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆன்ம வளர்ச்சிக்கு ஒழுக்கமே உறுதுணை. எனவே, சிற்பக் கலைஞனைப் பொறுத்தவரை ஒழுக்கமே அடிப்படைப் பண்புகளில் ஒன்றாக விளங்கியது. தெய்வச் சிற்பங்கள் வெறும் கலைப்படைப்போ, காட்சிப்பொருளோ அல்ல. உருவின்றி கண்ணால் காணமுடியாத ஒன்றை அறிவால் உணர்ந்த அவ்வுணர்வினைக் கலைவடிவாய்க் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவது இந்தியச் சிற்பக் கலைஞனது சிறப்பியல்பாகும். அவ்வுருவங்கள் வழிபடுவோனது உள்ளுணர்வோடு தொடர்பு கொள்வன. எனவே, ஒழுக்க சீலத்தினால் தூய்மையடைந்த சிற்பக்கலைஞனின் கைவண்ணத்தில் உருவாகிய கடவுட் படிமங்களில் இறைத்தன்மை மிளிர்ந்தது. சிற்பக் கலைஞனுக்கு இத்தகைய தகுதியை உறுதி செய்வதற்கே பண்டைய பயிற்சிமுறையும் குருகுலவாச அடிப்படையில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமுறையும் ஒழுக்கக் கோட்பாடுகளும் உதவின.

சிற்பங்களை உருவாக்கும் பொழுது அவற்றில் தெய்வீகப் பொலிவை விளங்கச் செய்வதற்குச் சிற்பி தியான மந்திரங்களைத் தனது உள்ளத்திலே தியானித்தல் வேண்டுமெனச் சிற்ப நூல்கள் வலியுறுத்துகின்றன. சிற்பத்தை உருவாக்கும் முன்பு அவ்வாறு தியானஞ் செய்து அம்மந்திரங்கள் குறிக்கும் உருவத்தைத் தனது உள்ளக் காட்சியில் காணுதல் வேண்டும். தியானத்தின் பயனாய் உள்ளத்திலே தோன்றும் உருவத்தையே தனது கைவண்ணத்தின் மூலம் அவன் வெளிக்கொணர்ந்தான். இத்தெய்வ உருவங்களை ஆலயங்களில் பிரதிட்டித்து வழிபாடியற்றும் சிவாசாரியனும் அதே தியான மந்திரங்களையே தியானித்து வழிபடுவன். எனவே, அந்நோக்கத்தினை நிறைவு செய்யத்தக்க உருவங்களையே சிற்பி அம்மந்திரங்கள் கூறும்முறைப்படி உருவாக்கவது அவசியமாகவிருந்தது. தியான சுலோகங்களை இவ்விரு நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தியதன் மூலம் சிந்தனைக்கும் செயலுக்குமிடையே ஒருமைப்பாடு நிலவியது. தியான மந்திரங்களின் துணையால் உள்ளத்திலே தோன்றும் உருவத்தைச் சிற்பி கல், மண், மரம், செம்பு, சுதை ஆகிய பொருட்களில் ஏதேனுமொன்றில் உருவங்களை உருவாக்கும் வல்லமை பெற்றிருந்தான்.

ஆகமங்கள் சிற்பக்கலைஞனைச் சிறப்பித்துக் கூறுகின்றன. யஜமானன், சிவசாரியன், சிற்பக்கலைஞன் ஆகிய மூவரும் இணைந்து செயலாற்ற வேண்டிய தேவை பற்றி ஆகமங்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. சிவாசாரியனுக்கும் சிற்பிக்குமிடையேயுள்ள தொடர்பு சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது. சிற்பியைக் கொண்டு இறைவனது திருவுருவத்தைச் செய்வித்ததன் பின்னர் யஜமானன் சிவாசாரியனையும் சிற்பியையும் பூசிக்க வேண்டுமேனக் காமிகாகமம் கூறும். பிரதிமைக்குரிய பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் போது சிற்பி சிவாசாரியனுடன் இணைந்து செயல்பட வேண்டியிருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பல பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்றன. சிற்ப சாஸ்திர நூல்களும் சிற்பக் கலைஞன் பற்றிய பல விவரங்களைத் தருவதோடு சிறப்பிக்கும் ஆசாரியனுக்கும் உள்ள தொடர்பையும் இவை தெளிவாகக் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் நிலவிய சிற்பக்கலை மரபில் சிற்பக் கலைஞனது படைப்புகள் பொதுமையமாகவே நோக்கப்பட்டன. தமது செயற்றிறன் அனைத்தையும் தெய்விகமாகக் கருதி, தாம் சார்ந்த சிற்பக்கலை மரபினுக்கே அர்ப்பணித்த பெருந்தன்மை தமிழ் நாட்டுச் சிற்பிகளுக்கே உரியதொன்று. சிற்பிகளுக்கென்று காணப்பட்ட விதி முறைகளும் மரபுவழி ஒழுங்கு முறைகளும் அவர்களது கற்பனையோட்டத்தைத் தடை செய்தனவா என்பது பற்றியும் நாம் சிந்திப்பது அவசியமாகின்றது. இது பற்றி அறிஞரிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு நாட்டின் கலைமரபு அதன் தனித்த பண்பாட்டை நமக்கு நன்கு விளக்குகின்றது. கலையின் உட்பொருளுக்கு அது உறுதுணையாக அமைகின்றது. கலையின் நேர்மைக்காகவே வரம்புகள் தோன்றின. உள்ளத்தில் உண்மையொளி வீசிய கலைஞனுக்கு விதிமுறைகளும் மரபுகளும் ஒரு போதும் தளைகளாகவில்லை அவனது கற்பனைக்கு உரிய இடம் கிடைக்கவே செய்தது. பல்லவர், சோழர், பாண்டியர் காலத்துக்குரிய நூற்றுக்கணக்கான திருமேனிகள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தனவாகவும் அழகே உருவாகவும் கற்பனை நிறைந்த கலைச் செல்வமாகவும் விளங்குவதே இதற்குச் சான்றாகும்.

என்றோ ஒரு நாள் சிற்பக்கலைஞன் புரிந்த சாதனை காலத்தை வென்று தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயத்திற்கு இன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சிற்பக்கலைஞன் ஒருவன் தான் காணும் கலைவடிவத்தைக் காண ஒட்டாமல் தடுத்து நிறுத்தும் பாறைப் பகுதிகளை உளிகொண்டு செதுக்கி, நீக்கி தான் தரிசித்த கலைவடிவம் உருவாகும்படி செய்கிறான். அப்பாறையில் கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பம் உருவாகி விடுகின்றது. சிற்பக்கலைஞன் எதைக் கொடுக்கவேண்டும் எதை விட்டு விடவேண்டும் எனத் தேர்வு செய்து கொள்ளுகின்றான். இந்தத் தேர்வில் தான் அவனது கற்பனைத்திறன் வெளிப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞன் ஒருவனது படைப்பினை நாம் முழுமையாக ரசித்து மகிழ வேண்டுமென்றால் அந்தக் கலைஞனின் கற்பனை நிலையில் நாம் நின்று பார்த்தால் மட்டுமே இது சாத்தியமாகின்றது. கலைஞனது கலைமரபோடு நாம் தொடர்ந்து பழக்கத்தை ஏற்படுத்தி-க் கொள்ளும் போதுதான் அவன் களது கலைப்படைப்பில் வெளிப்படும் கலைத்திறனையும் மனோதர்மத்தையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இதனை நாம் ரசனைப்பயிற்சி என்று கூறலாம்.

இந்து சமய சாத்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் வர்ணிக்கப்பட்ட கடவுளர்களுக்குச் சிற்பிகள் தங்கள் கற்பனையில் கலைவடிவம் கொடுத்தனர். இந்தக் கலைவடிவங்களை வழிபாட்டுச் சின்னங்களாக ஏற்றுக்கொண்ட இந்துக்கள் பக்தியையும், கலையையும் ஒன்றாக்கி உயர் அனுபவத்தைப் பெற முனைந்தனர். இந்து மதச் சிந்தனைகளே கலைவெளிப்பாடுகளாக உருப்பெற்றன. இவ்வகையில் ஓர் இந்துவின் வாழ்க்கை கலை உன்னதத்தை வெளிப்படுத்தும் வாழ்க்கையாக அமைந்ததோடு கலையுணர்வை வளர்த்துக் கொள்வதன் மூலம் அவன் தெய்விக உணர்வில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டான். இவ்வகையில் இந்து சமய மரபில் கலை உணர்வுக்கும் தெய்விக உணர்வுக்கும் இணைப்பு ஏற்படுத்துவதில் சிற்பக்கலைஞன் பெரும் பொறுப்பு மிக்கவனாக விளங்கினான்.

இதுவரை கூறியவற்றிலிருந்து சிற்பக்கலைஞன் பற்றிய சில கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். இந்து சிற்பக்கலைஞன் தெய்விக மரபுடையவன் என்பதும் அவனது ஆக்கங்கள் தெய்விகம் வாந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கன. சிற்பி உருவாக்கிய தெய்விகக் கலைப்படைப்புகள் திருக்கோயிலில் தெய்வங்களாகக் காட்சியளித்தன. சிவாசாரியன் அவற்றிற்கு வழிபாடியற்றி உபாசனை புரிந்தான். சிற்பக்கலைஞனது திறந்தால் கலை உணர்வும் தெய்வீக உணர்வும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வளர்ச்சி பெற்றன.

## உசாவியவை


இராமசுவாமி, மே., தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை. 1976.

இருக்குவேதம், தாமோதரபட்டர், ஸ்ரீபாதசர்மா (பதி.), 1957.

கணபதிஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், தொழில்நுட்பக் கல்வி இயக்கம், சென்னை. 1978.

சில்பரத்தினம், தேவநாதாச்சாரியார் (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1961.

பூர்வகாமிகாகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சென்னை. 1889.

பூர்வகாரணாகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி.). சிவஞானபோத யந்திரசாலை, சென்னை. 1900.

மகாபாரதம், சுக்தங்கர், வி. ஸ், பெல்வல்கார், எஸ்.கே., (பதி.) பண்டார்கர் கீழைத்தேய ஆய்வு நிறுவனம், பூனா.

மானசாரம், வெங்கடசுப்ரஹ்மண்ய சாஸ்திரி, நீ. வை., (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை, 1963.

ஸகளாதிகாரம், வாசுதேவ சாஸ்திரி கே. (பதி.), ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1961

ஸ்ரீ காசியப சில்ப சாஸ்திரம், சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, கே. எஸ்., (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1960.

Banerjea, J.N., **The Development of Hindu Iconography,** Munshiram Manohar Lal, Pub. Pvt., Ltd., 1974

Bhattacharyya Tarapade, **The Canons of Indian Art,** (The Study of Vastu Vidya), Firma K.L., Mukhopadhyay. 1963.

Coomaraswamy, A. K. **Visvakarma,** Munshiram Manohar Lal, Pub., Pvt., Ltd., Delhi., 1978.

Coomaraswamy, A. K., **The Dance of Shiva,** The Noonday Press, New York. 1959.

Stella Kramrisch, **The Hindu Temple,** Vols. I & II., Motilal Benarsidas, Delhi. 1976





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

வாழ்நாட் பேராசிரியர், இலக்கிய கலாநிதி. பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், M.A. Ph.D, (அமரர்)
கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(பிரதிட்டை என்றால் என்ன? இக்கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்துத் தீ வளர்ப்பது யாது காரணம் பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்ற வைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தாள யாது? என்ற கேள்விகளுக்கு உரியவாறு விடை கூறும் முகமாகக் கும்பாபிஷேகக் கிரியை யமைப்பையும் அடிப்படைத் தத்துவத்தையும் சுருக்கி அறியத்தருவது இக்கட்டுரை.)

எங்கும் நிறைந்தவன் இறைவன். அவ்வாறிருந்தும் அவனைத் தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்கின்றனர். இதனால் 'அவன் எங்கும் உளன்' என்ற சிறப்புக் குன்றுமோ வெனின், ஒரு பொழுதும் குன்றாது. சிக்கலான இக்கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது சிவஞன சித்தியார் (12-3-4), பசுவின் உடலெங்கனும் பால் பரந்து சுவறியுள்ளது. எனினும் அது முலைகளின் வழியே தான் வெளியேறுகின்றது. அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்திலேயே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் பெருக்குமிடம் குருலிங்க சங்கமமெனச் சமய நூல்கள் கூறும். இம் மூன்றினுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவ்லிங்கம் எனவும் படலாயிற்று. பரம் பொருளானான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம். 'அப்பரமன் இத்தகையன்' என எமக்கு விளக்கி நிற்கின்றது. அவ் விளக்கத்தின் சுருக்கம் : "உருவமில்லாத எம்பெருமானை எவ்வாறு கிரகிப்போம், என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங் காட்டியும், 'எம் போன்று உருவம் வாய்ந்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்த நோக்குவார்க்குக் கை கால் முதலிய உறுப்புகளைத் தெளிவாகப் பெறாத அருவநிலையில் தோற்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி" என்பதாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இலிங்கத் திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும் உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகா. அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவமில்லாத திருக்கோவில். பாரத நாட்டில் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோவிலைச் காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச் சுட்டும் அடையாளமான இலிங்க மூர்த்தியாகிக் கருவறையில் மூல விக்கிரகமாய் முதன்மை பெற்று எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கலாது ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூல விக்கிரகம் அருவுருவமான இலிங்க வடிவில் அமையாததாய் உருவ நிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை, பால்கறப்பவன் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓரிடத்தில் வெளிப்படுத்துவது? இவ்வாறு வெளிப்படுத்தும் வழிகளையே ஆகமங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. வெளிப்படுத்தும் இவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன். கல்லில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங் கூறும் வழியைக் கடைப்பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழுமாற்றைச் சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன் தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களனைத்தையும் எட்டுப் பிரிவுகளுள் அடக்கலாம். இவற்றிற்குப் புறம்பாய பொருளொன்று உண்டு என்றால், அது இவையெட்டும் ஒருங்கு ஒன்று சேரும் வண்ணம் அருளுருவம் தாங்கும் இறைவனே ஆகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும், சந்திரனும், இவ்வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள் பிரபஞ்கம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பன் ஆதலால் இப்பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இதுபற்றி அட்டமூர்த்தி எனச் சிறப்புப் பெற்றவன். எனவே, இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடு ஆகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக் காணல் அவனைக் காணலேயாகும். இவ்வடிப்படையிலேதான் சிவாசாரியர் இறைவனைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளங்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரிகையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும், நன்கு புலனாகும்படி என்றும் திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே, பிரதிஷ்டை என்னுஞ் சொல் 'ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலைநிற்றல்' என்றும், ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும் படி நிலை நிற்றல்' என்றும் பொருள்பெறும். இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னுங் கிரியை கும்பாபிஷேகம் என்னும் மறுபெயரால் வழங்கி வருகின்றது இச்சொல் பிரதிட்டை என்னுஞ் சொல்போலக் கிரியையின் விளைவைச் சுட்டாது கிரியையின் ஓரமைப்பாகிய முழுக் காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்னுங் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத் திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக்கும்பாபிஷேகமே, - குடமுழுக்கே - பிரதிட்டையே, இறைவனை பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யுஞ் செயலைச் சுட்டுகின்றது.

ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை, குடநீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை எழுந்தருளி நிலை நிறுத்தும் முறையின் சிறப்பினை, வேதாகமங்களைத் துணைகொண்டு நோக்குமிடத்து, இக்கிரியை முறையின் சிறப்பும் உயர் தத்துவமும் புலனாகும். அதைச் சற்று நுணுகி நோக்குவோம்.

எங்கும் நிறைந்த இறைவன், புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான், எமக்கிரங்கி, திருவருள் பாலித்துப் படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும் முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைத் துணையாகக் கொண்டு வகுத்தமைக்கப்பட்டுள்ளது. பிரதிட்டை என்னும் கும்பாபிஷேகக் கிரியையாகும். சர்வவியாபி எனச் சுவேதாசுவதாரங் கூறும் பகவான் முதலில் சிறு அளவில் மட்டுமே புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் இந்திரியங்களால் செல்விதாகக் கிரகிக்கப்படாமையால் வாயுவாகச் சற்று விரிகின்றான். ஆகாயத்திலும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உணரப்படக் கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதான தொன்று அன்றோஷ இதை அடுத்த நிலை அக்கினியாக விரிந்த நிலை, இது கட்புலனாவதே. இது தூய்மை பெருக்கி எம்மை ஈடேற்ற வல்லது அக்கினியைப் பெரிதும் நெருங்கிப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாக வழிபடுதலில் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவும் இல்லாது தானே எல்லாமாய் விளங்குவது நீர். என்றாலும், கிரகிக்கத் தக்கவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுதல் எளிதன்று. இதுகாறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண். இதனிடத்து இறைவனை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூடவல்ல நிலை. இவ்வாறு இறைவன் அருவநிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுண்மை அகன்று படிப்படியாகப் பருமை வளரும் வகையில் விரிந்து விளங்குகின்றான். இதை தைத்திரிய உபநிடதம்.

> "ப்ரம்ஹண ஆகாச : ஸம்பூத :
> ஆகாசாத் வாயு:
> வாயோ ரக்நி :
> அக்நே ராப:
> அத்ப்ய : பிருத்வீ"

என எடுத்தியம்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து, பால் கறப்பவன் பசுவுடலெங்கணும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று, விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக, இதுகாறும் கூறிய விரிவு முறைவழி நின்று, விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்துங் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருங்கிரியையின் அம்சங்களாய் விளங்கக் காண்கின்றோம். ஆகாய வெளியிலமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனாக வைத்தலே யாகசாலையில் நிகழும் கும்பாபிஷேகக் கிரியையாகும். இக்கிரியையிலே, யாகசாலையில் குண்டங்களில் வளருந் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப் பெறுகின்றான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும் கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுகின்றான். இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் மண் அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்துகின்றது. முன்னர்க் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித் தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை நீர் நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை, மண் இயல்பு வாய்ந்த விக்கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச் செய்த பின்னரே. அவன் அவ்விக்கிரகத்தில் பாரெங்கணும் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிட்டிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இதுபற்றியே, அறவே கிரகித்தற்கரிய இறையை, எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணிதாயிருத்தல் பற்றி, முதன்முதல் புலனான ஆகாயத்தில் நிறுத்தி வழிபடுவதற்கு வகையறியாராய், அதையடுத்து, கட்புலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய், புலனாகித் தோற்றும் தன்மையனாயும், ஒரேவழிப் புலனாகாது திடீரென மறைந்துவிடும் இயல்பினாயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவு வழிபடுதலில் திருப்தி காணாதவராய், வற்றும் இயல்பு காரணமாக என்றும் தொடர்ந்து நிலை பெறாத - எனவே பிரதிட்டைக்கு ஏற்றவாறு பொருந்தாத - நிலையினதாதல் பற்றி, நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் பெறாதவராய், மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழியைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே, என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ் விக்கிரகங்களிற் சில மண்ணோடு உறவு கொண்ட மலைகளில் பிறந்தெடுத்த கருங்கல்லில் சமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும் ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களிற் செதுக்கப்படுவன. இன்னுச் சில மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணாம்பு முதலியன கலந்த சுதையால் அமைவன. இவ்வாறு மண்ணின் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனைக் குடிபுகுத்திச் சிறப்பாகத் தோற்றி விளங்கவைக்குங் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து, அவன் படிப்படியாக வெளிப்படும் முறையே இலகுவான வழியென உணர்ந்து, அதையே உபாயமாகக் கையாண்டு, இது காறும் சுட்டப்பட்ட விண், வாயு, தீ, நீர், ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு இறைவனைப் படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளிவிக்கும் கும்பாபிஷேகப் பெருங் கிரியையில், ஆகாய ரூபமான யாகசாலையிலும், குண்டங்களில் எரி வளரக் காரணமாகி நின்று அக்கினியினின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கிநியிலும், மேடையில் அமைக்கப்பட்ட கும்ப நீரிலும் இறைவனைப் பாரனைத்தையும் கடந்து நிற்கும் துவாசதாந்தத்தில் இருந்து இழிந்து வந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து. ஆவாகித்து பூசனை புரிந்து இத்தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண் இயல்பினதான திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலைபெற வைத்து, இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்ப நீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவது போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒரு முகப்பட்டு உறைந்து நிறைந்து விளங்கச் செய்கின்றார்.

கும்பாபிஷேகம் என்னும் இக்கிரியையின் பின்னர், எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடயங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந்நிலையிற்றான், அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை, உபசாரங்கள் முதலிய ஆராதனைகளால் இறைவனை வழிபடத் தொடங்குகின்றோம். இவ்வம்சங்கள் கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும், விரிவான நைமித்திகக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

இதுகாறும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாகக் கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன்முதல் நிகழ்த்தும் அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்னும் 'முதற் கும்பாபிஷேகம்' பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழிபாடு நிகழ்ந்து வருங்கோவிலில் கருவறையின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின், மூல விக்கிரகத்தில் சாந்நித்தியமாய் விளங்கும் இறைவனை, உரிய கிரியைளால் கும்பத்தில் எழுந்தருளச் செய்து, வேறு ஓர் இடத்தில் தற்காலிகமான 'பால ஆலயம்' கற்பித்து, அங்கு நிறுப்படும் மரத்தால் ஆன சிலையிலோ, திரையில் எழுதப்பட்ட திருவருவிலோ ஒடுக்கி கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கிய பின், பால ஆலயத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும்பத்ததில் ஆகருஷித்து, ஆவாகித்து, யாகசாலை அமைத்து அங்கு அக் கும்பத்தை ஸ்தாபித்து,யாகக் கிரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரேயிருந்த மூல விக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சோர்ப்பித்தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும்பாபிஷேகம் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் எனவும் புநர் ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனவும் சுட்டப்படும். ஜீர்ணம் = பழுதடைந்த (கோவிலை); உத்தாரணம் = மீட்டல் (திருத்துதல்) ; புநர் = மறுபடியும் ; ஆவர்த்தனம் = திருப்பிக் கொண்டு வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேகம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம், சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள்
(தருமபுர ஆதீனம்)

பேரருளராகிய கடவுள் தமது பெருங் கருணையால் ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கி அறிவிச்சை செய்கைகளை விளக்கி அவற்றுக்குத் தமது இன்பத்தைக் கொடுக்க கருதி தமது அருட்சக்தியால் உலகத்தையும், உடலையும் சிருஷ்டித்துக் கொடுத்து உதவினார். அவற்றைப் பொருந்தித் தமது அறிவிச்சை செயல்கள் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள் நன்றி அறிதலாகக் கடவுளை வழிபட வேண்டியது அவசியம்.

கடவுள் வழிபாடானது அவர் அதிஷ்டித்து நிற்கும் இடத்தாலும், வழிபாட்டிற்குரிய கரணங்களாலும், வழிபடும் அறிவு வகையாலும் மூவகைப்பட்டு விளங்குகிறது.

கடவுள் எங்கும் வியாபியாய் நிறைந்திருப்பினும் பாலில் நெய்போல் விளங்காது நிற்கிறார். குருவினிடத்திலும், ஆலயத்திலும், அடியாரிடத்திலும் தயிரில் நெய்போல் வெளிப்பட்டு விளங்கியருளுகிறார்.

உயிர்கள் கர்மசக்கரத்தாற் சுழன்று பிரபஞ்சவாசனையில் அழுந்தித் தாரம், தனம் முதலான பொருட்களின் மோகத்தால் சுகதுக்கங்களைக் கடலைப்போல் ஓயாது மாறிமாறி அனுபவிக்கின்றன. கடவுள் வழிபாட்டிற்கென ஒருதனி இடத்தைக் குறிப்பிடாது, கடவுள் எங்கும் வியாபகமாக இருத்தலால் எந்தவிடத்திலும் அவரை வழிபடலாமென எண்ணில் சுகதுக்கரூபமான அலைகள் எங்குஞ் சூழ்ந்து கொண்டிருத்தலால் அவை அவ்வழிபாட்டை நிலைக்கவொட்டாது தடைபண்ணும் தங்கள் வீட்டில் புனிதமான ஓரிடத்தில் வழிபடலாமெனில் அது அவசியமானாலும் அங்கும் குடும்ப விவகாரங்களால் மனம் அலைவுறு நேருமாகையாலும் அதன் காரணமாய் மனமும் அறிவும் தெளிவுறுதல் நேராதாகையாலும் திரிகரணங்களுடன் அமைதியாக வழிபடுவதற்குச் சிறந்தஇடம் ஆலயமாகும். ஆ = பசு, லயம் = ஒடுங்குதல் எனப் பொருள்படுதலால் அது ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்த ஆணவ மலவலி ஒடுங்கப்பெற்றுப் பேரன்புடன் மனோவாக்குக் காயங்களென்னும் திரிகரணங்களாலும் முறையே சிந்தித்து வாழ்த்தி, வணங்கி, அருண்ஞானமடைந்து இறைவனிடத்து ஒடுங்குவதற்குச் சாதனமான இடமாகும். மற்றும் ஆ = அனைத்தும், லயம் = ஒடுங்குதல் எனப் பொருள்படுதலால் அது சிவசத்திகளாலே மாயா காரியங்களாய் தோன்றின் கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்னும் ஆறு அத்து வாக்களும் அவற்றின் பேதமானவை அனைத்தும் தோன்றிய அடைவே தத்தங் கரணத்தில் ஒடுங்கும் என்பதை அறிவூட்டும் இடமுமாகும்.

அத்தகைய சிவாலயத்தின் நடுவில் பீடத்தை ஸ்தாபித்து அதன் மேல் இலிங்கத்தை ஸ்தாபனம் செய்வது பிரதிஷ்டை எனப்படும். இது ஸ்தாபனம், பிரதிஷ்டை, ஸ்திதஸ்தாபனம், ஆஸ்தாபனம், உத்தாபனம் என்று ஐந்து விதமாகும்.

பீடம் சக்தி எனப்படும். இலிங்கம் சிவம் ஆகும். சிவமந்திரங்களால் இவ்விரண்டையும் சேர்த்து அஷ்டபந்தனம் செய்வது பிரதிஷ்டை எனப்படும் என்றும் சாராவளி கூறுகிறது.

இத்தகைய பிரதிஷ்டையானது அனாவர்த்தம், ஆவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம் என்று நான்கு விதமாகும்.

ஆலயமோ இலிங்கமோ இல்லாத கிராமத்திலோ, நகரத்திலோ, புதியதாக ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி அதனுள் அந்த சுவாமியைப் பிரதிஷ்டை செய்தல் அனாவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும். இந்த அனாவர்த்தனப் பிரதிஷ்டை கலியுகத்தில் கிடையாது என்றும் சிவாகமம் பறைசாற்றுகின்றது.

சமுத்திரம், நதி முதலானவற்றால் அழிக்கப்பட்ட ஆலயத்திலிருந்து இலிங்கத்தை எடுத்து வந்து வேறு ஒருவிடத்தில் ஆலயம் கட்டி அதில் அந்த இலிங்கத்தை பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தப் பிரதிஷ்டை. ஜீரணமான ஆலயத்தை மறுபடியும் ஜீரணோத்தாரணம் செய்து அஷ்டபந்தனம் சாத்திக் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தனம். திருடர்களாலோ வேறு தகாதவர்களோ இலிங்கம் சலனம் செய்யப்பட்டும். தீண்டப்பட்டும் தூய்மைக்குக் குறைவு வரும்போது உடனடியாகச் செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரீதம் எனப்படும். பூர்ணமாகச் செய்யப்படும் பிரதீஷ்டை 64 கிரியைகளைக் கொண்டது. சில ஆகமங்கள் அதை சுருக்கி 55 கிரியைகள் என்றும் கூறுகின்றன.

அருவமாகவுள்ள இறைவன் தியானம், பூஜைசெய்வதன் பொருட்டு உருவத்துடன் விளங்குகிறான். இறைவனின் திருவுருவம் மந்திர வடிவமாகும். அவை கலை (5), தத்துவம் (36), புவனம் (224), வர்ணம் (51), பதம் (81), மந்திரம் (11) என்று கூறப்படும். அத்துவாக்களே இறைவனின் சரீரமாகும். ஐந்து கலைகளும் ஸ்தூலமான உடலைக் காட்டும். அதாவது சாந்தியதீதகலை - சிரசு, சாந்திகலை - முகம், வித்தியாகலை - மார்பு, பிரதிஷ்டாகலை - நாபி, நிருத்திகலை - பாதம். எனவே முழங்கால் வரையில் நிவிருத்தி, நாபி வரையில் பிரதிஷ்டை, கழுத்துவரையில் வித்தை, நெற்றி வரையில் சாந்தி, அதன்மேல் சாந்திய தீதை எனப்படும். தத்துவங்கள் முப்பத்தாறும் எலும்பு, மஜ்ஜை, சுக்லம் என்ற தாதுக்களாம். புவனம் இருநூற்று இருபத்து நான்கும் இறைவனுக்கு உரோமங்கள் ஆகும்.

அகாரம் முதலிய அக்ஷரங்கள் தோலாகும். பதம் என்ற மந்திரம் எண்பத்து ஒன்றும் மாமிச தாதுவாகும். மந்திரம் பதினொன்றும் குருதியாகவும் விளங்குவதாகக் கற்பிக்கப்பட்ட வித்யா சரீரத்தில் நியசிக்கப்பட்ட ப்ராஸாத மந்திரம் இறைவன் தங்கும் ஜீவகலையாகும் என்று மூலாகமம் கூறுகிறது.

இறைவனை வழிபட மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றும் இன்றியமையாதன. மந்திரம் என்பது எழுத்தின் வடிவம். எழுத்தென்பது சொல்லுக்குக் காரணமாய் சுத்த மாயையாகிய குண்டலியினின்றும் எழும் ஒலி. எழுத்துக்கு ஒலிவடிவு, வரிவடிவு என இரண்டு வடிவுகள் உள்ளன. ஒலி வடிவில் குண்டலியின்று எழும் ஒலியானது பஞ்சமை, பைசந்தி, மத்தியமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளின் நிலைகளையடைந்து தன்செவிக்கு மட்டுமாகவும், தன்செவிக்கும் பிறர் செவிக்குமாகவும் கேட்கும் ஓசையாக அமைவதற்கு மூலாதாரம் முதல் மென்மேல் எழுச்சியுறுதலின் எழுத்தெனப் பெற்றது. வரிவடிவில் எழுதப்படுவதால் எழுத்தெனப் பெற்றது.

வரி வடிவெழுத்தானது சடமாயிருந்தாலும் காந்தம், மின்சாரம் முதலிய சடப்பொருள்களுக்குள்ள சக்திகளைப் போன்ற சக்தியை உடைத்தாயிருக்கிறது. ஒருவன் தூரத்தே இருந்து தனக்கு நேர்ந்த சம்பவங்களைக் கடிதத்தில் எழுதி தனது நண்பனுக்கு அனுப்பிய போது அதைப் படித்த நண்பனுக்கு எழுதியவனது எண்ணத்தைத் தோற்றுவித்தலைக் காண்கிறோம். ஒருவன் தனது அவசரவேலை நிமித்தமாக ஒருவரை அவரது அறையிலே கண்டு பேச விரைந்து செல்லும்போது, வாயிலில் "உத்தரவு இல்லாமல் உள்ளே நுழையக்கூடாது" என்று எழுதியிருத்தலைக் கண்டவுடனேயே உள்ளே செல்லத்தடைப்பட்டுத் தனது வேகம் தணிந்து நிற்றலைக் காண்கிறோம். ஆதலால் எழுத்துக்குச் சக்தி உண்டு எனத் துணியப்படும். எனவே மந்திரம் அக்ஷரவடிவம். அது அளவுகடந்த சக்திவாய்ந்தது.

இவ்வாறு சொல்லுக்கும் சக்தி உண்டு. "சொல் என்பது எழுத்தானாக்கப் பெற்று பொருளறிவிக்கும் ஓசை" என நச்சினார்க்கினியர் திருவாக்கு ஒருவனை ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் நிமித்தம் மற்றொருவன் சொல்லும் சொல்லால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவுபபெற்றவன் ஏவினோன் குறித்த தொழிலைச் செய்யக் காண்கிறோம் .

கிரியைக்கும் (செய்கை) சக்தி உண்டு. ஒருவன் தனது வாயினால் சொல்லாமலும் எழுத்தால் எழுதாமலும் தனது உடம்பின் அசைவாகிய செய்கையினால் வெளிப்படுத்தலாம். அதற்குப் பெரும்பான்மையும் கைகளும் கண்களுமே முக்கியமான கருவிகள்.

ஒருவன் ஒரு தீயகாரியத்தைச் செய்யும்போது மற்றொருவன் அதைச் செய்யாதே என்று கையை அசைத்தாலும், கோபத்துடன் நோக்கினாலும் செய்யத் தொடங்கியவன் செய்யாதிருத்தலைக் காண்கிறோம்.

பாவனை என்பது எண்ணம். ஒருவன் தனது எண்ணவன்மையாலும் பிறரைத் தொழிற்படுத்தலாம். அவ்வெண்ணம் மனோசக்தி எனப்படும். கருடபாவனையால் விஷநீக்கத்தைக் காண்கிறோம். எனவே அக்ஷர வடிவமான மந்திரங்களுக்கும், செய்யும் செய்கை (கிரியை)க்கும், எண்ணும் எண்ணத்திற்கும் சக்தி உண்டு. இத்தகைய மந்திரம், கிரியை, பாவனையால் இறைவனை இலிங்கத்தினின்று கும்பத்திலும், மீண்டும் கும்பத்திலிருந்து இலிங்கத்திலும் ஆகர்ஷணம் செய்து ஸ்தாபிக்கும்போது மந்திரக் கிரியா பாவனையின் சக்தியினால் இறைவன் ஆசாரியனுடைய வேண்டுகோளுக்கிணங்கி விருப்பத்தை நிறைவேற்றியருளுகிறான்.

இறைவனோடு இறைவியைச் சேர்த்தல் அதாவது இலிங்கத்துடன் பீடத்தைச் சேர்த்தல் பிரதிஷ்டை என்று முன்கூறப்பட்டது. இடைவெளியின்றி பீடத்தையும், இலிங்கத்தையும் இணைத்து இறைவனின் அருட்சக்தியை மக்களின் பக்குவத்திற்கேற்ப உலகுக்கு அளிக்க வல்லமை வாய்ந்தது அஷ்டபந்தனம் எனப்படும் ஔஷதம்.

சுக்கான், குங்குலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, பூங்காவி, செம்பஞ்சு, வெண்ணெய், சாதிலிங்கம் என்ற எட்டும் அஷ்டமூர்த்திகளின் அம்சம் பெற்று உலகில், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஆதித்தியன், அம்புலி, இயமானன் என்பவைகளின் சக்தியை வீரியப்படுத்தி மூவுலகும் செழிக்க ஹேதுவாகும். எனவே பீடத்தையும், இலிக்கத்தையும் இணைக்கும் அஷ்டபந்தன மருந்து சாத்துதல்தான் மஹா கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியை.

அஷ்டபந்தன மருந்தானது இறைவனின் திருவருள் சக்தியின் வாயிலாக பிரபஞ்சத்தைத் தமது காரியத்தில் ஈடுபடுத்த அவ்வருட் சக்தியை பீடத்தில் சேர்ப்பது அசாதாரணமான செயல் அம்மருந்தின் மூலமாக ஒளிபெற்ற பீடசக்தி உலகத்திற்குக் காரணமான பஞ்சபூத சக்திகளையும், மற்றும் சூரியன், சந்திரன், இயமானன் இவர்களுடைய உஷ்ணத்வ, சீதத்வ, ப்ரபுத்வ, சக்திகளையும் மின்சார அலைபோல் உலகில் பரவச் செய்து உலக சுபிக்ஷத்திற்கு ஏதுவாக ஆகிறது. கும்பாபிஷேக யாகசாலை சிவஸ்வரூபம், வேள்வி சிவஸ்வரூபம், யாகசாலையில் இருக்கும் கும்பம் சிவஸ்வரூபம். ஆசாரியன் சிவஸ்வரூபன். எனவே எல்லாம் சிவமயம் எனவிளங்கும் மஹா கும்பாபிஷேகத்தில் யாகசாலையில் சிவாகாரமான அக்னியிலெழுந்த புகையும் வெப்பமும். வேத ஓசையும், சிவகாம தோத்திர ஓசையும், திருமுறையோசையும், சிவாசாரியார் சாதகர் முதலியோர்களுடைய மந்திரக் கிரியாபாவனையோடு கூடிச் செய்யப்படும் செயல்களும் சேர்ந்து எங்கும் வியாபித்திருக்கும் இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பி, அர்ச்சகனுடைய தவவலிமையால் இறைவன் கும்பத்திலும் கும்பாபிஷேகத்திற்குப் பிறகு இலிங்கத்திலும் சாந்நித்தியம் பெற்று யார், யார் எதை எதை விரும்புகிறார்களோ அவரவர் அதை அதை அருளும்படி செய்வது பிரதிஷ்டையின் சிறப்பு.

கும்பாபிஷேக தரிசனத்தால் தீவினைகள் நீங்கி புத்திரப்பேறு முதலான பேறுகளையும், பக்தியையும் பெற்று ஆனந்தமுறுவர் என்பது திண்ணம்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறுவது மண்டலாபிஷேகம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாபிஷேகம்

ஆலயத்திலே மூல மூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர், தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இவை குறைந்தது, ஒரு பக்ஷத்துக்கேனும் நடைபெறும். இங்ஙனம் மூன்று பக்ஷங்கள் கொண்ட காலம் திரிபக்ஷம் எனப்படும். ஒரு பக்ஷம் என்பது 15 நாட்கள். திரிபக்ஷம் என்பது 45 நாட்களாகும். இக்கால எல்லையில் விசேடமான ஓர் அபிஷேகம் மூல மூர்த்திக்குச் செய்யப்படும். இது பொதுவாக "மண்டலாபிஷேகம்" என வழங்கப்படும்.

'மண்டலம்' என்னும் சொல் பல துறைகளிலும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டது. எக்கருத்தில் அது வழங்கப்படினும் அளவைப் பொருளிலியே அது வழங்கப்படினும் அது பெரும்பாலும் ஆளப்படுகின்றது. உதாரணமாக இருக்கும் வேதத்தை வகைப்படுத்தினோர் அதனைப் பத்து மண்டலங்களாக வகுத்தனர். வான சாஸ்திர ரீதியில் இது சூரிய மண்டலம், சந்திர மண்டலம் முதலிய அளவைகளைக் குறிக்கும். வைத்திய சாஸ்திரத்திலும் மருந்துகள் புடம் பண்ணுவதற்கும், மருந்துண்ணலுக்கும் மண்டலக் கணக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. அரசர்களும் தத்தம் அதிகாரத்திற்கேற்ப மண்டலவர்த்தி, மண்டலேஸ்வரன், மண்டலாதிபதி என்றெல்லாம் இந்த அளவைச் சொற்கொண்டே பெருமை பேசுவர். மாந்திரீகம் முதலியவற்றிலும் "மண்டலம்" என்னும் இச்சொல் விசேட பரிபாஷையாக வழக்கிலுண்டு. தீக்ஷா மண்டபம் முதலியனவும், குண்ட மண்டலங்களின் முக்கிய அம்சங்களாக கொண்டிருக்கும்.

இங்ஙனம் பல்வேறு காலம், தூரம் என்பவற்றைக் குறிக்கும் "மண்டலம்" என்னும் சொல் நாம் முன்னர் கூறியவாறு நாற்பத்தைந்து (45) தினங்களையே பெரும்பாலும் குறிப்பது. சிலர் நாற்பத்தெட்டு (48) நாள் எனவும் கொள்வர். கும்பாபிஷேகத்துக்கு முன்னர் நாற்பத்தைந்து (45) நாட்கள் மூல மூர்த்தியின் யந்திரத்திற்கு ஸ்நபனம், மந்திர ஜபம் என்பன செய்வோர், பின்னர் மண்டலாபிஷேகம் வரை ஸ்நபனம், உற்சவம் என்பன செய்து மண்டலத்தைப் பூர்த்தி செய்வர். இடம், பொருள், ஏவல் என்பன இடங்கொடாவிடில் ஒரு பக்ஷமாகிய பதினைந்து (15) நாட்கள் வரை அபிஷேகம், உற்சவம் என்பன நிகழ்த்த நாற்பத்தைந்தாவது (45) தினமாகிய மண்டலப் பூர்த்தியில் மண்டலாபிஷேகம் செய்வர். இது பெரும்பாலும் சஹஸ்ர கலச ஸ்நபனமாக அல்லது சகஸ்ர சங்காபிஷேகமாக நிகழ்த்தப்பெறும் மண்டலாபிஷேக பூர்த்தியிலேதான் சுவாமிக்கு இரஷாபந்தன உத்வாசனம் செய்தல் ஆகம முறையாகும். ஆசார்யாபிஷேகம் முதலிய தீக்ஷா வைபவங்களிலும் மண்டலாபிஷேகம் முடிந்த பிற்பாடுதான் இவ் ரக்ஷாவிசர்ஜனங் (காப்பவிழ்த்தல்) நிகழ்வது கண்கூடு. விரிக்கற் பெருகும். கும்பாபிஷேகக் கிரியைகள் எங்ஙனம் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள கிராம மக்கள் க்ஷேமமாக வாழ வேண்டுமென்னும் உயர்ந்த நோக்கங்கொண்டு செய்யப்படுகின்றனவோ அதே இலட்சியத்துடன் தான் மண்டலாபிஷேகமும் நிகழ்த்தப்படுகின்றது. அத்துடன் இவ்வபிஷேகம் மேலும் அநேக சாந்திகளைச் செய்கிறது. 'கும்பாபிஷேகம்' அல்லது 'குடமுழுக்கு' என்ற பிரதிஷ்டைக்குப் "பெருஞ் சாந்தி" என்றும் வழக்காறு உண்டு. இப்பெருஞ் சாந்தியிலே அஷ்டபந்தனம், சாத்திய தோஷங்கள் நீக்கற் பொருட்டும். வேறு குறை குற்றங்கள் நேர்ந்திருப்பின் அவற்றை நீக்குதற் பொருட்டும், கும்பாபிஷேகம், செய்த பலனை அடைவதன் பொருட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலாபிஷேகம் அவசியம் செய்யப்படுகின்றது.

**அஷ்டபந்தனம்**

கும்பாபிஷேகத்தைக் குடமுழுக்கு என்று கூறுவர். பெருஞ்சாந்தி எனவும் குறிப்பிடுவர்.

ஆலயம் பழமையினால் சிதிலமடைந்து காணப்பட்ட நிலையை மாற்றி, புதிதாக அமைத்து திருப்பணி செய்து விழா எடுப்பதே குடமுழுக்கு காலஞ் செல்லச் செல்ல விக்ரகங்களைப் பிரதிஷ்டை நெய் திருக்கும் அஷ்டபந்தனச் சேர்க்கை கெட்டுப்போய் சுவாமிக்கும் பீடத்திற்கு அசைவு ஏற்படக் கூடுமாகையால் மீண்டும் அஷ்டபந்தனம் என்னும் சேர்க்கை மருந்தை இடுவார்கள்.

இந்த அஷ்டபந்தன மருந்து சுக்கான், குங்கிலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, பூங்காவி, செம்பஞ்சு, வெண்ணெய், சாதிலிங்கம் ஆகிய எட்டுப் பொருட்கள் சேர்க்கப்பட்டுத் தயாரிக்கப்படுகிறது.

## சங்காபிஷேகம்

வலம்புரி சங்கு மகிமை பெற்றது! சங்கு வைதிக சமயத்தவற்கு மட்டுமன்று பௌத்தர் முதலிய ஏனைய மதத்தவர்க்கும் சிறப்புடையது. இது சிறந்த இரத்தினங்களுள் ஒன்றாக எல்லோராலும் மதிக்கப்படுகின்றது. சங்கின் நாதம் ஆலயங்களில் நடக்கும் மகோற்சவத்தில் 'சர்வவாத்ய' கோஷங்களில் முக்கியமானது இவ்வொலி ஓங்கார ஒலியைக் குறிப்பது.

வைதிக, சைவர்கள், ஆத்மார்த்தமாகவோ பரார்த்தமாகவோ செய்யும் நித்திய நைமித்திய காமிய பூசைகளில் சங்குபூசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஆசாரியர் கண்டா நாதம் செய்து தீபதேவியைப் பிரார்த்தனை செய்ததும் கலச பூசைக்கு முன்னர் சங்குபூசை செய்வார். "நத்தார் படையின்" மகிமை சொல்லுந்தரமன்று. சங்குப்படையின் மத்தியிலே அதன் அதிதேவதைகளாகிய கங்காதேவியும், வருணனும் வசிக்கின்றனர். அதன் பிற்பக்கத்தில் பிரஜாபதி விளங்குகின்றார். அதன் முன் பாகத்தில் கங்கையும், சரஸ்வதியும் உறைகின்றனர். ஸ்ரீவாசுதேவன் ஆணையினாலே மூவுலகத்திலுள்ள தீர்த்தங்கள் யாவும் சங்கின் கண்ணே நின்று நிலவுகின்றனர். இக்காரணத்தினால் சங்கு அறிவாளிகளால் பூசிக்கப்படுகின்றது.

"ஏ! பாஞ்ச ஜன்னியமே! நீ முன்னர் திருப்பாற் கடலில் உதித்தனை! மஹாவிஷ்ணுவினால் கரத்தில் தரிக்கப்பட்ட எல்லாத் தேவர்களாலும் பூசிக்கப்பட்டனை! இப் பெற்றித்தா உன்னைப் போற்றதும். தேவர் தம் பகைவராய பாதலத்து அசுரர்களின் மனைவியரின் கருத்துக்களையெல்லாம் உன் பேரொலியினால் ஆயிரம் துகள்களாக்கினை! உனக்கு வணக்கம்" என்று துதித்து மந்திர பூர்வமாக நிரப்பப்பட்ட சங்கு தீர்த்தத்தின் பாதியினால் கலசத்தை நிரப்பி, மீதிப் பாதியினால் பூசைத் திரவியங்களின் மீதும் தன் சிரசின் மீதும் தெளித்து மீட்டும் மந்திர பூர்வமாகச் சங்கை நிரப்ப வேண்டும்.

கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்திக்குச் சாந்தியாக அமைவது சங்காபிஷேகம். சங்கு இடம்புரி, வலம்புரி, என இருவகைப்படும். அவை புராணங்களில் முறையே வாமா வர்த்தம், தக்ஷிணா வர்த்தம் என்றழைக்கப்படும். இவை இரண்டினுள்ளும் வலம்புரி மிக விசேடமானதும் கிடைத்தற்கரியதுமாகும்.

சங்கு தீர்த்தம் விசேடம் பற்றி பத்மபுராணம் 126ம் அத்தியாயத்தில் சிறப்பான குறிப்புகள் உள. சங்கு தீர்த்தம் தேவர்களுக்கும் பெரு விருப்பமானது. அதன் நீர் புனிதப்படுத்தும் தன்மையது. அது புனிததீர்த்த சொரூபமானது (சாக்ஷாத் பரமேசுவரன் ஒருவரைத்தவிர) எவ்விடத்தில் சங்கொலி உண்டோ அங்கு இலக்குமி நீங்காது வாசம் செய்வாள். எவன் சங்கு தீர்த்தத்தினால் நீராடுகிறானோ அவன் எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிய பலனைப் பெறுகிறான். சங்கு அரியின் உறைவிடம். சங்கு எங்குள்ளதோ அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு தூரத்தில் மூத்தாள் உறைவாள்.

சங்கில் பால் நிரப்பி இறைவனை நீராட்டினால் ஆயிரம் யாகங்கள் செய்த பலனை அடையலாம் என்றும், 'சங்கிலே கங்கா தீர்த்தம் கொண்டு இறைவனை நீராட்டுவோன் பிறவிப் பிணியை வேரறுப்பர்' எனவும் பலவிதமாகச் சங்கு தீர்த்த விசேடம் பற்றிப் பிரமனவ வர்த்தபுராணம் முதலியவை கூறும்.

தக்ஷிணா வர்த்த (வலம்புரி) சங்கின் சிறப்புப் பற்றியும் அதன் இலக்கணங்கள் பற்றியும் சாஸ்திரங்கள் விவரித்துக் கூறுகின்றன.

"வலம்புரிச் சங்கில் வார்த்த நீர்கொண்டு எவன் இறைவனை அர்ச்சிக்கிறானோ அவன் ஏழு பிறவிகளிலும் செய்த வினைகள் யாவும் அக்கணமே நீங்கப் பெறுகிறான்" என்று ஸ்காந்தம் கூறும்.

# மோதகம் எனும் கொழுக்கட்டையின் மெய்ப்பொருள்

விநாயருக்கு உரிய ஒரு சிறந்த நிவேதனப் பொருள் மோதகம். கணபதி அஷ்டோத்திரத்தில் 'மோதகப்பிரியாய நமஹ' என ஒரு நாமம் இருக்கின்றது. விநாயகருக்கு மிகவும் விருப்பமானது என இது பொருள்படுகின்றது. இப்படிப்பட்ட மோதகம் கூறும் உட்பொருள் என்னவென இனி பார்ப்போம்.

வாழைநாருக்கு வாசனை கிடையாது, ஆனால் அதில் வாசனையிருந்த பூக்களை மாலையாக தொடுக்கும் போது பூவுடன் சேர்ந்து நாரும் வாசனை பெறுகிறது. அதனைப்போலவே மோதகத்தினை உருவாக்கும் பொருட்களான வெந்த அரிசிமாவும் பூரணத்துடன் கலந்து மோதகமாகும் போது மிகுந்த சுவை பெறுகிறது. தனிப்பட்ட ருசி எதுவும் அற்ற அரிசி மாவு மனிதனைக்குறிக்கும். பூரணம் என்றால் முழுமையடைந்த எனப் பொருள்படும். "அங்கெங்கில்லாது எங்கும் பிரகாசமாய் நிறைந்திருக்கும் இறைவன் பரிபூரணம் வெல்லமும் தேங்காயும் பருப்பும் சேர்ந்து தயாராகும் பூரணம் இறைவனைக் குறிக்கின்றது. பிள்ளையார் தனது கரங்களில் மோதகத்தினை வைத்திருக்கிறார் "எந்த சிறப்பு இல்லாத நீ அகந்தையை அகற்றிவிட்டு என்னிடம் வருவாயானால் நீயும் இந்த மோதகத்தினைப் போல சிறப்புப் பெறுவாய்" என்ற கருத்தையே மோதகம் குறிக்கின்றது அரிசி மாவும் பூரணமும் தனித்தனியானவை இரண்டையும் கலந்தவுடன் அரிசி மாவின் தனித்தன்மை நீங்கி பூரணமே மேலோங்கி இருக்கிறது. அரிசிமாவும் பூரணத்தின் இயல்பை பெற்று "ஒன்றுதான் இரண்டு அல்ல" என்ற அத்வைத தத்துவத்தை விளக்குகிறது இதுவே மோதகம் கூறும் உட்பொருளாகும். எனவே பிறவிப்பயன் நீங்க இவ்வுலகில் தோன்றிய நாங்களும் விநாயகரைத் தொழுது பிறவிப்பயனை நீக்கி அவர் தம் திருவடிநிகழ அடைவோமாக.

*ம. சஞ்சீவசர்மா*
*கொட்டாஞ்சேனை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்

வாழ்நாட் பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி (MA.Ph.D) கொழும்பு

(யாழ்ப்பாணத்திற் சமஸ்கிருத நெறிப்படுகை தொழிற்படும் முறைமைகள் சில பற்றிய ஒரு பிராரம்பக் குறிப்பு. வாக்கிய பஞ்சாங்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது)

பேராசரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

சமூக வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரே தன்மைத்தவாகவோ, அல்லது மாற்றத்துக்கான முயற்சிகள் அற்றதாகவோ இருப்பதில்லை. சமூக வாழ்க்கை வட்டத்தினுள் எப்பொழுதும், இறையறாத அசைவியக்கம் இருந்து கொண்டேயிருக்கும். குறிப்பிட்ட அந்தச் சமூகத்தின் பாரம்பரியங்கள், நியமங்கள், ஆதர்சங்கள், விழுமியங்களுக்கேற்ப ஒவ்வொருவரும் (இது தனிப்பட்ட ஆள் என்ற அடிப்படையில் நடப்பது அன்று : பெரும்பாலும் குடும்ப அலகு அடிப்படையிலேயே நடப்பதாகும்) ஏதோ ஒரு வகையில், இருப்பதிலும் பார்க்க மேல் நிலைப்பட முயன்று கொண்டிருப்பார்கள். வேறு சிலர் அந்தச் சமூக அமைப்பு முழுவதையும் மீறிய மாற்றத்துக்காக முயன்று கொண்டிருப்பார்கள். அவ்வாறு மாற்றத்தை விரும்புவோர் தமது இலட்சிய சமூக அமைப்பாக, வேறொரு அமைப்பினையே "மாதிரி" யாகக் கொண்டிருப்பார்கள். அது சமூக மாற்றத்துக்கான முயற்சியாகும். இக் கட்டுரையில் அத்தகைய மாற்ற முயற்சிகள் பற்றி நோக்கப்படாது முதலிற் குறிப்பிடப் பெற்றதான, சமூகத்தினை ஏற்றுக்கொண்டு அதற்குள் தமது நிலையை மேனிலைப்படுத்துவதற்கான முயற்சி பற்றியே நோக்கப்படவுள்ளது.

சமூக அசைவியக்கம் (Social Mobility) என்பது இருவகையாகத் தொழிற்படலாம்.

1. ஒருவர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அன்றேல், ஒரு சமூகக் குழுமத்திலிருந்து இன்னொரு சமூகக் குழுமத்துக்குச் செல்லுதல். இதனை கிடைநிலையான (Horizontal) அசைவியக்கம் எனலாம்.

2. ஒருவர் ஒரு குறிப்பிட்ட சமூக மட்டத்திலிருந்து இன்னொன்றுக்குச் செல்வது. இது நிமிர்நிலை (Vertical) யானது, கீழும் செல்லலாம். மேலும் செல்லலாம். ஆனால் அந்தச் செயற்பாட்டோடு அவரது சமூக நிலை மாறும்.

இங்கு நாம் பேசவிருப்பது இரண்டாவது அசைவியக்கம் பற்றியே.

இவ்வாறான மேனிலைப்பாட்டு அசைவியக்கம் ஏற்படுகின்றபொழுது, குறிப்பிட்ட ஒருவரின் அல்லது ஒரு குடும்பத்தின் அல்லது குழுமத்தின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெறும் பல விடயங்களும் புதிய நிலையினை எய்தும். முந்திய நிலையிலிருந்து சில விடயங்கள் கைவிடப்படலாம். அல்லது முந்திய நிலையிற் காணப்பட்ட அன்றேல் கடைப்பிடிக்கப்பட்ட விடயங்கள் புதிய நிலைமைக்கேற்ப புது மெருகுடன், புது விளக்கங்களுடன் (தொடர்ந்தும்) போற்றப்படலாம். எவ்வாறாயினும் ஒரு "தொடர்ச்சி" இருப்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

மூன்றாவது உலக நாடுகளில் இத்தகைய சமூக அசைவியக்கம் ஏற்படும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கற்பாடுடைய பல காரணிகள் தொழிற்படுவதை நாம் அவதானிக்கலாம். நவீன மயப்பாடு (Moderniatzion) ஒரு காரணியாகும். இது பெரும்பாலும் மேனாட்டு மாதிரியமாக (Western Model) அமைத்துக் கொள்வதாகும். ஆனால் அதேவேளையில் இந்த நவீன மயப்பாடு என்பது பாரம்பரியத்தையும் மரபையும் நிராகரிப்பதாக இருக்காது. அதாவது தமது சமூகத் தனித்துவம், பண்பாட்டுத் தனித்துவம் ஆகியன பேணப்படும் முறையிலேயே இந்தச் சமூக அசைவியக்கம் இருத்தல் வேண்டுமென்ற நிலைப்பாடு காணப்படும். மேனாட்டுத் தாக்கத்தினை மறுதலிக்க எடுத்த முயற்சிகள் மூலம், இவர்கள் தமது பாரம்பரியத்தினதும் (Tradition) பண்பாட்டினதும் (Culcure) "மேன்மை"யை புராதனத் தன்மையை, தமக்கு அது இன்றியமைதாததாக இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியத்தை உணர்ந்து கொண்டனர்.

இந்தியப் பண்பாட்டுச் சூழலில் இந்தச் "சமூகமாற்றம்" ஏற்பட்ட பொழுதும் ஏற்படுத்தப்பட்ட பொழுதும் பல சுவாரசியமான நடைமுறைகள் தோன்றின. இந்தியப் பாரம்பரியத்தின், பண்பாட்டின் புராதனத் தன்மை, சிறப்பு ஆகியனவற்றை உணர்ந்து அவற்றைப் பேணியவாறே மேனிலைப்படுத்தல் என்பது அம் மரபுக்குள் நின்று செய்யப்படக்கூடிய ஒன்றன்று. ஏனெனில் இந்தியச் சமூக அமைப்பு அதிகார வைப்பு முறைப்பட்டது. (Hierarchical) ஆகும். அந்த வைப்பு முறையில் சமத்துவம் கிடையாது. ஆனால் நவீன சமூக மாற்றமோ ஏதோ ஒரு வகையில் சமத்துவத் தன்மையை வற்புறுத்துவதாகும். அதேவேளையில், இந்த அசமத்துவங்களினூடேயும், இந்தியப் பண்பாட்டின் புராதனத் தன்மையும், அதன் தனித்துவமும் அழுத்திக் கூறப்பட்டன.

இத்தகைய ஒரு நிலையில், நவீன சூழலில் "முன்னேற்றமான" சமூக "மாற்ற"த்துக்குட்படும் குழுமங்கள், இந்தியப் பண்பாட்டு வட்டத்தினுள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது முக்கியமான ஒரு விடயமாகின்றது.

எந்த ஒரு பண்பாட்டுச் சூழலிலும், அதன் விழுமியங்கள், மரபுகள், ஆதர்சங்கள் போற்றப்படுவதில்லை. அந்தச் சமூக இயக்கம் தொடருவதில் மதத்துக்கு முக்கியமான இடமுண்டு. பண்பாடு என்பது குறிப்பாக தொழில்நுட்ப முன்னேற்றமில்லாத சூழலில் மதத்தினையே மேலாண்மையுடைய அம்சமாகக் கொண்டிருக்கும். அச்சூழலில் மதமின்றி தனி மனிதனது, அன்றேல் குடும்பத்தினது, அன்றேல் குழுமத்தினது சமூக உறவுகள் சீராக ஒழுங்கமைக்கப்படுவதில்லை. மதத்தின் முத்திரை அந்தச்சமூகத்தின் இயங்கு நிலையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

மதம் என்பது அடிப்படையில் நம்பிக்கையும் சடங்குகளுமே (கரணங்களுமே) யாகும். நம்பிக்கை காரணமாகச் சடங்குகள், சடங்குகள் காரணமாக நம்பிக்கை என அவை ஒன்றையொன்று மேவி, மருவி நிற்கும். இந்தச் சடங்குகள் நம்பிக்கைகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட "வாழ்க்கை நோக்கு", "உலகநோக்கு" "தரிசனம்" (Vision) வரும். அந்தத் தரிசனம் தான், அதற்குரிய எடுகோள்களுடன், மத ஞானமாக, இறையியலாக (Thelogy), பின்னர் "மெய்யியலாக" (Phlosophy) முகிழ்க்கும்.

நம்பிக்கையும் சடங்குமின்றி அவற்றுக்கான குறியீடுகள், ஆற்றுவோர், ஆற்றப்படும் முறை, ஆற்றப்படுவதற்கான அமைப்புக்கள் ஆகியனவின்றி சமூக இயக்கம் நடைபெறுவதில்லை.

மேனிலைப்பாடான சமூக அசைவியக்கம் ஏற்படுகின்றபொழுது, உயர்நிலை எனக்கருதப்படுகின்ற ஒரு முறைமைக்கமைய அமைந்து கொள்ளும் தன்மையும் அதேவேளையில் முன்னர் காணப்பட்டவற்றின் தொடர்ச்சியும் முக்கியமானவையாகும்.

இந்தியச் சூழலில் சமூக மாற்றத்தின் பொழுது மதம் (நம்பிக்கைகள், சடங்குகள்) எத்தகைய இடத்தைப் பெறுகின்றது. எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதைப் பற்றிய ஆய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது, பேராசிரியர் எம். என். ஸ்ரீநிவாஸ் அவர்களாற் செய்யப்பட்ட ஆய்வாகும். குடகு மக்களிடையே (Coorgs) சமயமும் சமூக மாற்றமும் தொழில்படும் முறையை ஆராய்ந்த அவர் நவீன நிலைப்பட்ட சமூக மாற்றத்தினிடையே காணப்படும் சமயத் தொழிற்பாட்டை அவர் சமஸ்கிருத நெறிப்படுகை (Sanskritization) எனக் குறிப்பிட்டார்.

அக் கொள்கையின் அடிப்படை இதுதான். இந்தியச் சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்துக்கு ஆளாகும் ஒருவர் அன்றேல் குழுமம், தமது மத முறைமைகளைப் படிப்படியாக உயர் இந்துமத நெறியில் கூறப்படுகின்ற அதாவது சமஸ்கிருத எழுத்துக்களில் உள்ளதென நம்பப்படுகின்ற, முறைமையில் அமைத்துக் கொள்கின்றார்/றது. இப்படிச் சொல்கின்றபொழுது தாம் இதுவரை கடைப்பிடிக்காத சடங்குகள், நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் ஏற்படும் அதேவேளையில் தாம் இதுவரை கடைப்பிடித்து வந்தனவற்றை சமஸ்கிருத நிலைப்படுத்தி அல்லது சமஸ்கிருதமயப்படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரியன போன்று போற்றுதல் மரபாகும்.

இத்தகைய ஒரு நடைமுறை உள்ளது என்பதனை எவரும் மறுக்கவில்லை. ஆனால் இந்த நடைமுறையை ஸ்ரீநிவாஸ் அவர்கள் குறிப்பிட்டதுபோல "சமஸ்கிருத நெறிப்படுகை" (Sanskritization) எனக் குறிப்பிடலாமா அல்லது வேறொரு பெயர் கூறலாமா என்பது பற்றிய நீண்டதொரு விவாதம் நடைபெற்றது. "பிராமணமயப்படுத்தல்' (Brahminizatiion) போன்ற சொற்றொடர்கள் மாற்றாகக் கூறப்பட்டன. ஆனால் கால ஓட்டத்தில் "சமஸ்கிருத நெறிப்படுகை" (Sansklitization) எனும் பதமே நின்று நிலைத்தது. சமூகவியலாளரும், வரலாற்றாசிரியர்களும் இம் முறைமையின் தொழிற்பாட்டினை நன்கு விளக்கியுள்ளனர். ஸ்ரீநிவாஸின் "Social Change of India" என்னும் நூலில் (OUP) இக் கொள்கை நன்கு விளக்கப்பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழரிடையே, குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களிடையே நடைபெறும் மேனிலைப்பாடு மத வழிபாட்டு முறைகளில் எவ்வாறு தொழிற்படுகின்றது. எவ்வெவ் வகையில் தெரியவருகின்றது என்பதனை நோக்குவதற்கு, முதலில் இந்தச் சமூகம் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

யாழ்ப்பாணச் சமூகம், தென்னிந்தியச் சமூகம் போன்று அதிகார வைப்பு முறை நெறிப்பட்டதே (Hierarchical) இந்த அதிகார வைப்புமுறை சாதி முறைமை (Caste System) யினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதி முறைமை இந்திய முறைமையிலிருந்து வேறுபட்டது. இங்கு "பிராமண மேலாண்மை" கிடையாது. இங்கு மேலாண்மையுடைய வெள்ளாள குலத்தினர் நான்கு வருணமுறைமையினுள் சாஸ்திரப்படி "சூத்திரர்களே" இந்தத் தடையிலிருந்து விடுபடுவதற்காக "சற்சூத்திரர்" என்ற ஒரு கோட்பாட்டினையே உருவாக்க வேண்டியிருந்தது. இதனை ஆறுமுக நாவலரின் எழுத்துக்களிலேயே காணலாம். அத்துடன் இந்தச் சற்சூத்திரக் கோட்பாடு காரணமாக சாஸ்திர அங்கீகாரமற்ற ஆனால் மரபு அங்கீகாரமுடைய "பஞ்சமர்" கோட்பாடு இங்கு அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றது.

சற்சூத்திரக் கோட்பாடு வலியுறுத்தப் படுகின்றமைக்கும் சைவ சித்தாந்தக் கொள்கைநிலைப்பாட்டுக்கும் ஒரு சமூக இயைபுண்டு. விரிவஞ்சி அதனை இங்கு வலியுறுத்த விரும்பவில்லை.

பிரித்தானியா ஆட்சிக் காலத்திலும், அதன் பின்னரும் ஏற்பட்ட பலவேறு மாற்றங்கள் காரணமாக சாதி முறைமையின் இறுக்கம் குறைந்துள்ளது. கல்வி வாய்ப்பு உத்தியோக வாய்ப்பு, (புதிய தொழில்களின் வருகை புதிய தொழிநுட்பங்கள் கொண்டு வந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தொழில்கள்) புதிய ஊதிய முறைமைகள், வேதன உழைப்பு (Wage Labour) ஏற்படுத்தும் சமத்துவம் ஆகியன காரணமாகச் சாதியமைப்பின் இறுக்கம் குறைகின்றது.

உண்மையில் சாதியமைப்பின் இறுதிச் சின்னங்களில் ஒன்றாக விளங்கியது, விளங்குவது கோயில்கள் "திறக்கப்" படாமலிருப்பதாகும். முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த சாதியினர், நவீன காலத்தில் தமக்கு ஏற்பட்டுள்ள சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கத்தை ஏற்புடைமையுள்ள ஒரு முன்னேற்றமாக்கிக் கொள்ள விரும்பியதன் காரணமாகவே, யாழ்ப்பாணத்தில் கோயில் திறப்பு நடவடிக்கை தென்னிந்தியாவிலும் பார்க்க வன்மையுள்ள கோஷமாக அமைந்து வந்துள்ளது.

இந்தச் சாதியமைப்பின் தளர்வு காரணமாக, முன்னர் நிலவிய சாதிகள் பல இப்பொழுது அருகிப்போய், பெருஞ்சாதிக் குழுக்களே முக்கியமாகிக் கொண்டு வருகின்றன. 'கள்ளர், மறவர், கனத்த அகம்படியார் மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர்களானார்கள்' என்பது இதனை நிரூபிக்கும். யாழ்ப்பாணத்தின் முந்திய சாதிகள் பல இப்பொழுது அருகிவிட்டன. வெள்ளாளர், கோவியர், கரையார், கம்மாளர் எனப் பெரு வட்டங்களாகவுள்ளன.

சாதியமைதியின் இறுக்கம் குலைந்தாலும் சாதித்தரள்நிலை தரும் "குழும ஒருங்குணர்வு" இன்னும் தளரவில்லை. விவாகம் பெரும்பாலும் சாதியமைப்புக்குள் நடைபெறும் ஒன்றாக இருப்பது இதற்கான முக்கிய காரணமாகும்.

சாதியமைப்பு இந்நிலையிற் காணப்பட, அதேவேளையில், கல்வி வளர்ச்சி காரணமாகவும், இனக்குழும ஒருமைப்பாட்டுணர்வு காரணமாகவும் மரபு பண்பாடு பற்றிய உணர்வும் பெரிதும் வளர்ந்துள்ளன. சாதியமைப்பின் தன்மை காரணமாக பண்பாட்டப் பகிர்வுப் பங்கெடுப்பில் பின் நிற்க எவரும் தயாராகவில்லை. முன்னர் நிகழ்ந்தது போன்று சமய மாற்றதினுள் தமது சமூக விமோசனத்தைக் காணவும் இவர்கள் விரும்பவில்லை. இதனால் ஒவ்வொரு குழுமத்தினரும், குழுமங்களின் குடும்பத்தினரும் தமது சமூகநிலை மேனிலை எய்த எய்த, தமக்குக் கிட்டிய புதிய சமூக அந்தஸ்துக்கேற்ப, தமது மத அநுட்டானங்களையும் அமைத்துக்கொள்ள விரும்பினர். அதாவது யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணத்துச் சூழலுக்கேற்ப சமஸ்கிருத நெறிப்படுகை தொழிற்படத் தொடங்கிற்று.

யாழ்ப்பாணத்துச் சூழலுக்கு ஏற்ப நிகழும் சமஸ்கிருத நெறிப்படுகையின் மிக முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்று, ஒவ்வொரு சாதிக்கும் அல்லது "பகுதி" க்குமுள்ள கோயில்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமையாகும்.

நமது சமூக ஒழுங்கமைப்பில் கோயில் முக்கிய இடம் பெறுகின்றது. அது சமூகச் செல்வாக்கின், சமூகக் கட்டுப்பாட்டின் முக்கிய மையங்களில் ஒன்று. அந்தக் கோயிலில் நமக்குள்ள அந்தஸ்துக்கும், நமக்குச் சமூகத்திலுள்ள அந்தஸ்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கிராமங்களிலுள்ள கோயில்கள் திருவிழாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள முறைமையினை நன்கு அவதானித்தால் இது புலனாகும்.

புதிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் தங்கள் அந்தஸ்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளக் கோயிலில் இடம்பெற விரும்புகின்றனர். அதற்கு அந்தக் கோயில் இடம் கொடுக்கவில்லையெனில், அவர் தனக்கு அந்த இடத்தைத் தரும் கோயிலுக்குச் செல்வதோ, கோயிலைத் "தோற்றுவிப்பதோ" இயல்பே.

மேலும் சமூக மேனிலைக்கு வந்துள்ள ஒருவரிடம் தமது நம்பிக்கையின் தளமாக விளங்கிய வழிபாட்டுத் தலத்தையும் வழிபடு கடவுளையும் தனது புதிய சமூக அந்தஸ்திற்கேற்ப வைத்து வணங்கும் ஊக்கம் ஏற்படுவதும் இயல்பே. அவ்வாறு மேனிலைப்படும் பொழுது வழிபாட்டுத்துறையில் இவற்றின் பிரதிபலிப்புக்கள் தெரிவது இயல்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அறிவதற்கான முக்கியமான சான்றாக அமைந்திருப்பது நமது அன்றாட சமூக - சமய வாழ்க்கையில் இன்றிமையாத இடத்தைப் பெறும் பஞ்சாங்கமாகும். இந்துத் தமிழ் மக்களிடையே மிகப் பெரிய அளவிற் பயன்படுத்தப்படும் ஒரேயொரு நூல் பஞ்சாங்கமே.

இந்தப் பஞ்சாங்க ஆக்கம் இரு வேறு மரபுகளில் வருவது. ஒன்று வாக்கிய மரபு, மற்றது கணித மரபு. வாக்கியமரபே யாழ்ப்பாணத்தில் பெரிதும் போற்றப்படுவது. ஒவ்வொரு வருடமும் குறைந்தது 65,000 (அறுபத்தையாயிரம்) பிரதிகள் அச்சிடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

வாக்கிய பஞ்சாங்கங்களைக் காலவரன்முறை ஒழுங்கமைப்பில் வைத்து நோக்கும் பொழுது சமூக மேனிலைப்பாட்டுக்கும் வழிபாட்டுக்குமுள்ள தொடர்புகள் தெட்டத் தெளிவாக தெரிய வருகின்றன.

இந்தக் கட்டுரையாக்கத்துக்காக பத்தாண்டு இடைவெளிப்பட்ட பஞ்சாங்கங்களைச் சான்றாகக் கொள்ளப்பட்டுள்ளன. வழிபாட்டின் சமூகத் தளங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மைகளை நன்கு புலப்பதிவு செய்துகொள்வதற்கு இது உதவும். பின்வரும் வருடங்களுக்குரிய வாக்கிய பஞ்சாங்கங்கள் பயன்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| ரத்தாக்ஷி வருடம் | (1924 - 25) |
| பிரதோதாத வருடம் | (1930 - 31) |
| விக்கிரம வருடம் | (1940 - 41) |
| விரோதி வருடம் | (1949 - 50) |
| பிலவ வருடம் | (1961 - 62) |
| சாதாரண வருடம் | (1970 - 71) |
| ராக்ஷத வருடம் | (1975 - 76) |
| ரௌத்திரி வருடம் | (1980 . 81) |
| விபவ வருடம் | (1988 . 89) |

இப் பஞ்சாங்கங்களைப் பயன்படுத்தும் பொழுது அவ்வக் காலங்களில் நடைபெற்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களையும் மனத்திற் பதித்துக்கொள்ளல் அவசியமாகும். அந்தப் பின்புல அறிவின்றி பஞ்சாங்கங்களில் கிடைக்கும் தகவல்களை உரிய முறையில் வியாக்கியானித்தல் முடியாது.

சமஸ்கிருத நெறிப்படுகையின் முக்கிய மூலாதார பண்பு வழிபாடு இந்துமத மரபின் செந்நெறி மரபு என்று கருதப்படும். சமஸ்கிருத நெறிப்பட நடாத்தப்படுவதேயாகும்.

பஞ்சாங்கம் என்பது நியமமான இந்து நடைமுறைகளைத் தரும் ஒரு ஆவணமாகும். ஒரு வழிபாட்டிடம், அங்கு நடக்கும் வழிபாடு, வைபவம் ஆகிய பஞ்சாங்கத்தில் இடம்பெறுவதே இவை உயர் நெறியைச் சார்ந்தவை என்ற மனப்பதிவை ஏற்படுத்தும்.

வழிபாடு, வழிபாட்டு வைபவம் அதற்குரிய காலம் பற்றிப் பஞ்சாங்கங்களிற் கிடைக்கப்பெறும் தகவல்கள், அவை எத்துணை ஒழுங்கமைப்புடன் போற்றப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டும் பஞ்சாங்கங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யும் ஆய்வில் முதன் முதலில் நமது கவனத்தை ஈர்ப்பது பஞ்சாங்கத்தில் இடம்பெறும் வழிபாட்டிடங்களின் தொகையும், வழிபாட்டு முறைமைகளின் தொகையும் அதிகரித்துச் செல்வதேயாகும். வழிபாடு, வைபவம் பற்றிய தகவல்கள் குறித்த வழிபாட்டிடப் பொறுப்பாளர்களிடையே அனுப்பப்பெறுதல் வழக்கம் என்பதனையும் முக்கிய கோயில்களுக்குப் பஞ்சாங்கக்காரர் தாமே முன்னின்று திகதிகளைக் குறித்துக் கொள்வர் என்பதனையும் நாம் இங்கு மனங்கொள்ளல் அவசியம்.

தேவாலய உற்சவவிவரங்கள் தரப்படும் முறைமையில் காணப்படும் மாற்றங்களை அவதானித்துக் கொள்ளல் நன்று.

**1924 - 25**

தேவாலய உற்சவங்கள் எல்லாம் (பொங்கல் உட்பட) ஒருங்கே குறிப்பிடப்படுகின்றன. ஆலயங்களின் தொகை 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1930 - 31**

உற்சவங்கள் கிராமவாரியாக (அகரவரிசைப்படுத்தப்பட்டு) தரப்பட்டுள்ளன. உதாரணமாக கரணவாய் - கரவெட்டிக்கு இரண்டு கோயில்களின் பெயர்களேயுள்ளன. 1988 - 89க்கு 12 கோயில்கள் இடம்பெறுகின்றன.

**1940 - 41**

இந்திய, இலங்கைத் தேவாலயங்களின் உற்சவங்கள் தனித்தனியே தரப்படுகின்றன. ஆனால் இப்பொழுது மாதவாரியாக உற்சவங்கள் தரப்படுகின்றன. இந்த முறையே தொடர்ந்து பேணப்படுகின்றது.

**1949 - 50 இல் பின்வரும் முறையில் விபரங்கள் தரப்படுகின்றன.**

1. நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள்
2. தேவாலய மகோற்சவம் (மாதவாரியாக)
3. தேவாலய அலங்கார உற்சவம்
4. தேவாலய சங்காபிஷேகம், தண்டிகை
5. தேவாலய அபிஷேக தினம்
6. தேவாலய பொங்கல்
7. தேவாலய விஷேச உற்சவம்

இக் கட்டத்தில் மஹோற்சவம், அலங்கார உற்சவம், சங்காபிஷேகம் என்பனவற்றின் வேறுபாட்டை விளங்கிக்கொள்ளல் வேண்டும். மஹோற்சவம் என்பது வருடத் திருவிழாவாகும். இது நடக்கும் கோயில்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்டனவாக வருட மஹோற்சவத்துக்கான தகுதியுடையனவாயிருத்தல் வேண்டும். இத்தகைய கோயில்களில் ஆகம முறைமை இயன்றளவு முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சங்காபிஷேகம் என்பது மஹோற்சவ நிலைக்குக் குறைந்த ஒன்றாகும். வருடத்தில் ஒருமுறை சங்காபிஷேகம் அல்லது அபிஷேகம் நடைபெறும்.

எனவே கோயில்கள் தரவாரியாகப் பிரிக்கப்படுவதற்கான நிலைமையுண்டு என்பதனை மனதிற் கொள்ளல் வேண்டும்.

பொங்கல் என்பது உண்மையான ஆகம வண்ணம் அன்று. அது கிராமிய நிலைப்பட்ட வழிபாட்டு முறைமையேயாகும்.

பொங்கல், குளித்தி என்பது ஆகமஞ்சாரா வழிபாட்டு முறைமைகளாகும். 1949 - 50 பஞ்சாங்கத்திற் பொங்கல் செய்யப்படும் கோயில்களின் பட்டியல் தரப்படுகின்றது. ஆனால் 'குளுத்தி' பற்றிய பஞ்சாங்கத் தகவல்கள் 1970 - 71 இல் காணப்படுகின்றது. இங்கு குளுத்தி என்பது சமஸ்கிருதநெறிப்பட்ட மொழிநடையில் "திருக்குளிர்ச்சி" எனக் குறிப்பிடப்படுகின்றது.

பொதுவாக நோக்கும் பொழுது வருடாவருடம் கோயில்களின் தொகை அதிகரித்துச் செல்வதைக் காணலாம். பஞ்சாங்க அந்தஸ்து கோயிலுக்கு அவசியமெனும் அபிப்பிராயம் வளர்வதை நன்கு அவதானிக்கலாம். பூரண ஆகம முறையிலான வழிபாடுகள் அற்ற இடங்களும் பொங்கல், குளிர்ச்சி எனும் வழிபாட்டு முறைமைகள் மூலமாகவே இடம்பெற்று விடுகின்றன,

இவ்வாறு பஞ்சாங்க அந்தஸ்துப் பெறும் கோயில்களின் தொகை ஒருபுறம் அதிகரித்துச் செல்ல மறுபுறத்தில் சில முக்கியமான கோயில்களின் உற்சவங்கள் தனியே தரப்படும் முறைமையும் வளர்ந்து வருவதைக் காணலாம். நல்லூர்க் கந்தசாமி கோயில் உற்சவங்கள் 1949 - 50 இலிருந்து தனித்துக் குறிப்பிட பெறுகின்றன. அடுத்து 1970 - 71 இல் நல்லூருடன் கோட்டை முனியப்பர், வண்ணை வெங்கடேசப் பெருமாள், உசன் கந்தசாமி கோயில்கள் இடம்பெறுகின்றன. 1975-76 இல் நல்லூர் முனியப்பர் (முனீஸ்வரன் எனும் பெயரை நோக்குக) காரைநகர் சிவன், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்கள் இடம் பெறுகின்றன. திருக்கேதீஸ்வரத்தின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதையும் நாம் அவதானித்துக் கொள்ளலாம். திருக்கேதீஸ்வரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையில், திருவிழாக்களின் பெயர்களும் நடத்துபவர்களின் பெயர்களும் பஞ்சாங்கத்தில் இடம்பெற்றன.

தனிப்பட்ட கோயில்களின் உற்சவ விபரங்களைத் தனிப்படத் தரும் இச்செயல்நெறி 1980 - 81 இல் உச்சக் கட்டத்தை அடைவதை அவதானிக்கலாம். ரௌத்திரி வருடப் பஞ்சாங்கத்தில், நல்லூர், கோட்டை முனிஸ்வரரைவிடப் பின்வரும் கோயில்களும் இடம்பெறுகின்றன.

தெல்லிப்பளை ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயம்
அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்
மட்டுநகர் மாமாங்கேஸ்வரப் பிள்ளையார்
ஏழாலை அம்பலவாணேஸ்வரர்
திருக்கேதீஸ்வரம்
காரைநகர் சிவன் (ஈழத்துச் சிதம்பரம்)
நயினார்தீவு நாகபூஷணியம்மை (நயினாதீவின் தரப்பட்டுள்ள முறைமையை நயினார் தீவு நோக்குக)
ஏழாலை புவனேஸ்வரி அம்மன்
மாவிட்டபுரம் கந்தசாமி
கொக்குவில் மஞ்சவனப்பதி
உசன் கந்தசாமி
வல்லிபுரம் ஆழ்வார்
பொன்னாலை வரதராஜப் பெருமாள்
வண்ணை வரதராஜப் பெருமாள்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம்
அச்சுவேலி காட்டுமலை கந்தசாமி ஆலயம்

இப் பட்டியலில் வரும் எல்லாக் கோயில்களும் பிரதேச முக்கியத்துவம் உடையன என்ற கூறுவது சிரமமே. அவ்வப்பகுதியினரின் ஆர்வம், செல்வாக்கு என்பன காரணமாகவே இக் குறிப்புக்கள் இடம்பெற்றன என்று சொல்வதிலே தவறு இருத்தல் முடியாது.

இப் பஞ்சாங்கங்களைப் பார்க்கும் பொழுது இன்னொரு முக்கிய சமஸ்கிருத நெறிப்படுகை முறைமை தெரியவரும். அதாவது ஆகம முறைப்படி தொழிற்படும் கோயில்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்வதைக் காணலாம். முன்னர், பொங்கல், குளுத்தி நடத்தி வந்த கோயில்கள் படிப்படியாக மஹோற்சவக் கோயில்களாக மாறுவதை நாம் அவதானிக்கலாம். உதாரணமாக முன்னர் சங்காபிஷேகக் குறிப்புக் கொண்ட கோயிலாகவிருந்த கரவெட்டி கிழக்கு கிழவித்தோட்டம் பிள்ளையார் கோயில் பின்னர் மஹோற்சவக் கோயிலாக மாறுகின்றது. அதே போன்று முன்னர் பொங்கல் பற்றிய குறிப்பினையே கொண்ட நல்லூர் இலங்கைநாயகி அம்மன் கோயில் இப்போது மஹோற்சவக் கோயிலாக (1970 - 71) மாறுகின்றது. இந்தப் பண்பினை நாம் யாழ்ப்பாணம் முழுவதிலும் பல இடங்களிற் காணலாம்.

யாழ்ப்பாணத்து சமஸ்கிருத நெறிப்படுகையின் இன்னொரு வெளிப்பாடாக அமைவது, சிறு பாரம்பரியத் தெய்வங்கள் பெரும் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப்படுவதாகும். இதற்கு நல்ல உதாரணங்களாக அமைபவை அம்மன் கோயில்களே. முன்னர் கண்ணகி அம்மன் கோயில்களாகவிருந்த பல கோயில்கள் இப்பொழுது உயர் பாரம்பரியக் கடவுளரின் பெயர்களைக் கொண்ட கோயில்களாகவுள்ளன.

உ -ம் விபவ (1988 -90) வருடப் பஞ்சாங்கத்தில் வரும் பின்வரும் குறிப்புக்கள் உள்ளன.

- "புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி"
- "புத்தூர் கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி"

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலும் இத்தகைய ஒரு பெயர் மாற்றத்தைப் பெற்றுள்ளது.

சிறு பாரம்பரியத் தெய்வங்களை உயர் மரபுத் தெய்வங்களாகக் கொள்வத ஒரு புறமிருக்க, முன்னர் குறிப்பிட்டபடி, சிறு பாரம்பரிய வழிபாட்டு முறைகளும் (பொங்கல், குளித்தி) உயர் வழிபாட்டு முறைமைகள் ஆகக் கொள்ளப்படுவதை நோக்கத்தவறக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உயர்நிலைப்படுத்தப் பொழுது சில கோயில்கள் உயர்நிலைச் சுட்டினாற் குறிப்பிடப்பெறும் ஒரு பண்பும் உருவாகின்றது. இதற்கான நல்ல உதாரணமாக அவைது காரைநகர் சிவன் கோயிலாகும். முன்னர் காரைநகர் சிவன் கோயிலாகக் குறிப்பிடப்பெற்ற இக்கோயில் பின்னர் "ஈழத்தச் சிதம்பரம்" எனக் குறிப்பிடப் பெறுகின்றன. (1980 - 81)

யாழ்ப்பாணத்துக் கோயில்களை நோக்கும் பொழுது இங்கு பிள்ளையார் கோயில்களே அதிகமாக இருப்பது தெரியவரும். எந்த ஒரு வருடத்துப் பஞ்சாங்கத்தினைப் பார்த்தாலும் இந்த உண்மை தெரியவரும். பிள்ளையார் வணக்கம் இங்கு விவசாயத்துடன் தொடர்புள்ள ஒரு வணக்கமுறையாகவே கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் சிவன்கோயில்களின் தொகை குறைவு. விவசாயம் சாராதவர்களும் தமது பரம்பரையான வழிபடு தெய்வங்களுக்கு மேலாகத் தமக்கெனக் கோயில்களை அமைக்கும் பொழுது பிள்ளையார் கோயில்களையே அமைத்துக் கொண்டனர் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலக் கோயில் வளர்ச்சியை நோக்கும் பொழுது அம்மன் கோயில்கள் அதிகமாகிக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். கண்ணகை அம்மன், மாரியம்மன் வழிபாடு அதிகரித்துக்கொண்டு வருகின்றது. பஞ்சாங்கங்களில் வரும் குளிர்ச்சி, பொங்கல் வைபவங்கள் பெரும்பாலும் அம்மன் கோயில்களிலேயே நடைபெறுகின்றன. இவற்றுக்கான பஞ்சாங்க அந்தஸ்துப்பேறு அடிநிலை மக்களின் சமூக மேனிலை அசைவியக்கத்தைச் சுட்டி நிற்கும் ஒன்று என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. அடிநிலை மக்களின் வழிபாட்டு முறைமைகளுக்கு நியமமான சமூக அங்கீகாரம் கிடைக்கும் பொழுது, சிறு பாரம்பரியத் தெய்வங்கள் உயர் பாரம்பரியத் தெய்வங்களாகப் போற்றப்படுவது வழக்கமாகும். (இத்தகைய ஒரு நிலையினை தமிழகத்தில் அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்று வரும் மாரியம்மன் வழிபாட்டிலிருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய ஒரு நிலை கி.பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளிலும் ஏற்பட்டதென்பர்.

இந்த சமஸ்கிருதநெறிப்படுகையில் சமூக உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ளல் அவசியம். ஒரு புறத்தே நோக்கும் பொழுது ஒரு வகைப்பட்ட சமய சனநாயகத்தை இப்பண்பு குறிக்குமதே வேளையில், இப்பண்பு இதற்கு முன்னர் சமூகச்செல்வாக்கற்றிருந்த குழுமங்கள் இப்பொழுது சமூகச் செல்வாக்குடையனவாக மேற்கிளம்பியுள்ளன என்பதையும் சுட்டுகின்றது. வெளிநாட்டுழைப்பினாற் கிடைக்கும் பணவருவாய் சமூகத்தில் சகல மட்டங்களிலும் பரவியுள்ள இன்று, சக்தி இந்த வளர்ச்சி காணப்படுவது இயல்பே. பண வருவாய் மாத்திரம் இதற்கான ஊக்க சக்தியாகாது. பண்பாட்டிற் பங்குகொள்ளும் உத்வேகமும் உயர் பண்பாடு என்று கருதப்படுவதை தம் வயப்படுத்திக் கொள்ளும் ஆர்வமும் இதற்கு ஆதார சுருதியாக அமைகின்றது.

கோயிலோடு சம்பந்தப்பட்டிருத்தல் என்பது அன்றைய ராஜராஜசோழன் முதல் இன்றைய சாதாரண ராசையா வரை சகல தமிழரிடத்தும் காணப்படும் ஓர் அந்தஸ்துணர்வாகும்.

நமது பண்பாடு வலுவாக நிலைத்து நிற்பதற்கு இந்த உணர்வு உதவியுள்ளது. இன்றும் உதவுகின்றது. தொடர்ந்தும் உதவ நமது சமயவிற்பன்னர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

**பின்குறிப்பு :-**

இக் கட்டுரையாக்கத்துக்கு வேண்டிய உசாத்துணையாக அமைந்த பஞ்சாங்கங்களைத் தந்துதவிய வல்வைச் சோதிடர் திரு. செ. உத்தமசீலன் அவர்களுக்கு என் நன்றியுரித்தாதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தாப்பதத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமணகுலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள்

வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி, சி. க. சிற்றம்பலம், M.A., Ph.D,
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈழம், தமிழகம் ஆகியவை பண்டு தொட்டு நாகரிக வளர்ச்சி கண்ட பிரதேசங்களாகும். ஈழத்தில் பௌத்த மதம் கி.மு. 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கால் கொள்ள முன்னர் தமிழகத்தை ஒத்த நாகரிக வளர்ச்சி கண்டவர்கள் ஈழத்து மக்களாவர். இப்பகுதியினரும் இந்துக்களாகவும் வாழ்ந்தனர். எனினும் அக்கால இந்துமத நடைமுறைகள் ஆரிய வடஇந்திய வேத நெறி கலவாத ஒன்றாகவே ஆதிகாலத்தில் இரு நாடுகளிலும் காணப்பட்டாலும் கூட வட நாட்டில் ஏற்பட்ட வேதநெறிக் கலாசாரம் தமிழகத்திலும், ஈழத்திலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவத்தொடங்கியது. இதனால் இப்பிராந்தியங்கள் இக்கலாசாரத்தின் அம்சங்களைக் கைக் கொள்ளுவதில் அக்கறை காட்டினாலும் கூட நகரங்களிலும் முக்கிய வணிக மையங்களிலுமே இதன் தாக்கம் காணப்பட கிராமிய மட்டத்தில் பழைய நடைமுறைகளே காணப்பட்டன. எனினும் காலகதியில் கிராமிய மட்டத்திலும் குறிப்பாக கிறிஸ்த்தாப்த காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இதன் தாக்கம் ஏற்படத் தவறவில்லை.

தமிழகத்தில் பண்டைய சுதேச இந்து முறைகள் பெற்றுக் காணப்பட்டாலும் கூட வட இந்திய வேதநெறிக் கலாசார அம்சங்கள் மெல்ல மெல்ல இதனுள் கலக்கத் தொடங்க, இரண்டும் காலகதியில் சங்கமமாகும் நிலையும் காணப்பட்டது. ஈழத்திலோ எனில் வேதநெறிக் கலாச்சாரத்திற்கு எதிராகத்தோன்றி வளர்ந்த பௌத்த கலாச்சாரம் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வலுவுடன் காணப்பட்டாலும் கூட ஈழக்கலாச்சாரத்தில் வேதநெறிக் கலாச்சாரப்பண்புகள் பௌத்தம் வரமுன்னரும் அதற்குப் பின்னரும் கலக்கத் தவறில்லை துரதிஷ்டவசமாக சங்க இலக்கியங்கள் போலன்றி ஈழத்துப் பௌத்த வரலாற்று நூல்கள் யாவும் பௌத்த கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதால் இத்தகைய வேதநெறிக் கலாச்சார அம்சங்கள், சுதேச இந்துக் கலாச்சார அம்சங்கள் ஆகியனவற்றை வெறுப்புடன் நோக்கத் தவறவில்லை. இந்நூல்களில் இவை தவறான வழிபாட்டு முறைகள் என அடிக்கடி விளிக்கப்படுவதால், இவை பற்றிய செய்திகள் பலவற்றை இவை தரவும் தவறி விட்டன எனலாம். இருந்தும் தரப்பட்ட செய்திகளை நோக்கும் போதும், தமிழகத்தில் சமகாலத்தில் வேதநெறிக் கலாச்சாரம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை காணும்போதும் பெருமளவுக்கு ஈழத்துப் பிராமண குலங்களின் செல்வாக்குப் பற்றி அறிய முடிகின்றது.

இக்கலாச்சாரத்தினை எடுத்து வந்த தூதுவர்களாக விளங்கியவர்கள் பிரதானமாகப் பிராமண குலத்தவரேயாவர். இவர்களின் பங்களிப்பில் பிரதானமாக இரு அம்சங்கள் உள. அரண்மனை அக்கால அரசியலமைப்பு முறையில் இவர்களுக்கு பிரதான இடத்தைக் கொடுத்தது. பட்டாபிஷேகம் அக்கால அரச முறையில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. மன்னன் முடிசூடும் போதும் வேதநெறி வழியான பட்டாபிஷேகத்தைச் செய்வதன் மூலம் அம் மன்னனுக்கு பலம், அரசாளும் திறன், தெய்வங்களின் ஆசி, பாதுகாப்பு, நீடிய ஆயுள் கிடைக்குமென்ற நம்பிக்கை அக்காலத்தில் நிலவியது. பட்டாபிஷேகத்தின் போது இதனை நடாத்தியவர்களில் அச்சாணியாக பிராமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தினைச் சேர்ந்த 'புரோகிதர்' விளங்கினார். புனித நதிகள், நீர் நிலைகள் ஆகியனவற்றிலிருந்து எடுத்து வரப்பட்ட நீரில் புலித்தோலில் மன்னர் இருக்க சாவித்திரி, இந்திரன், பிருகஸ்பதி, மித்திரன், வருணன் ஆகியோரை உச்சரித்து அபிஷேகம் செய்யப்படும் வைபவமே இ.'.தாகும். இப்புரோகிதர் இவ்வாறு செய்ய அரசன் தான் தர்மத்தின் வழி ஒழுகுவேன் என்றும், பிராமணர்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன் என்றும் கூறக் கடமைப்பட்டவன் ஆவான். இப்புரோகிதனே அரசநெறி தளைத்தோங்கப் பல்வகைப் கிரியைகளையும், யாகங்களையும் செய்யும் தகுதி பெற்றவனாகவும் விளங்கினான். உண்மையிலே அரசனின் குருநாதனாகவே புரோகிதர் விளங்கினர். இவர் உதவி இன்றி அரசன் மேற்கொள்ளும் கிரியைகளோ அன்றி யாகங்களோ எவ்வித பலனையும் தரா. இப்புரோகிதர்கள் அரண்மனையில் பிறப்பு இறப்பு சம்பந்தமான கிரியைகள், அரசனின் கனவுகள் அவை பற்றிய விளக்கங்கள், அரச குலங்களில் மங்கலக் குறியீடுகள் பற்றிய விளக்கங்கள் ஆகிய கடமைகளில் ஈடுபட்டிருந்ததோடு பலவகைச் சாத்திரங்களிலும், கைதேர்ந்திருந்ததனால் அரசனின் பிரதம ஆலோசகர்களாகவும் அரசை ஒரு வகையில் வழிநடாத்துவதில் செல்வாக்குடையவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் வெறும் சமயக் கிரியைகளில் மட்டுமன்றி அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாகக் காணப்பட்டனர்.

பௌத்தம் ஈழத்தில் கால்கொண்ட பின்னர் இவர்களின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. ஆனாலும் அக்கால அரச அமைப்பு முறையில் இவர்களின் கடமைகளைப் பௌத்த பிக்குமார் நிறைவேற்ற முடியாததால் தொடர்ந்தும் இவர்கள் செல்வாக்கு அரண்மனையில் காணப்பட்டது. எனினும் சங்க இலக்கியங்களில் அரசர்கள் மேற்கொண்ட பலவகையான யாகங்கள் பற்றிய குறிப்புக்கள் உள. உ-ம் மதுரைக் காஞ்சியில் (494-95) பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று வரும் செய்தியாகங்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்த மன்னர்கள் பற்றிய தகவல்களுக்கு ஓர் உரைகல்லாகவே விளங்குகிறது. (Kuppnswany T.V. 1978) ஈழத்திலும் பல்வகை யாகங்கள் பற்றியும் அவற்றை நடாத்துவதில் பெருமை கண்ட மன்னர் பற்றியும் விபரமான தகவல்கள் காணப்படாவிட்டாலும் கூட 'யாகம்' 'பிராமணர்' இருந்து மந்திரம் உச்சரிக்கும் மண்டபம் போன்ற குறிப்புகள் இங்கும் இவை நடைபெற்றிருக்கலாமென எண்ண வைக்கிறது. பிராமணர்கள் ஆசிரியர்களாக, பல்வகைத் தொழிலில் ஈடுபட்டவர்களாகவும், சங்க இலக்கியங்களில் வரும் குறிப்புக்கள் போன்று (Knoouswany T..V. 1978) ஈழத்துப் பாளி நூல்களிலும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத்தகைய குறிப்புக்கள் பலவகைக் காலங்களில் எழுதப்பட்டாலும் கூட இவற்றை வெறுக்கும் பௌத்த நூல்களில் இன்னொரு சமயகுலங்கள் பற்றி வரும் குறிப்புக்களாக இவை விளங்குவதால் இக்காலத்தில் தவிக்கப்படாத தொன்றாகவே இவை காணப்பட்டதாலே தான் இந்நூல்களில் இவை இடம்பெற்றன என்று எண்ணத் தோன்றுகிறது. சங்க இலக்கியங்களில் பிராமண தோத்திரங்கள் பற்றியும் குறிப்புகள் உண்டு. துரதிஷ்டவசமாக இவை ஈழத்து இலக்கியங்களில் காணப்படவில்லை ஆனால் ஈழத்துப் பிராமிக்கல்வெட்டுகளில் பலவகைத் தோத்திரங்கள் பற்றிய செய்தியுண்டு.

ஈழத்தின் வரலாற்றுக்காலம் கி.மு. 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது. இதற்கு முன்னுள்ள பகுதி ஈழத்தில் பிற்கால நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட குடியேற்றங்கள் நடைபெற்ற வரலாற்று தயகாலமாகும். இக்காலத்தில் வரும் விஜயன் பண்டுகாபயன் கதைகள் வெறும் ஜதீகங்களே எனினும் இக்காலப்பகுதியிலே வரும் பிராமண குலங்கள் பற்றி வரும் குறிப்புகள் அவதானிக்கத்தக்கவையாகும். விஜயன் குடியேற்றம் நடைபெற்ற காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டாகும். மகாவம்சம் விஜயனுடன் உபத்திஸ்ஸ என்ற பிராமணன் வந்து அநுராதபுரத்தின் வடக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உபதிஸ்ஸகம' என்ற குடியேற்றத்தினை அமைத்தது பற்றிக் குறிப்பதோடு (M.V.Vii ; 44) இவனே விஜயனின் புரோகிதராகவும் விளங்கியதையும் எடுத்தியம்புகிறது. (MV. Viii 4-5) பின்னர் விஜயன் வாரிசுரிமை இன்றி இறந்தபோது முறைப்படி வாரிசுரிமையுடைய .... கதேவ இந்தியாவிலிருந்து வந்து அரசாட்சிப் பொறுப்பினை ஏற்குமளவிற்கு ஒரு வருட காலம் அரசினை நிருவகித்தவரும் இவனே. இதே நூலில் உபதிஸ்ஸவுக்குப் பின்னர் மந்திரங்களிற் கைதேர்ந்த பிராமணர்கள் பற்றியும் அரண்மனையில் ஆலோசகர்களாக இவர்கள் இருந்தது பற்றியும் குறிப்புக் காணப்படுகிறது. (M.V. ix :2)

யாழ்ப்பாண வைபவ மாலையில் விஜயனின் காலத்தில் அனுராதபுர அரசின் நாலு திசைகளிலும் அதற்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஆலயங்கள் பற்றி வரும் குறிப்புக்கள் துறைமுகப்பட்டினங்களான இவற்றில் பௌத்தம் ஈழத்திற்கு வரமுன்னர் நிலைத்திருந்த ஆலயங்கள் பற்றிய செய்திகளாக மட்டும் காணப்படுவது மட்டுமன்றி இவ்வாலயங்களில் கிரியைகளில் ஈடுபட்ட பிராமணர் பற்றியும் வரும் மறைமுகமான குறிப்புகளாகவும் அமைகின்றன எனலாம். இக்குறிப்பில் தவறுதலாகத் திரிகோணமலையிலுள்ள கோணேஸ்வரத்திற்குப் பதிலாகத் தம்பலமாகக் கோணேஸ்வரம் குறிக்கப்பட்டுள்ளது எனலாம். யாழ்ப்பாண வைபவமாலை தரும் குறிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

அரசாட்சியை ஆரம்பிப்பதற்கு முன்பே விஜயன் தன் அரசுக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான். கீழ்த்திசைக்குத் தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலை நிறுவி மேற்றிசைக்கு மாதோட்டத்துப் பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சரம் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்தறையில் சந்திர சேகரீச்சரன் கோயிலை நிறுவி, வடதிசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலேசுரன் திருத்தம்பலேஸ்வரி கோயிலையும் அதன் பக்கத்தில் கதிரை ஆண்டார். கோயிலையும் கட்டுவித்தான். (குல சபாநாதன் 1953 :6)

விஜயன் பின்னர் அரசு செலுத்திய மன்னர்களில் பண்டுகாபயன் பிரதானமானவன் ஆவான். இளமையில் அரச வித்தைகளில் இம்மன்னன் தேர்ச்சி பெற்றவதற்காக இவனின் தாயான 'உம்மத சித்த' செல்வந்தனும் வேதங்களில் தேர்ச்சி பெற்றவனுமாகிய (போகவாவேத பராகோ) பண்டுலா என்ற பிராமணனிடம் இவனை அனுப்பியதாகவும் அரசனுக்குரிய வித்தைகளில் இவனைப் பயிற்றுவித்த 'பண்டுல' இவ்விளவரசனுக்கு அநுராதபுர அரசாட்சியை பெறுவதற்குத் தனது மாமன் மாருடன் போரிடுவதற்காக ஒரு பெரும்படையைத் திரட்ட ஒரு இலட்சம் நாணயங்களை அளித்தாகவும் மகாவம்சம் குறிக்கிறது. (Vi. V X, 19 - 23) பின்னர் அநுராதபுரத்தில் அரசாட்சியை அமைத்தபோது இவன் பண்டுலவின் மகனாகிய 'சண்டல' என்ற பிராமணனை தனது புரோகிதராக நியமித்தான். (M.V.X. 79) பிராமணர் வாழுவதற்கென தனியான குடியிருப்புகளையும் இவன் ஏற்படுத்திக் கொடுத்தான். (M.V.X. 102) அநுராதபுரத் தலைநகரில் அமைக்கப்பட்ட இவற்றைப் பாளி நூல்கள் 'பிராஉற்மனாவட்ட' என அழைக்கச் சங்க இலக்கியங்கள் இத்தகைய குடியிருப்புகளைப் 'பிராமணச்சேரி' என அழைப்பதோடு பிராமணர் இல்லங்களின் தூய்மை பற்றியும் வியந்து பேசுகின்றன (வித்தியானந்தன், சு. 1954 : 135 - 148)

பண்டுகாபய மன்னன் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டிடங்களாகச் 'சிவிகஸாலா', 'சோதிஸாலா' ஆகியவை குறிக்கப்படுகின்றன. (M.V. Vii ; 102) மகாவம்சம் இவை பற்றிய விளக்கங்களைத் தராவிட்டாலும் கூட இதன் உரை நூலாகிய வம்சத்தப்பகாசினியில் (மகாவம்சதிகாவில்) இவற்றுக்கான விளக்கங்கள் உள. 'சோதிஸாலா' என்ற பதத்திற்கு இரு விளக்கங்கள் உள. ஒன்று. 'பிராமணர் இருந்து மந்திரம் உச்சரிக்கும் இடம் : மற்றது 'வைத்தியசாலை' என்பதாகும். சிவிகஸாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பதத்திற்கும் இரு விளக்கங்கள் உள, அவையாவன சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு 'வைத்தியசாலை' என்பனவாகும். (V.S.P.T. : 207) இக் கட்டிடங்கள் பிற சமயக் கட்டிடங்களோடு சேர்த்து விளிக்கப்பட்டுள்ளதால் இவை சமயக் கட்டிடங்களே எனக் கூறி இவற்றுக்கு பிராமணர் இருந்து மந்திரம் உச்சரிக்கும் இடம் சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு என்ற விளக்கங்களே பொருத்தமானவை எனப் பரணவித்தாரன கருதுவது ஏற்புடைய கருத்தாகும். (Paranavana S. 1929) இதனால் ஈழத்தில் சிவவணக்கத்திற்கான பிற இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் இருப்பதால் இவ்வணத்திலீடுபட்ட பிராமணர் மந்திரம் உச்சரித்துக் கிரியைகளை நடாத்துவதற்குத் தனியான ஓர் கட்டிட அமைப்பினை கி. மு. 4ம் நூற்றாண்டளவில் அநுராதபுரத்தில் பெற்றிருந்தனர் என்பதை மேற்கூறிய தகவல் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இக் கட்டிடம் பல யாகங்களைக் கூட நடாத்துவதற்கு உரிய கட்டிடமாகவும் இருந்திருக்கலாம். காரணம் இக்காலக் கல்வெட்டுக்களில் 'யாகம்' பற்றிய குறிப்புகள் உண்டு.

தேவநம்பியதீஸனின் ஆட்சியுடன் ஈழத்தின் வரலாற்றுக்காலம் ஆரம்பமாகிறது. இம்மன்னன் அக்கால இந்திய மன்னனாகிய அசோக சக்கரவர்த்தியுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தான் இதன் வெளிப்பாடாகவே இருவருக்குமிடையில் தூதுக்குழுக்களின் பரிமாற்றமும் பௌத்தத்தின் வருகையும் அமைந்தது. அசோகனுக்கு அனுப்பிய தூதுக்குழுவில் தேவ நம்பிய தீஸனின் மருமகனாகிய அரித்தவுடன் இவனின் புரோகிதரும் (துவஜ) இருந்ததாக மகாவம்சம் குறிக்கிறது. M.V.Xi 20-26 பௌத்த மதத்தின் புனித மரமாகிய அரசமரத்தின் கிளை ஈழத்திற்கு அனுப்பப்பட்டபோது அதனுடன் சம்பந்தப்பட்ட கிரியைகளை நடாத்துவதற்கு எட்டுப் பிராமண குலங்களும் இங்கு வந்தது பற்றியும் மகாவம்சம் குறிக்கிறது. (M.V.XX : 2) பின்னர் ஈழத்தில் எட்டு இடங்களில் ..... நாட்டப்பட்டதாக மகாவம்சம் ...... நோக்கும்போது இவை ஒரு சமயம் .... எட்டுப்பிராமண குலங்கள் வாழ்ந்த இந்துக்களாகவும் இருக்கலாம் எனவும் .... வைக்கிறது. எனினும் இவ்விடங்களில் ... சில பற்றி மகாவம்சத்திலே குறிப்பு ...... வட பகுதியிலுள்ள சம்புகோள .... முகத்திலிருந்து தலைநகரான அநுராதபுரத்திற்கு அரசமரக்கிளை விழாக் கோலமாக எடுத்து வரப்பட்டபோது இதற்கு மரியாதை செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட இடங்களில் ஒன்றாக 'பிராமணன் திதுகவின்' கிராமம் குறிக்கப்படுகின்றது. (M.V.Xix : 37) இதே பிராமணர் இக்காலத்தில் சிற்றரசர்கள் போன்று செல்வாக்கு வாய்ந்த ஒருவராகவும் காணப்பட்டார். காரணம் றோகனைப் பகுதி சிற்றரசுகளாகிய கதிர்காமம், சண்டனாகம ஆகியனவற்றின் மன்னர்கள் அரச மரக்கிளை நாட்டு வைபவத்திற்கு அழைக்கப்பட்டது போன்று இப்பிராமணரும் அழைக்கப்பட்டார். (M.V. XIX :33) இவர்களின் இடங்களில் அரச மரக்கிளை நாட்டப்பட்டது பற்றியும் மகாவம்சம் குறிப்பதால் அரசமரக் கிளையுடன் வந்த பிராமண குலங்கள் அநுராதபுரத்தில் மட்டும் அன்றி ஈழத்தின் பிறபகுதிகளிலும் குடியேறியிருக்கலாமென்பது தெளிவு. இத்தகைய இடங்களில் ஈழத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள றோகனைப் பிரதேசம் போன்று வட பகுதியிலுள்ள சம்புகோள பட்டினமும் அமைந்திருந்தது. தேவநம்பியதீஸன் தலைநகராகிய அநுராதபுரத்தில் பௌத்த மதத்திற்கான கட்டிடங்களை அமைப்பதற்கான எல்லைக் கோட்டை அமைத்தபோது அக்கோடு பிராமணராகிய 'திபவச' என்பவரது கோயிலை அண்டிச் சென்றதாக மகாபோதிவம்சம் குறிக்கிறது. (MBV : 136)

ஆதி ஈழத்தின் பௌத்த மத வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய சிங்கள மன்னர்களாகிய காக்கவன்னதிஸ, துட்டகைமுனு, வட்டகைமுனு போன்ற பெருமன்னர் காலத்தில் பிராமணர் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் செய்திகள் உள. காக்கவன்னதிஸன் பிராமணப் புரோகிதர்களை வைத்திருந்தான். இவனின் புரோகிதனின் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குனி சாசனத்தில் சேர்ந்ததாகத் தீபவம்சம் குறிப்பிடுகிறது. (D.V. XVIII ; 20 - 22) அத்துடன் மிகுந்தலைக்குக்கிட்டவுள்ள துவாரமண்டலத்தில் வாழ்ந்த 'குண்டல' என்ற பிராமணன் காகவன்னதீசன், துட்டகைமுனு ஆகியோரின் நண்பராகவும் குறிக்கப்பட்டுள்ளான். (M.v. xxiii : 24 26) அத்துடன் பிராமணனாக இருந்தாலும் கூட இவனை அக் காலத்தில் வாணிபத்தில் ஈடுபட்ட முக்கிய வணிகனாகவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. (Mv xxiii : 23 - 24) இதே நூல் துவாரமண்டல, உபதிஸ்ஸகம ஆகிய இரு கிராமங்களிலிருந்து, 500 பேர் கொண்ட இரு பிராமணக் குழுவினர் பிக்குசாசனத்தில் சேர்ந்ததாகவும் குறிப்பிடுகிறது. (M.V. xvii : 59-60) துட்டகைமுனு மன்னன் காலத்தில் பிராமணர் உயர் சாதியினராக இருந்தாலும் கூடச் சமூக அமைப்பில் தாழ்ந்த சாதியினரான 'சண்டாளரையும்' வெறுக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டும் விதத்தில் சில கதைகள் காணப்படுகின்றன. இம்மன்னனின் மகனாகிய இளவரசன் சாலியாக சண்டாளப் பெண்ணாகிய அசோகமாலாவுடன் காதல் கொண்டு மணம் புரிய விரும்பியபோது திருமணத்திற்கு முன்னர் அப்பெண்ணின் உடலில் காணப்படும் மங்கலக் குறியீடுகளைக் கண்டறியத் தனது பிராமணரான (புரோகிதரை) அனுப்பி அவனும் அவ்வாறு கண்டறிந்தான் என இராசவாகினி கூறுகிறது. (R.S.V. II : 119) இதே நூல் திருமண வைபவம் பிராமணக் குருமாரால் சடங்குகள் மூலம் நடைபெற்றதையும் துட்டகைமுனு மந்திரிமாரோடு அதில் பங்குபற்றி அசோகமாலா தயாரித்தளித்த உணவையும் அருந்திச் சென்றதையும் குறிப்பிடுகிறது. அத்துடன் இவ்வாறு சண்டாளப் பெண்ணை மணப்பதற்குப் பதிலாக அரசகுடும்பத்திலோ அன்றிப் பிராமண குலத்திலோ சாலியா ஒரு பெண்ணை மணந்திருக்கலாமென்று வருந்தியதாகவும் குறிப்பிடத்தவறவில்லை. (Ellawalla, H 1969).

வட்டகாமினி காலத்தில் (கி.மு. 89 - 77) அரசியல் நிதியில் பிராமணர் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றது. இம்மன்னன் அநுராதபுரத்தில் மன்னனாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று 5 மாதங்கள் (கி.மு. 103) கழிய முன்னர் றோகணையில் இருந்த திஸா என்ற பிராமணன் இவனது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியிலீடுபட்டதையும் (M.v. xxxiii : 37-44) இவனின் வலிமையை அறிந்த வட்டகாமினி இவனுடன் நேரடியாக மோதுவதை விரும்பவில்லை. எனவும் மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்து றோகனைப் பிரதேசம் பிராமணர் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாக விளங்கியதும் கிளர்ச்சியை நடாத்துமளவுக்கு இவன் வலிமை பெற்றுக் காணப்பட்டதும் தெளிவாகின்றது. (M.v. xxxiii 33) இவனது கிளர்ச்சியோடு ஆதி ஈழத்தில் மிகப் பெரியபஞ்சமும் ஏற்பட்டது. பன்னிரண்டு வருடம் நீடித்த இப்பஞ்ச காலத்தில் மழை பெய்யவுமில்லை. (M.v. xxx iii : 37-40) இப்பிராமணன் மாவட்டங்களைச் சூறையாடியதாகவும் பௌத்த சாசனத்திற்குத் தீங்கிளைத்தவனாகவும் விளங்கினான். (S. m.v.:445 - 6) ராசவாகினியோ எனில் சிறிநாக என்ற பிராமணன் பௌத்த வழிபாட்டிடங்களை சூறையாடி அநுராதபுரத்தில் அரசதிகாரத்தைச் சிலகாலம் பெற்றிருந்தான் எனக் குறித்து திரவியங்களைப் பெறுவதற்காக இவன் பௌத்த தாதுகோபங்களை இடித்தபோது இவனின் கொடுரத்தை அறிந்த ஒருவரும் இவனிடம் இவனின் பிழையை எடுத்துக் கூறத் தயங்கியதாகவும் குறிப்பிடுகின்றது. (Lilawalla, II 1959 :15) சோரநாகமன்னனின் (கி. மு. 62 - 50) மனைவியாகிய அனுலாதேவி தமிழ்ப் பிராமணராகிய நீலவுடன் கொண்ட காம ஆசையினால் அவனை அரசனாக்கியதற்கும் மகாவம்சத்தில் சான்றுகள் உள. (M.v. xxx iv:16-28) இத்தகைய சான்று சங்ககாலத்தில் தமிழ்ப் பிராமணப் புலவர்கள் இருந்து சங்கப்பாடல்களைப் பாடியது போல் ஈழத்திலும் தமிழில் தேர்ச்சி பெற்ற பிராமணர் இருந்ததை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

இக்காலத்தில் பிராமணர் வெறும் இந்துமத நடைமுறைகளில் மட்டும் தேர்ச்சி பெற்றிருந்ததோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிப் பௌத்த சாஸ்திரங்களிலும் நன்கு பாண்டித்தியம் அடைந்திருந்தமைக்கான சான்றுகளும் உள. பத்திகா மன்னன் காலத்தில் (கி.மு 19 கி.பி. 9) ஈழத்துப் பௌத்த பீடங்களில் மிகப்பழையதான மகாவிகாரைக்கும் அதன் பின்னர் வந்த அபயகிரி விகாரைக்கும் இடையே பௌத்த தத்துவங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் கொடுக்கப்பட்ட வியாக்கியானங்களில் முரண்பாடு காணப்பட்டபோது அதனைத் தீர்க்கும் பொறுப்பை பல்வகை மொழிகளிற் பாண்டித்தியம் பெற (பண்டிதோ - பாஷாந்தர - குசலோ) தீககாராயண என்ற பிராமணனிடம் ஒப்புவித்ததாகச் சமந்தபாதிகா என்ற நூல் குறிப்பிடுகிறது. (S.M.P. 1418)

இச் சந்தர்ப்பத்தில் வரலாற்றுக் காலத்திற்கும் கிறீஸ்தாப்சதத்திற்கும் இடைப்பட்ட 250 ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தமிழர் படையெடுப்புக்கள் பற்றியும் குறிப்பிடுதல் அவசியம். மகாவம்சம் இக்காலத்தில் 1/3 ஒரு பகுதியில் தமிழராட்சி அநுராதபுரத்தை மையமாக வைத்து நடைபெற்றதைக் குறிக்கிறது. அத்துடன் தமிழர்கள் பற்றிக் குறிப்படுகையில் இவர்கள் உண்மையான நெறியான பௌத்த நெறியில் நம்பிக்கையில்லாதவர்கள் என்ற அடைமொழியுடன் குறிப்பதும் இவர்களில் அநேகர் இந்துக்களாக விளங்கினர் என்பதும் வெளிப்படை. இதனால் இவர்கள் ஆட்சியும் இந்துமத நம்பிக்கைகள் தளைத்தோங்கவும், இந்துக்குமாரரான பிராமணர் செல்வாக்குடையவர்களாக விளங்கவும் வழி வகுத்தது எனலாம். முதலாவது தமிழ்ப் படையெடுப்பை நடாத்தியவர்களாக சேனன் குத்திகன் ஆகிய குதிரைவணிகரின் புத்திரர் குறிக்கப்படுவதோடு அநுராதபுரத்தில் 22 வருடம் இவர்கள் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது. (கி.மு. 177 - 155) பாவங்கள் நீரினால் பரிசுத்தமடைந்து கழுவப்படுகின்றன என்ற நம்பிக்கையில் திளைத்த இவர்கள் மல்வத்து ஓயாநதியை அநுராதபுர நகரை அண்மித்து ஓடத்திசை திருப்பியவர்களாகவும் குறிக்கப்படுவது இவர்களின் இந்துமத அனுஷ்டானங்களை எடுத்துக் காட்டுகிறது எனலாம். தமது அன்றாட சமயக் கடமைகளை செய்யவே இவ்வாறு நதி நீரைத் திசை திருப்பினர் எனலாம். பின் வந்த எல்லாளன் ஆட்சி (கி.மு. 145 - 101) 44 வருடம் நீடித்து (M.V. xxi : 13-14) நீதி தவறாத மன்னன் எனப் பாளி நூல்கள் இவனைக் குறிக்கும் நேரத்தில் பௌத்த நெறி வழி ஒழுகாதவன் எனவும் குறிப்பது இவனுக்கு இந்து மதத்திலிருந்த ஈடுபாடு தெரிகிறது. மூன்றாவது படையெடுப்பு வட்டகாமினி மன்னன் காலத்தில் நடைபெற்றது. இதில் ஈடுபட்டவர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்த ஏழு தமிழர்களாவர். இவர்களில் இருவர் நாடு திரும்புபவர் மாறிமாறிப் 14 வருடமும் 7 மாதமும் ஆட்சி செய்தனர். இவர்கள் முறையே ... உறத்த, பசிய, பணயமாறாக, பிலியமாறாக, தாதிக ஆகும். இவர்களைப்பஞ்ச திராவிடர் எனவும் மகாவம்சம் குறிக்கிறது. (M.V. xxx iii 54-61)

மேற்கூறிய செய்திகள் பிராமணர் பற்றி ஈழத்துப் பௌத்த நூல்களிற் காணப்படுவனவே. எனினும் அவர்களின் வைதீகநெறித் தொழில் முறைகள் பற்றிய விரிவான பதில்கள் இவற்றில் இடம்பெறவில்லை. காரணம் பௌத்த குருமாருக்கு இவற்றில் ஈடுபாடு இருக்காமையே எனிலும் இவைபற்றிச் சங்க நூல்களில் வரும் குறிப்புகள் ஈழத்துப் பிராமண குலங்களின் ஒழுக்க நெறிகளையும் சரிவர அறிந்து கொள்ள உதவும். ஆகையால் இவை பற்றிச் சில குறிப்புக்கள் கூறுவது அவசியமாகிறது. (வித்தியானந்தன், சு. 1654) புறநானூறு அந்தணரை 'நான்மறை முதல்வர்' அறிதொழிலந்தணர் எனக் கூற, திருமுருகாற்றுப்படை.

'மந்திரம் விதியின் மரபுளி வழாஅ வந்தணர்
வேள்வி யோர்க் கும்பே' (திருமுருகு... 95-96)

எனக்கூறுவதன் மூலம் வேதச் சடங்குகளைத் தவறாது கடைப்பிடிப்பவர்கள் இவர்கள் என்கின்றது. தொல்காப்பியம் அந்தணரின் ஆறு தொழில்களாக (1) வேதமோதல் (2) வேதம் கற்பித்தல் (3) வேதத்துடன் சம்பந்தமான கிரியைகளைச் செய்தல் (4) பிற கிரியைகளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துதல் (5) பிறருக்குத்தானம் வழங்குதல் (6) தானத்தினை ஏற்றல் ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றது. (Kuppuswamy, T.V. 1978) பிராமணர் இருப்பிடங்கள் பற்றி மகாவம்சம் குறிப்பிட்டாலும் கூட பெரும்பாணாற்றுப்படையில் அவை எவ்வாறு இருந்தன என வரும் வர்ணனை அவற்றின் தூய்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. இதிலே கோழி, நாய், ஆகிய அங்கில்லை எனவும், ஆனால் அவர்கள் வளர்க்கும் கிளி கூட வேதப்பயிற்சி பெற்றுள்ளது எனவும் போற்றப்படுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. யாழ்ப்பாண வைபவ மாலை 1953. குலசபாநாதன் (பதிப்பு) கொழும்பு.
2. வித்தியானந்தன் சு. 1954. தமிழர் சால்பு. கண்டி.
3. D V Dipavamsa 1959. (Ed. & Trans) Law. B. C. Ceylon Historical Journal ; Vol III. Colombo.
4. Ellawalla, H. 1959. Social History of Early Ceylon (Colombo)
5. Kuppuswami, T.V. 1978 'Brahmins and Brahmanism in Sangam Literature' Bulletin of the Institute of Traditional Cultures, Madras,. July – December pp. 131 – 164
6. M. B. V. Mahabodhivamsa 1891. (ed) Strong, A. S. P.T. S. (Lond)
7. M.V. Mahavamsa 1960. (Ed. & Trans) Geiger, W. Colombo.
8. Paranavitana, S. 1929. 'Re–Buddhist religious beliefs in Ceylon J.R.A.S. (C.B.) xxx. No. 82. (pp.302 -28)
9. R.S. V. Rasavahini 1901, 1899. (Ed) Sarans Tissa Thera, Part I 1901, Part II 1899. (Colombo)
10. S.M.P. Samantapasadika 1915 (Ed) Ekanayaka 1915 U. P. Vol. I (Colombo)
11. S.M.V. Sammohavinodani 1923 (Ed) Buddhadatta Thera P.T.S. (Lond).
12. V.S.P. Vmastthappakasini (Mahavamsa Tika) 1935, 1936 (Ed) Malalasekara G.P. P.T.S.
13. Vol. I. 1936, Vol II 1935 (Lond)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தையில் மலர்ந்து மாநிலமெங்கும் மணம் பரப்பிய தமிழர் நாகரிகம்

விஸ்வப்பிரம்மஸ்ரீ. மூ. ம. செல்லத்துரை,

மாதோட்டம் அல்லது மாந்தை என்னும் துறைமுகம் மன்னாருக்கு சமீபத்தில் இருந்த பண்டைய சிறப்பு மிக்க நகராகும்.

இந்த நகரை விஸ்வ கர்மாவின் மூன்றாம் மகனான துவட்டா என்பவரே நிர்மாணித்து அவரும் அவர் சந்ததியினரும் அதிலிருந்து ஆண்டு வந்தார்கள். நகரை மாந்தை என்று அழைத்தார்கள். இது மாதோட்டப்பகுதியின் இராசதானியாகும். இதன் கண் அமைந்த ஆலயத்தைத் திருக்கேதீச்சரம் என்ற பெயரிட்டு அழைத்தார்கள். இத்தலமே பேர்பெற்றதும் பாடல் பெற்றதுமான தலமாகும்.

இந்நகர் பற்றி ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்த யாத்திரிகரான பெற்றலோக்கி (Battiokki) என்பவர் மாந்தை அல்லது மாதோட்டம் கம்மாளரால் கட்டப்பட்ட பெருநகராகும். இந்நகரில் பராக்கிரமமும் செல்வமுமிக்க மக்கள் பல காலமாக வாழ்ந்து வந்தார்கள் எனக் கூறியுள்ளனர்.

துவட்டா தெய்வீகத் தச்சரும் தேவகுருவும், ஜகக்குருவுமான படைத்தல் கடவுள் விஸ்கர்மாவின் மகனாவார். நாடு நகர் அமைப்பதில் கைதேர்ந்த சிற்பி. சகலகலாவல்லவன் திரிகால முணர்ந்தஞானி, கட்டிடக்கலை வல்லவன், கற்றுணர்ந்த மேதை, மக்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் ஆற்றலும் அறிவும் மிக்க சாதனையாளர். இதனால் மக்கள் அவரை மாதுவாட்டா என அழைத்தார்கள் அவரால் வடிவமைக்கப்பட்ட பகுதியை மாதுவட்டபுரம் என்றும் அழைத்தார்கள்.

மாதுவட்டபுரம் காலத்தால் மருவி மாதோட்டம் ஆகியது எனப்பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுகின்றார். அன்றும் இன்றும் மக்களுக்குத் தொண்டாற்றிய மகான்கள் சாதனையாளர்கள் தியாகிகள் பெயர்களை நினைவில் நிறுத்தும் வகையில் அவர்கள் வாழ்ந்து வளர்ந்த நாட்டுக்கு, நகருக்கு, தெருவுக்கு பெயர் வைக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. அதே நடைமுறையில் மாதுவட்டாவின் பெயரையே அவரால் உருவாக்கப்பட்ட நாட்டுக்கோ அல்லது நகருக்கோ வைத்ததைத் தவறாகக் கொள்ளமுடியாது. பழந் தமிழர்களின் நன்றி உணர்வின் வெளிப்பாடே அதுவாகும்.

மாதோட்டம் பற்றி சிங்கள வரலாற்று நூல்களான மகாவம்சம், ராஜவாளிய என்பன மாதித்த, மாதோட்ட என அழைக்கின்றனர். மா - பெரிய, தோட்ட என்றால் சிங்களத்தில் இறங்கு துறையென பொருள்படும். மாந்தையை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்களை நாகர்கள் என தட்சண கைலாச புராணமும் முதலியார் சி. இராசநாயகமும் கூறுகின்றார்கள்.

மாதோட்டத் துறைமுகம் இலங்கையில் முதல் முதல் அமைக்கப்பட்ட துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலம் திரைகடல் ஓடித்திரவியங்களைக் குவித்து செல்வச் செருக்குடன் சிறப்பாகவும், சீராகவும் நாகர்கள் வாழ்ந்தார்கள். நாகர் நாகரிகம் என்ற சொற்கள் நாகர்கள் மூலமே கிடைக்கப்பெற்றது என்பது முதலியார் சி. இராசநாயகத்தின் கருத்தாகும். முதல் முதல் நகர் வாழ்க்கையை அறிமுகமாக்கியவர்கள் நாகர்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தை திட்டமிட்டு சிறப்பாகவும், சீராகவும் அமைக்கப்பட்ட நகராகும். பாதுகாப்பு அகழிகள், பரந்து விரிந்த வீதிகள், பாதுகாப்பு அரண்கள், கூடங்கள், மாடங்கள், மாளிகைகள், கோபுரங்கள், நிலாமுற்றங்கள், நீர்த்தடாகங்கள், நீச்சல் குளங்கள் போன்ற இன்னோரன்ன பல அமைப்புக்களை தன்னகத்தே கொண்டிருந்தது. அது மட்டுமல்ல காந்தத்தால் கோட்டை அமைத்து அதில் இருந்து கோலோச்சினார்கள் நாகர்கள். இதைச் சீன யாத்திரிகரான குவான்சியாங் தனது பயணக்குறிப்பில் குறித்துள்ளார். அக்காலத்தில் உலோகங்களால் நகர் அமைப்பது வழக்கில் இருந்திருக்கின்றது. திரிபுரம் என்பது செம்பு, வெள்ளி, இரும்பாலமைந்த நாகர்களின் கோட்டையாகும். தமிழ் இலக்கியங்களில் புறநானூற்றில்

"செம்பு புனைந்தியற்றிய செண்டும் புரிசை

ஊலாராக விகைத்துவரா" எனக் கூறுகிறது.

இதன்மூலம் துவாரகையின் செம்பிலான கோட்டை ஒன்று இருந்தது என்று புலப்படுகின்றது.

"ஒன்னாருக்கும் கடும் தறற் தூங்கையில்

எறிந்த நின் நுங்க நேர்ந்த நினைப்பின்" என்றும்

சிறுபானாற்றுப் பாடலில் "தூங்கையில் எறிந்த செம்பியன்" என்று வரும் அடிகள் உலோகநகரங்கள் அன்று இருந்ததை உறுதி செய்கின்றன.

"விண்தோய் மாடத்தே விளங்கு சுவர் உடுத்த" என்று

பெருமானாற்றுப்படை செய்யுளிலும்

மாடமோங்கிய மல்லன் மூதூர் என்று நெடுநல் வாடையும் மாந்தையைக் குறிப்பிடுகின்றனர்.

மாந்தைநகர் உறைவோருள் லோகத்தில் வாணிபமே

புரிவோர்

காந்தை மலைக்குரியோன் பாஞ்சாலரின் கண்ணுவர்

தோன்றினாரே என்றும்,

முனா அதியின் குறிப்பில் காணலாம். "பெருந்தோட்ட மன்னார் பிசைவரோ குட்டுவான் மாந்தை" என்ற பாடல்கள் இந்நகரில் இரும்புக்கோட்டை இருந்ததைக் குறிக்கின்றது. உறுதிசெய்கின்றது. இந்த இரும்புக் கோட்டையை காந்தக் கோட்டை என மக்கள் அழைத்தார்கள். இது சம்பந்தமான குறிப்புக்கள் அராபியக் கதைகளிலும் வருகின்றது.

## காந்தக் கோட்டை

இது இரும்பிலானது. சதா சுழன்று கொண்டிருக்கக்கூடியது. பகைவர்கள் இலகுவில் கோட்டையைக் கைப்பற்ற முடியாத வகையில் காந்த சக்தியினால் இயங்கக்கூடியதாக சிறந்த தொழில் நுட்பத்தோடு இக்கோட்டை கட்டப்பட்டது. காரணம் அக்கோட்டையில் வாழ்ந்தவர்கள், கைத்தொழிலில் வல்லவர்களான கம்மாளர்களாகும். இவர்கள் தங்கள் கைவினைத் திறத்தால் உலோகங்களிலும், மரங்களிலும், கற்களிலும், சிறந்த உகந்த நேர்த்தியான பொருட்களை உற்பத்தி செய்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் பெரும் செல்வத்தைக் குவித்தார்கள். செல்வ வளம் அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கைத் தரமும், தகுதியும் உயர்ந்தது. சிறந்தது. இதனைக் கண்ட வெளிப்பகுதியினர் போட்டி, பொறாமை, பொச்சரிப்புக் கொண்டார்கள். இவர்கள் பொருட்களைக் கொள்ளை அடிப்பதிலும், நாட்டை அடிமையாக்குவதிலும் சகல பகுதியைச் சேர்ந்த ஆளும்வர்க்கம் அனைவரும் ஒன்று திரண்டு ஒருமித்து செயற்படத் தொடங்கினார்கள். மாற்றாரின் எதிர்ப்புகளுக்கு அஞ்சியே இவர்கள் உலோகங்களினால் கோட்டை கட்டி வாழ்ந்தார்கள். திரிபுரம் அவ்வாறு கட்டப்பட்டது. அது சிவன் என்னும் மன்னனால் எரிக்கப்பட்ட பின் இந்தக் காந்தக் கோட்டையைக் கட்டினார்கள். அதன் உள்ளிருந்து தங்கள் செயற்பாடுகளைச் சிறப்பாகவும், சீராகவும், செய்து வந்தார்கள். மாந்தையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் மாதுவாட்டவாகும். அவர் பின் மகன் வித்தைகள் பலதைக்கற்றுத் தேறிய வித்தகன் விஸ்வேஸ்வரன் ஆட்சியை ஏற்றுச் சிறப்பாகச் செய்துவந்தார். அவரின் மகனே இராவணனின் தந்தையான விச்சிரவசிவாகும். பிரபாகரன் இவனை விச்சிராவணன் எனவும் அழைப்பார்கள். இவன் ஆட்சியை நாடாது குலதர்மத்தின்படி தவம் செய்து முனிவராகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தான். இந்த விஸ்வேஸ்வரன் முதுமை அடைந்தது காசிக்குச் சென்று சமாதியானான். காசியில் உள்ள விஸ்வநாதர் ஆலயம் இவரின் சமாதியில் கட்டப்பட்டது எனப் புராணங்கள் கூறுகின்றன. இலங்கையில் முதலாவது ஆங்கிலேய தேசாதிபதியான சேர். எம்ச்சன் ரெனன்ட் என்பவர்தான் எழுதிய இலங்கை என்னும் வரலாற்று நூலில் பண்டுதொட்டு நுட்பமான கப்பல் கட்டும் தொழில் மாந்தையில் இருந்து வந்தது என்றும் அவை இரும்பாணி இல்லாமல் கட்டப்பட்டது என்றும் கூறியுள்ளார். கி.பி. 231ம் ஆண்டில் இலங்கையை ஆண்ட சங்கதீச என்னும் மன்னன் தான் கட்டிய றுவன்வெளி தாதுகோபுரத்தை இடி மின்னல் தாக்காது பாதுகாக்கும் வகையில் கண்ணாடியில் கருவி ஒன்றைச் செய்து கோபுரத்தின் நுனியில் இணைத்திருந்தான். அக்காலம் மாந்தையில் வாழ்ந்த கம்மாளருக்கு காந்தத்தைத் தொழில்படுத்தி ஆளும் திறமை இருந்தது என பேர்குசன் (Ferquson) என்னும் அறிஞர் தான் எழுதிய 'இலங்கை' என்ற வரலாற்று நூலில் குறித்துள்ளார். காந்த சக்தியைச் சரியாகப் பயன்படுத்தும் ஆற்றலை அறிந்திருந்த காரணத்தினால் தான் காந்தக்கோட்டையை கம்மாளர்கள் கட்டி வாழ்ந்தார்கள் என்பதை நம்பக் கூடியதாக இருக்கிறது.

கிரேக்கர்கள் (Palasimandu) உலகில் சிறந்த வியாபார நகரென மாந்தையை அழைத்தார்கள்.

"செங்கமல மாலை அணிதேவனே! மாந்தை நகர்ப் புங்கனே! காந்தமலை பூரண கெம்பீர மன்னா"

என விஸ்வகர்மா துதிக்கப்படுகின்றார்.

'காந்தமலை மேவிய காவன் மன்னவன் புகழ் கூறவே!

என விஸ்வகர்ம நாடகத்தில் கூறப்பட்டுள்ளது.

இது மிகப் பழமையும், பெருமையும் , வலிமையும் வாய்ந்த தமிழ் நாட்டு நகரில் ஒன்றாகும். இந்நகரில் மாயாவித்தை காட்டும் கருவிகளும் இரகசிய வாய்கள், தொழிற்கூடங்கள், பாரிய பண்டகசாலை முதலியன இருந்துள்ளன. நுட்பமான போர்த் தளபாடங்குளும் திறமையான வேலைப்பாடுடைய துணிவகைகளும், முத்தும் சங்கும் இரத்தினங்களும் இருந்திருக்கின்றன.

பிறநாட்டவரின் மட்பாண்டங்கள், உள்நாட்டு யானைத்தந்தம், மைற்றோகை, பலவிதமான வெளிநாட்டு மதுவகைகள், பலவித விளக்குகள் எல்லாம் குவிந்தது. மாந்தை சோமாந்தை என்றும் சோவரன் என்றும் அழைக்கப்பட்டது.

பிளினி, தொலமி, போன்ற அறிஞர்களும் பாலாவிக் கரையில் சோமண்டலம் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பேறிப்பிளஸ் (Peripilas) என்பவரும் மாந்தையைப் பழைய சோமண்டலம் என்றே குறித்துள்ளார். சோமாசி (சோ மலை) கிழக்கு ஆபிரிக்கா), சவுதி அரேபியா (சோ- உதி அரேபியா), சோமாலிந்து (சோமாலை - வந்து), கிழக்கு ஆபிரிக்கா மொகஞ் சோதாரையிலுள்ள சோவும் இப்படியே வந்திருக்கலாம்.

மாந்தையில் பல நாட்டுக் கப்பல்களும் வந்து தங்கி பண்டமாற்றுச் செய்து செல்வர். பருவக்காற்று வரும் பட்சத்தில் வெளிநாட்டுக் கப்பல்கள் இங்கே தங்கிப் போகும் வரை வெளிநாட்டார் மாந்தை வாசிகளுக்கும் கூலி வேலை செய்துள்ளார்கள். இவ்வாறு தங்கியவர்களில் அரேபியர்கள் அநேகராகும். அவர்களை இச் சோநகரில் தங்க வைத்தார்கள். சோ என்றால் செம்பாலான நகர். எனவே இந்த நகரில் தொடர்ந்து வாழ்ந்த அரேபியர்களை சோ நகர் வாசிகள் என அழைத்தார்கள். அதுவே காலப்போக்கில் இலங்கை வாழ் முஸ்லீம்களின இன அடையாளப்பெயராக மாறியுள்ளது. இன்றைய சோனகர் என்ற பெயர் வந்த காரணம் அதுவேயாகும்.

"உத்திரதிக்கனமிக்க ஊசிக்காந்தத்தினாலே சுற்றிலும் அகல நாலைந்து யோசனை தூரமுள்ள முத்திரை மிகுந்த கோட்டை சிருஷ்டித்தார்கள். முத்தினத்தில் மாந்தைத் துறைமுகத்தின் மேலே சதா சுழன்று கொண்டிருக்கக்கூடிய காந்த விசிறி ஒன்று இயங்கிக்கொண்டே இருந்தது. இதன்மூலம் கடலில் பிரயாணம் செய்யும் வெளிநாட்டுக் கப்பல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இழுக்கப்பட்டு பொருட்கள் எல்லாம் சூறையாடப்பட்டது என்று முதலியார் சி. இராசநாயகம் குறித்துள்ளார். நாகர்களில் ஒரு பகுதியினர் கடற்கொள்ளையர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்.

இவர்களின் செயற்பாடுகளிலும் பல நாட்டு அரசர்களில் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கக் காரணம் உண்டு. மாந்தை பற்றி சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் மாமூலனார் என்னும் சங்கப் புலவர்.

நன்னகர் மாந்தை முற்றதத் தொன்னர்
பனி திறை கொணர்ந்த பாடு சால்
நன்கலம் பொன்செய் பாவை
வைரமொடாம்ப லொன்வாய் நிறைய குவை
இயன்றவன் நிலத்தினத் துறந்த நிதியத் தன்ன.
(அகம். 127) எனப் பாடியுள்ளார்.

மற்றொரு சங்கப்புலவரான பரணர்,

நந்தூம்புள்ள யளக்கொடி மயக்கி
வன்போட்டு
நெல்லின் வாங்கு பீள் விரிய
துயத்தவை முடக்கிரார் தெரிக்கும் பொறப்பு
குரங்குகள் புறவிக்குட்டுவன்
மாந்தையன்ன வெண்ணலம் தந்து சென்சென்மே.
(அகம். 176)

சங்க காலத்துக்கு முன்பே மாந்தை சிறப்புப் பெற்ற நகராக இருந்திருக்கின்றது என்பதை இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. "சித்திர ரேகை என்னும் தனதன் மகிர் தேவியே தெய்வக்கம்மியன் பெண்ணென்றே கூவாய்குயிலே" என மாந்தைப்பள்ளு. அக்காலத்தில் இலங்கை ஆண்ட மன்னர்களில் புகழ் பூத்த குபேரன், எத்திசையும் புகழும் இசை மன்னன் இராவணன் "இருபது கையுடையான்றனக்கு மண்டோதரி ஈந்தருளும் மாயனார் பண்ணைப் பள்ளியிரண்டே" என மாந்தைப் பள்ளு.

நெற்றிக்கண்ணனின் புதல்வனோடு நேருக்குநேர் நின்று போராடிய பத்மாசூரன், வில்வித்தையில் வேந்தனான விஜயன், அஞ்சா நெஞ்சன் அடல் ஏறு மேகநாதன், மூத்த சிவனின் மனைவி தேவநம்பிய தீசனின் தாய் மாந்தை ஆண்டவிஸ்கரும நாகவருக்கைச் சேர்ந்த பெண்களேயாகும். இயக்கரும் நாகரும் கொண்டான், கொடுத்தான் உறவுகள் தொடர்புகள் இரந்தன என முதலியார் சி. இராசநாயகம் கூறியுள்ளார். இராவணனின் நாட்டையும், நகரையும் அமைத்துக் கொடுத்தவர் மாந்தை மன்னனான மயனாகும். மயனின் மகள் மண்டோதரியையே இராவணன் மணந்தான். இவனுக்காக வானவூர்தியும் மயனால் செய்து கொடுக்கப்பட்டது. "சூரபன்மன் மனைவி பதுமேகலை தந்தை சூரர் புனைவற் பணிந்து கூவாய் குயிலே" என மாந்தைப் பள்ளு.

அதுபோல் குபேரனுக்கு நகரையும் புஸ்பவிமானத்தையும் செய்து கொடுத்தவர் மயனின் தந்தையான விஸ்வகர்மாவாகும். இலங்கை யை முதல் வடிமைத்தவரும் விஸ்வகர்மாவேயாகும். மாந்தையில் வாழ்ந்த விஸ்வகரும மக்களே சைவ புத்த ஆலயங்களைக் கட்டியவர்கள். மாந்தையில் வாழ்ந்த ஓவிய நாகர்களின் கைவண்ணமே. சிரிக்கும் சிகிரியா சித்திரங்கள் பல குகைக்கோவில் விஸ்வகர்மாவின் படைப்பு எனச் சிங்கள சரித்திரம் கூறுகின்றது.

ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்த சரித்திர ஆசிரியர் டி கோற்றோ (Decauto) ஆரம்பகாலத்தில் உரோமர்கள் இலங்கையுடன் தொடர்புடைய வர்களாகக் காணப்பட்டார்கள். உரோமர்களின் கட்டிடங்கள் இருந்த இடங்களில் தடையங்கள் காணப்படுகின்றன. கி.பி. 1585 என்பது பிழையாக 1575 என எழுதப்பட்டது. ஜோவாடெ மெல்லோ டெசாபாயோ இலங்கையின் மன்னார் பிரதேசத்தில் தளபதியாக இருந்த காலத்தின் தன் அடிமைத்தனத்தை நீக்கிக் கொண்ட அனியஸ் பிளக்காமல் கண்டெடுத்த நாணயங்கள் மாதோட்டப் பிரேதசத்தில் சில கட்டிடங்களை வெட்டிப் பரிசோதித்தபோது அங்கே கிடைத்தவையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிரதேசத்தில் இன்னும் அங்குமிங்கும் உரோமர்களின் சுண்ணாம்புக் கட்டிடங்கள் அழிந்து கிடப்பதைக் காணலாம். சிப்பந்திகள் நிலத்திலிருந்து கற்களைத் தோண்டி எடுக்கும்போது ஒரு கட்டிடத்தின் அத்திவாரப் பகுதி காணப்பட்டது. அதை அகழ்ந்து போகும்போது இரும்பினால் செய்யப்பட்ட சங்கிலி ஒன்று அகப்பட்டது. இச்சங்கிலியைப் போல் இன்னுமொரு சங்கிலியைச் செய்து தரக்கூடிய ஒரு தொழில் நிபுணனாவது இந்தியா முழுதும் தேடியும் கிடைக்கவில்லை என எழுதியுள்ளார். எனவே மாந்தையில் வாழ்ந்த கம்மாளர்களின் கைத்திறன் தொழில் நிபுணத்துவம் எத்தகையது என்பது புலனாகிறது.

## திருக்கேதீஸ்வரம்

திருக்கேதீஸ்வரம் என்பது திருக்கேதீச்சரம் என்னும் சொற்களானது திரு என்பது மேன்மை மதிப்பு கண்டோரால் விரும்பப்படும் நோக்கம் என்பார் பேராசிரியர். கேது நவக்கிரங்களில் ஒன்று. பாம்பைக் குறிக்கும். ஈச்சரம் என்பதன் பிரிவு இதன்பொருள் ஈசன் எழுந்தருளி இருக்கும் இடம். கேது பாம்பு வழிபட்ட இடம் எனவும் பொருள்படும். மாதுவிட்டாவினால் கட்டப்பட்ட இத்தலம் சிறப்பும் கீர்த்தியும் மகிமையும் வாய்ந்தது. உலக மக்களின் கவனத்தை தன்பால் இழுத்த தலம். திருஞான சம்பந்தநாயனாரால் பாடிப் புகழப்பட்ட தலம். நாகர்களின் குல வழிபாட்டுத் தலம். இராவணன், விஜயன், பராக்கிரமபாகு போன்ற மன்னர்களால் புனருத்தாரணமும் நன்கொடையும் அளித்து பாதுகாக்கப்பட்ட தலம். போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின் புது வாழ்வு அளிக்கப்பட்டது.

## காந்தக்கோட்டை வீழ்ச்சி

காந்தக்கோட்டை வாசிகள் பெரும்பாலும் கற்றுணர்ந்த மேதைகள் சித்தர்களாகவும், ஞானிகளாகவும் திகழ்ந்தவர்கள். வானசாஸ்திரம், வைத்தியம், கட்டிடக்கலை, ஆகமங்கள், சாஸ்திரங்கள் சகல கைத்தொழில் வல்லவர்களாக இருந்து தங்கள் உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றிச் செல்வம் சேர்த்து சீராக வாழ்ந்தார்கள். இவர்களுக்குத் தெரியாமல் நாகர்களின் ஒரு பகுதியினர்கள் நடத்திய கடற்கொள்ளைகளால் பாதிக்கப்பட்ட மாற்று அரசர்கள் ஒன்று திரண்டு நாகர்களை அடக்கத் திட்டம் தீட்டிச் செயற்பட்டனர். இவர்களின் திட்டங்கள் செயற்படமுடியாத நிலையைக் கண்டு வேதனை அடைந்த வேந்தர்கள் தான தருமம் கைகொடுக்காததால் முடிவில் சூழ்ச்சிகளைக் கைக்கொண்டார்கள்.

சூழ்ச்சியை நிறைவேற்ற பக்கத்தில் இருந்து பெண்களை வரவழைத்து அவர்களுக்குப் புத்திகளையும், யுத்திகளையும் கூறி காந்தக் கோட்டையின் காவலாளிகளை மயக்கி காந்தக் கோட்டையின் இரகசியத்தை அறிந்துவர அனுப்பினார்கள்.

கலைஞர்களுக்குப் பொதுவாகக் கன்னியர்களில் ஒரு மயக்கமும், தயக்கமும் ஏற்படுவது இயற்கை. இப்பலவீனம் சகல கலைஞர்களுக்கும் பொதுவான விதி. கலைஞர்களான காவலாளிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அழகிய ஆரணங்குகளை அணைத்து மகிழக்கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது காவலர்களும் காதல் மயமானார்கள். தொட்டு விளையாடி சுகம் கண்டு மோகத்தின் தாக்கத்தில் காவலாளி இருக்கும்போது காசுக்கு உடலை விற்றேகும் கன்னியர் பத்தா பத்தா காந்தக் கோட்டை பற்றுகின்றது என்றாள். தூக்க மயக்கத்தில் திடுக்கிட்டு எழுந்த காவலாளி துரோகிகள் வரகு வைக்கோலைப் போட்டு எரித்துவிட்டார்கள் என்று கூறிக்கொண்டு எழுந்தான். பார்த்தான், காந்தக்கோட்டை எரியவில்லை. அவள் நித்திரையைச் சோதிக்கவே இவ்வாறு கூறினேன் என மழுப்பினாள். சோரம்போன காவலாளி ஏதோ விபரீதம் நடக்கப்போகின்றது என நினைத்து மன்னரிடம் சென்றான். அவனோ வெற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையோடு தன்னை ஏவியவர்களிடம் சென்று கோட்டையை சுற்றி வரகு வைக்கோலைப் போட்டு தீ வைத்தால் கோட்டையைப் பிடித்துவிடலாம் என்றாள்.

மாற்ற அரசன் கோட்டை எரிக்க திட்டம் தீட்டும் முன்பே தங்கள் ஞானத்தால் நடப்பதை உணர்ந்து கொண்ட மன்னரும் மற்றவர்களும் விமானம் கப்பல் மூலம் இரகசிய வழியால் வெளியேறினார்கள்.

மாந்தை நகரின் கோட்டை தீ வைத்து எரிக்கப்பட்ட செய்தியைக் கம்பராமாயணம்,

"சோவரனும் போர் முடிய தொல் இலங்கை கட்டழித்த சேவகன்" என்றும்

"வெய்யில் விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப எயில் மூன்றெறிந்த இயல்பே கொற்றமும்"

என்றும் சிலப்பதிகாரமும்,

"தூங்கெயில் எறிந்த தோடி தோற் செம்பியன்"

என மணிமேகலையும் கூறுகின்றன.

"தூங்கெயில் மூன்றெரித்த சோழன் காண் அம்மானை"

எனச் சிலப்பதிகாரம் வாழ்த்துக் கதை கூறியுள்ளது.

உலகில் முதல் முதல் நாகரிகம் மலர்ந்து மணம் பரப்பிய மாந்தை மாற்றாரின் பொறாமை பொச்சரிப்பால் அழிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது. அழிந்த மலர்களில் மகரந்தத்தின் தொடர்பால் பல நாடுகளில் வித்தூன்றி விளைந்த விளைவுகளே இன்று உலகில் மிளிரும் நாகரிகங்களாகும். இந்த நாகரிகம் அனைத்திற்கும் தாய் மாந்தை நாகரிகம் என்பதை வரலாறு வாய் திறந்து கூறுகிறது.

சிந்து வெளி நாகரிகம், சமோரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம் அமெரிக்க பெரு - மெச்சிக்கோ நாகரிகம் போன்ற நாகரிகங்களுக்கும் மாந்தை நாகரிகத்துக்கும் இணைந்த தொடர்புகள் உண்டு.

மாந்தை நாகரித்தை வித்திட்டு விளைவித்தவர்கள் நாகர்களான கம்மாளர்கள். இவர்கள் நாக, லிங்க வழிபாட்டுக்காரர்கள். ஈஸ்வர ஆட்சிமுறையை கைக்கொள்ளுபவர்கள். கட்டிடத் தொழிலிலும், உலோகத் தொழிலும் கைதேர்ந்த நிபுணர்கள். நாடு நகர் அமைப்பதில் வல்லவர்கள்.

மாந்தை அழிவின் பின் கப்பலில் சென்றவர்கள் சமோரியாவிலும், விமானத்திலும் சென்றவர்கள் அமெரிக்க பெருமெச்சிக்கோவிலும் அமர்ந்தார்கள். சமோரியர்கள் இலங்கைத் தமிழர்கள் என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இவர்களின் தொழில் கட்டிடக்கலை, வழிபாடு நாகலிங்க வழிபாடு எனவே இவர்கள் மாந்தையில் இருந்து சென்ற பரம்பரை என்பது உறுதியாகின்றது. பெரு - மெச்சிக்கோவில் வாழ்கின்ற மயோறிஸ் மக்களை எடுத்துக் கொண்டால் நாக லிங்க வழிபாட்டுக்காரர், கட்டிடக்கலை நிபுணர்கள், ஸ்வாவணக்காரர்கள், மாந்தையில் திரு. புஸ்பரத்தினம் செய்த ஆய்வின்படி பல கிணறுகளில் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது நாகர்கள் தெய்வங்களுக்கு நரபலி கொடுக்கும் நிலையைக் காட்டுகின்றது. இவ்வாறான கிணறுகள் பல பெரு - மெச்சிக்கோ பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன. மாந்தையில் வாழ்ந்த மயன் மக்களையே மேல்நாட்டார் மயோறிஸ் மக்கள் எனக் கூறுகிறார்கள். அவர்கள் பாவிக்கும் மொழி தமிழைப் போன்ற ஒட்டு மொழியாகும் என இந்து நாகரிகம் என்னும் நூலை எழுதிய சமணலால் குறிப்பிட்டுள்ளார்.. ஆகவே அவர்களும் மாந்தை வாசிகளே.

பிளன்ட் கக்ஸிலி ஆகியோர் கூறுவதாவது எகிப்தியரும் திராவிடரும் ஒரே குலமறையில் வந்தவர்களாக இருக்கவேண்டும். முன்னாளில் கறுப்பு என்றும் வெள்ளை என்றும் சொல்ல முடியாத பொது நிறத்தவரும் மிகவும் சீர்திருத்தம் பெற்றவர்களாக விளங்கிய ஒரு சாதியார் கிழக்குப் பகுதிகளிலும் எகிப்திலும், இந்தியா முழுவதிலும் சீனாவிலும் பசுபிக் சமுத்திர ஓரங்களிலும் அமெரிக்காவில் பெரு - மெச்சிக்கோ பகுதிகளிலும் பரவி இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் சூரியனையும் சர்ப்பத்தையும் சமயக் கொள்கையாகப் பயன்படுத்துகின்றார்கள். இன்ற இந்தியாவில் உள்ள சுவஸ்திக் அடையாளத்தை சமயச் சின்னமாக கொண்டிருந்தார்கள்.

"பாண்ட்" என்னும் நாட்டையும் அதில் உள்ள ஒவீர் என்னும் துறைமுகத்தையும் தங்களின் தாயகம் என எகிப்தியர்கள் கூறுகின்றார்கள். "ஒவீர்" துறைமுகம் என்பது நாகர் வாழ்ந்த மாதோட்டத்துறைமுகத்தைக் குறிக்கும். என சேர். பொன். அருணாசலம் கூறியுள்ளார். இதன்படி இந்த அடையாளங்களைக் கைக்கொண்டு வந்தவர்கள் நாகர்கள் என்பது வரலாறு கண்ட உண்மை.

எகிப்தின் நைல் நதிக் கரையோரத்தில் உள்ள நிப்பார் எல் இல் இன்னும் கடவுளின் பெயர் தமிழ்ப் பெயராக உள்ளது என்று சுவாமி விபுலானந்தர் தான் எழுதிய உலகபுராணத்தில் கூறியுள்ளார்.

கப்பல் வடக்கு நோக்கிச் செங்கடல் வழியாகச் செல்கிறது. இக்கரையில் பரந்து கிடப்பது பூர்விக எகிப்து தேசமாகும். இவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டு தேசத்தில் இருந்து வந்து இந்நாகரிகத்தை வளர்த்தார்கள். இவர்கள் சுருள் காதணி உடையவர்களாக, சுத்த வெள்ளை வேட்டி அணிந்திருந்தார்கள். இவர்கள் கருநிறமும் நீண்ட பெரிய மூக்கும் கரிய விழியும் கொண்ட சாதியார். எகிப்திலும் பவிலோனியாவிலும் வசித்தார்கள். இச்சாதியார் இந்தியாவிலும் குறிப்பாக தென்னிந்தியாவிலும் வசித்து வருகின்றார்கள். இவர்கள் திராவிடர் எனப்படுவார்கள். என சுவாமி விவேகானந்தர் தன் பயணக்குறிப்பில் கூறியுள்ளார்.

கடல் கொண்ட லெமூரியாவான குமரிகண்ட மக்களே முதல் தோன்றினார்கள். கடற்கோள் ஏற்பட்டபோது குமரி மலைக்கு வடபுறத்தே (இன்றைய தென்னிந்தியா) சென்று தங்கினார்கள். இன்னொரு பிரிவினர் மத்திய தரைக்கடல் பகுதியைச் சார்ந்த ஐரோப்பாவின் பல பகுதியில் சேர்ந்து ஆரியர் ஆகினர். எஞ்சியோர் ஆசியாவில் பல பகுதிகளில் குடியேறி துரானியர் அல்லது மங்கோடியர் அல்லது சிந்தியர் ஆகினர் என அறிஞர் ஸ்லேற்றர் கூறியுள்ளார். இக்கருத்தை அறிஞர் கால்பிட்கெபாட் என்பவரும் ஏற்றிருக்கின்றார்.

குமரி கண்டத்தில் தோன்றிய தமிழர் நாகரிகம் தென்னாட்டில் திராவிட நாகரிகமாகி, சிந்துவெளி நாகரிகமாக மலர்ந்து, சமேரிய நாகரிகமாகி, அரேபிய நாகரிகமாக வளர்ந்து, அமெரிக்க பெரு - மெக்சிக்கோ நாகரிகமாக உயர்ந்து கனிந்து காட்சி தருகின்றது என இந்தியாவில் நீண்ட நெடிய காலமாக ஆய்வு செய்து வரும் அருட்தந்தை ஈராஸ் பாதிரியார் கூறியுள்ளார்.

சமேரியர், எகிப்தியர், பபிலேனியர், கிரேக்கர், பழைய பிரித்தானியர், ஆசிரியர், எபிரேயர், அராபியர் என அனைவரது மத நூல்களும் மக்கள் இனம் எங்கு தோன்றியது என்பதை அறிவு பூர்வமாகக் கூற முடியாத பிணைப்புக்களையே நம்பாத ஆய்வாளர்கள் அறிஞர்கள் ஒரே முகமாக ஆசிய குமரிக்கே வந்தார்கள்.

கிழக்காபிரிக்கா, மத்திய தரைக்கடல் பகுதி, கிழக்குத் தீவுகள், இந்தியா முதலியவற்றை உள்வாங்கியதாக பெரிய நிலப்பரப்பு ஒன்று இந்தியப் பெருங்கடலில் இருந்தது. இது மூழ்கிப் போயிற்று. அங்கே தான் மனித இனம் தோன்றுவதற்கு அடிப்படையான பெருங்குழுவினர் தோன்றி இருந்தனர். என சரித்திர வெளிவட்டம் என்னும் நூலை எழுதிய ஏச். ஜீ. வெல்ஸ் கூறுகின்றார். உலக அடிப்படையில் தமிழரல்லாத முதல் இனமாகப் பேசப்படும் சுமேரியர்களே தமிழரிடமிருந்து பிரிந்து சென்று பாரசீகத்தின் மேற்கே குடியேறிய சிறு கூட்டத்தினராகக் காணப்படுகின்றனர். ஆனால் எல் அல்லது எல்லம் என்றும் பிற்காலத்தில் ஈழம் என அழைக்கப்பட்ட இன்றைய இலங்கை (அதாவது குமரி கண்ட அழிவில் எஞ்சிய தீவு) அதிலிருந்து போனவர்களின் பரம்பரையே என பண்டிதர் சவேரியார் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியலாளர், மக்களின் ஆராய்ச்சியாளர், மொழியாளர், தொல்பொருள் ஆராய்ச்சியாளர் தொடர்ந்த பெரும் உழைப்பினால் உலகின் பழைய வரலாறுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அவ்வரலாறுகளை நோக்குமிடத்துத் திராவிடர் எனப்படும் பெருங்கூட்டத்தினரே உலக வரலாற்றில் பழைமை பெற்று விளங்குவதைக் காணலாம் எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறியுள்ளார்.

மேலே கூறிய ஆய்வாளர்களின் முற்றும் முடிந்த ஆய்வு முடிவுகளின்படி, இன்றைய தென்நாட்டுக்குத் தெற்கே இருந்த பூபாகத்தில் இருந்தே மனித இனமும் நாகரிக வளங்களும் பிறந்து வளர்ந்து பரந்து விரிந்தன என்பது தெளிவு. அந்தப் பூபாகம் இலங்கை என பண்டிதர் சவேரியரும் இங்கல்ஸ்சார்ல்பும் இஸ்லாம் மதத்தவர்களும் கிறிஸ்தவர்களும் ஏற்றுள்ளார்கள்.

திராவிடப் பண்பாடு முதன் முறையாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட மன்னார் வளைகுடாவின் இருமருங்கிலும் உள்ள கரையோரப்பகுதிகளில் தோன்றி வளர்ந்தது என்கிறார். அறிஞர் கமில்வி, சுவவெல அறிஞர் மாலோனி என்பவர் சங்ககாலப் பாண்டியர் ஆட்சியும் பண்பாடும் வளர இந்து மாநிலத்திலிருந்து மன்னார் வளைகுடா வரை வளர்ந்த வர்த்தகமே காரணம் என்கிறார்.

மாந்தையில் குறுணிக்கற்காலக் கருவிகளோடு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அம்சங்களை எடுத்துக்காட்டும் தடையங்களும் கிடைத்துள்ளன என்பது தெரனியாலவின் கருத்து.

அறிஞர் ஸ்லெட்டரினதும் அருள் தந்தை ஈரோஸ் பாதிரியாரின் குறிப்புக்களை அடியொற்றிப் பார்க்கும்போது அறிஞர் கமில் வி. சுவலெபிலும் அறிஞர் மாலோனியும் சுட்டிக் காட்டும் உலக நாகரிகத்தின் பிறப்பிடம் மன்னார் மாந்தையே என்பதை அறுதியிட்டு உறுதியாகின்றது.

தமிழர்களின் பழைய வரலாற்றை ஐயம் திரிபுற விளக்கவல்ல புதைபொருட்கள் மாந்தையில் புதையுண்டுள்ளன. இது சம்பந்தமான அவ்வறிக்கைகளை யப்பான் நாட்டைச் சேர்ந்த புதை பொருளாளரும் வென்சிவெனிய பல்கலைக்கழக ஆய்வாளர்களும் 1981ம் ஆண்டு இலங்கை வந்து மாந்தையை ஆய்வு செய்து அறிக்கை தயாரித்து இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்திடம் சமர்ப்பித்தார்கள். கடந்த 18 வருடங்களாக இந்த அறிக்கையை வெளியிடாது அது சம்பந்தமான உண்மை நிலைமையை மக்களுக்கும் நாட்டுக்கும், ஏட்டுக்கும் தராது ஏமாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில் உலகின் மூத்த முதல் நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் தமிழரென்பது வெளிவந்தால் தாங்கள் இலங்கையில் இது காலவரை ஏற்படுத்தி வந்த பௌத்த நாகரிகமே இலங்கையின் நாகரிகம் என்ற போலி நிலையும் நினைப்பும் பாழாகிவிடும் பழுதாகிவிடும். தாங்களும் தங்களினமும் இரண்டாந்தரப்பிரசை. அதனால் இன்று பிடித்திருக்கும் அதிகாரக் கடிவாளம் அறுந்துவிடும் என்ற பயத்தால் வெளிநாட்டறிஞர்கள் பலநாள் முயன்று உழைத்து உருவாக்கிக் கொடுத்த அறிக்கையை ஆழக்குழிதோண்டிப் புதைத்து அடை காக்கின்றார்கள்.

இவர்களின் கூடாத, குள்ளநரி குறுகிய செயலால் தாய்த்திரு நாடான இலங்கை, உலக அரங்கில் பெறவேண்டிய பேரையும் புகழையும், கூட மறைக்கின்றார்கள். மறுக்கின்றார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகையில் மணம் இல்லை என நினைக்கும் நிலையினர் எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்படவேண்டும் என்பதற்காகத் தன்மூக்கை அறுக்கும் மூடர்கள், மடையர்கள்.

திருக்கேதீஸ்வர குறிப்புக்கள் என்ற ஆய்வில் திரு. என் சண்முகநாதன் என்பவர் தான் மாந்தையில் நடத்திய அகழ்வாய்வின் போது கிடைத்த மனித சடலத்தையும் அதனுடன் கிடைத்த மட்பாண்டத்தையும் ஆராய்ந்து அவை வரலாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தானவை எனக் கூறுகின்றார். அவற்றை ஆய்வு செய்த ஜெயவர்த்தனாவும் இவ்வுடல் தற்காலத் தென்னிந்திய மக்களின் தோற்றத்தைப் பிரதிபலிக்கின்றது எனக்கூறியுள்ளார்.

தமிழருடைய நாகரிகம் மிகமிகப் பழமையானது. உலகத்திலேயே தமிழரே முதல்முதல் நாகரிக வாழ்க்கை எய்தியவர்கள் என்பதற்கும் கடல் கடந்து தங்கள் நாகரிகத்தை பற்பல நாடுகளிலும் பரப்பினர் என்பதற்கும் வணிகத்துறை, கணிதநூல் வானநூல், கட்டிடக்கலை போன்ற துறைகளில் வல்லுனர்களாக இருந்தார்கள் என்பதற்கும், பல சான்றுகள் கிடைத்துள்ளன என சுவாமி விபுலானந்தர் தான் எழுதிய உலக புராணத்தில் கூறியுள்ளார். எனவே எவர் எப்படி முடிமறைத்தாலும் ஊர் வாயை மூட உலைமூடி கிடையாது. உண்மை உறங்காது. மேலே தந்த அறிஞர் பெருமக்களின் ஆய்வு முடிவுகள் உலகின் மூத்த முதல் நாகரிகத்தின் பிறந்தகம் இலங்கையின் மாந்தையே ஆகும் என்பதும் அதுபோல அந்த நாகரிகங்களின் சிற்பிகள், சிந்தனையாளர்கள் நாக இனத்தைச் சேர்ந்த படைத்தல் கடவுளின் பரம்பரையினரான கம்மாளரே என்பது உறுதியாகிவிட்டது. இலங்கைச் சிங்கள இனவெறிகொண்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் பொறாமையால் பொச்சரிப்பால் ஆமை போல ஆய்வறிக்கையை அடக்கி அடைகாத்தாலும் அவர்கள் அடையப்போவது ஏமாற்றமேயாகும்.

ஆய்வறிக்கையின் பல உண்மைகள் வெளிவந்துவிட்டன. நாடும் ஏடும் அறிந்துவிட்டது. இந்த ஆய்வின் மூலம் தமிழர்களே உலகில் முதற்றோன்றிய மூத்தகுடியினர் என்பதும் தமிழ் மொழியே உலகில் மூத்த முதல் மொழி என்பதுவும் தமிழ் நாகரிகமே உலகில் முதற்தோன்றிய பரவிய நாகரிகம் என்பதும் இலங்கையே ஆதி மனிதன் பிறந்தகம் என்பதும் தெளிவாகிவிட்டது. அதுபோல உலகம் எங்கும் தனி சிறந்த நாகரிக விழுமியங்களை அள்ளி வீசியவர்கள் இலங்கைத் தமிழர் தான் என்ற தேனினுமினிய செய்தியை அறியும் போது நம் நெஞ்சமெல்லாம் பூரிக்கின்றது. புளகாங்கித மடைகிறது. பலருக்கு வாழ்வை வளத்தை வழங்கிய தமிழினம் வாழாவெட்டியாக வாழ்விழந்து வதைபடும் நிலையை, நினைப்பை நினைக்கையில் வேதனைதான் மிஞ்சுகிறது. இருந்தும் ஈழம் எங்கள் தாயகம் இனிமை கொஞ்சும் தமிழகம் என்பதை நினைக்கையில்

"செந்தமிழ் நாடு என்னும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயிது காதினிலே"

என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாட்டு தாலாட்டுகிறது.

இலங்கைத் தமிழர்கள் உலக மனித குல வளர்ச்சிக்கு வாழ்வுக்கு வேண்டிய சகல விழுமியங்களையும் வழங்கியவர்கள் என்ற வரலாற்றை அறியும் போது,

"ஏந்தையும் தாயும் மகிழ்ந்து
குலாவி இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடித்தது இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள்
வளர்ந்து சிறந்ததும் இந்நாடே"

என்று பாவேந்தன் பாரதி பாடியது இலங்கையின் வரலாற்றைத் தெரிந்து புரிந்ததாற் தான்.

"தென்னாருடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி

என்ற திருவாசக அடிகள் இலங்கையை மையமாக வைத்தே பாடப்பட்டது என்பதை பேராசிரியர் கல்கியும் முத்தமிழர் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதன் அவர்களும் ஏற்றுள்ளார்கள். எனவே சிங்களவர் என்ன சொன்னாலும் இலங்கை தமிழரின் பூர்வீகத் தாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பண்பாட்டில் கணபதி வழிபாட்டு மரபு சில குறிப்புக்கள்

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி.

## அறிமுகம்

இந்துமதத்தின் தெய்வ வரிசையில் காணபத்தியப்பிரிவின் தலைவராக கணபதியை மரபுகள் நிலைநிறுத்தியுள்ளமையானது சமூக பொருண்மிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தமையையே எடுத்துக்காட்டுகின்றது. முதல்மரியாதை அல்லது முதல் அவிப்பாகம் கணபதிக்கேயுரியது. என்ற கோட்பாட்டை இற்றைவரைக்கும் நடைமுறையில் கொண்டுள்ள இந்துமதம் பல்வேறு குழுமங்களையும், இனங்களையும், மொழிகளையும் பிரதேசங்களையும் ஒன்றிணைத்து வைப்பதற்கு ஏற்ற பொதுமையான வழிபாட்டு நிறுவனமொன்றிற்கு கணபதியை தலைமைதாங்கச் செய்த வகையைக் காணும் போது அம்மதமானது என்றும் மங்காத நிலையில், உலகில் பரந்து சென்று, மக்கள் மீதும் செல்வாக்குச் செலுத்துவதற்கேற்ற சமூகச் சூழலை உருவாக்கி நிலைக்க வைத்துள்ளமையைக் காட்டுவதாக உள்ளது. கணபதி அச்சமூகச் சூழலுக்குரிய பிதாவாகத் திகழ்ந்து வருவதனை இன்றும் தென்னாசிய மற்றும், தென்கிழக்காசிய நாடுகளிலும் காண்கிறோம். பொருண்மிய ஈட்டத்திற்குரிய சமூக அலகுகள், சமுத்திரவியற் பிரயாணங்களுக்குரிய - முகவர்களுக்குரிய அதிகாரம், மனோபலம், தடைதாண்டுதல் போன்றவற்றைப் பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கணபதி மதிக்கப்பட்டு வந்தமையை இவ்வழிபாட்டு மரபின் ஓர் அதியுன்னத அலகாக அமையக் காரணமாகியது. வாணிபக்குடியேற்றங்கள். நிகழ்ந்தமைக்கும், வனாந்தர அஞ்ஞாதவாச தங்குமிடங்கள் மிருக சஞ்சாரத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட்டமைக்கும் பின்னணியில் கணபதியின் தலைமைத்திறன் சமூகங்களுக்குக் கிடைத்திருந்தமை பற்றியும் நோக்க வேண்டும்.

தென்னாசியாவைப் பொறுத்தவரையில் பசுபதி, நரசிம்மம், சடாயு, காமதேனு (காராம் பசு), சூரபத்மம் மஹிஸம், ஆனைமுகன் போன்ற ஐதீகவுருக்கள் இப்பிராந்தியத்தில் குழும வாழ்வியக்கத்தினூடாக பிரதான மத நீரோட்டத்துடன் இணைந்து கொண்டிருந்த Animism என்ற குலக்குழுமத்தின் வெளிப்பாடாக இருந்து வருவதனைக் காணலாம். ஆனால் தென்கிழக்காசிய நாடுகளில் இத்தன்மையானது தென்னாசியாவை விடவும் அதிகரித்துக் காணப்பட்டமைக்குரிய காரணியானது அங்கு குலக்குழும வாழ்வின் தொடர்ச்சியானது இற்றைவரைக்கும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருவதனாலாகும். இக்காரணத்திலேயே ஆனைமுகன் என்ற கணபதி மரபு அங்கு வேரூன்றி விருட்சம் பெற்றுத் தென்கிழக்காசிய மக்கள் வாழ்வில் கலந்ததோடு மட்டுமல்லாது பிரமத வாழ்வியலுடனும் இணைந்து கொண்டிருந்த தன்மையை சிற்ப ஓவியச் சான்றுகளினூடாகக் காண்கின்றோம்.

தென்னாசியாவின் பண்பாட்டுப் பரப்பினை அவதானிக்கும்போது அது பிராந்திய ரீதியில் தனித்துவமான குணாதிசயங்களைக் கொண்டு விளங்கியமையைக் காணலாம். அதாவது பிராந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான வகையில் பரப்பப்பட்ட பண்பாடுகளுக்கென ஒரு தலைமைத்துவத்தன்மை செயற்பட்டிருந்த வகையினைக் காணலாம். விசுவாமித்திரர் தலைமையில் இராமாயணச் சமூகமும், பரத்துவாச முனிவரின் தலைமையில் பாரத சமூகமும், புலம்பெயர்ந்து சென்று தடைகளைத் தாண்டி அடர்ந்த அடவிகளினூடாக எதிர்ப்பட்ட எதிர்ப்புக்களை யெல்லாம் முறியடித்த வகையில் தத்தம் சமூகப் பரப்பினை விஸ்தரித்துச் சென்றமையை காண்கின்றோம் தக்கணத்திற்குத் தெற்கேயும். அகத்தியனுடைய தலைமையிலும், நக்கீரனுடைய தலைமையிலும் பண்பாடு தடைகளைத் தாண்டி, பரந்து சென்று, ஓங்கி வளர்ச்சி பெற்றமையினை புராதன சின்னங்கள் வாயிலாக அறிகின்றோம். இந்நிலையில் இப்பிராந்தியத்தில் கணபதியினுடைய தலைமைத்துவம் எப்பகுதியில், எக்காலத்தில் முதலில் தோன்றி, பண்பாட்டுப் பரம்பலுக்குத் தடையாக விளங்கியவற்றை விலக்குவதற்கு வழிசமைத்திருந்தது என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை. வளங்களை ஓரணித்துவப்படுத்துகின்ற முகாமைத்துவத்தில் விசுவாமித்திரன் பங்கும், பரத்துவாச - அகத்திய முனிவர்களின் பங்கும் பணியும் தெளிவாக அமைந்திருந்தமை போன்று கணபதியினுடைய பங்கும், பணியும் அமைந்திருக்க வேண்டும். என மட்டுமே கொள்ளலாம். தீபகற்ப இந்தியாவிற்குத் தெற்கே வணிகமுகாமைத்துவ - கணக்கியல் முறையின் சிந்தனையுடன் கணபதி மரபு இணைக்கப்பட்டிருந்த முறையினை புராணீக, ஆகம, ஆதார இலக்கியங்கள் வாயிலாகக் காண்பதன் வாயிலாக கணபதியினுடைய அறிவியற் தலைமைத்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனலாம். பொல்லாப்பிள்ளையார் பற்றிய கணபதி மரபினை இக்கருத்தமைவிற்கேற்ற சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். ஆனால் நாம் கணபதி வழிபாடு தொடர்பாக இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினை என்னவென்றால் தென்னாசியாவை விட தென்கிழக்காசியாவிலேயே கணபதி வழிபாட்டு மரபின் காலத்தால் முற்பட்ட சுவடுகளைக் காணமுடிவது என்பதாகும். பர்மா, சீயம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய தென்கிழக்காசியத் தீவுகளிலே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் விளைவாக காலத்தால் முற்பட்ட நெற்செய்கைப் பண்பாட்டுடன் இணைந்த வகையில் இக் கணபதி வழிபாட்டு மரபும் இணைந்திருந்த வகை இன்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இச்சுருக்கமான அறிமுகப் பின்னணியுடன் வடமராட்சியில் கணபதி வழிபாட்டு மரபுகள் பற்றி நாம் சிந்திக்கலாம்.

## பண்பாட்டுத் தலைமைத்துவமும் யாழ்ப்பாணக் குடாநாடும்

யாழ்ப்பாணக் குடாநாடு என்றவோர் புவியியல் அலகு இத்தீவின் பண்பாட்டு வரலாற்றிற்கு ஒரு தனித்துவத்தினையும், ஒரு பண்பாட்டுத் தலைமைத்துவத்தினையும் வழங்குவதற்கேற்ற வகையில் கடல் முகப்புத்தளங்களைக் கொண்டு விளங்கியிருந்தமையைக் காணமுடிகிறது. கண்ணகி வழிபாட்டு மரபின் வருகை (கருவளப்பண்பாடு) கௌதம புத்தரின் நாகதீபவருகை ( அரசமரபொன்றின் கடந்தளப் பொருண்மியமையம்) சங்கமித்தை வருகை (பண்பாட்டு நிறுவனங்கள் தோற்றம் பெறல்), மாருதப்புரவீகவல்லி வருகை - லவல்லி வருகை (கடல் முகப்புத்தளங்கள் பண்பாட்டு விரிசலுக்குட்படுதல்) போன்றன இக் குடாநாட்டின் பண்பாட்டு வரலாற்றுடன் இணைக்கப்பட்டிருந்த மரபுகளாக உள்ளன. இச்சிறிய தீவின் பிரதான நிலப்பரப்பினைச் சென்றடைந்து கொண்டிருந்த பண்பாட்டியக்கங்கள் பல யாழ்ப்பாணக்குடா நாட்டினூடாகவே உள் வாங்கப்பட்டிருந்த வகையை நோக்கும் போது யாழ்ப்பாணக்குடாநாடு மிகநீண்டகாலமாகவே ஒரு பண்பாட்டு உருவாக்கத்திற்குரிய தலைமைத் துவத்தினை பொறுப்பேற்று, நிர்வகித்து வந்திருந்த வகையினை பாளி, பௌத்த இலக்கியங்கள் வாயிலாகவும், தக்ஷண கைலாயபுராணம், கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், கைலாயமாலை போன்ற இலக்கியங்கள் வாயிலாகவும் உய்த்துணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடிகிறது. தமிழகத்தில் கரகம் கமண்டலத்தினை கவிழ்த்த கதைபோன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காகம் (கோயிலை இடித்தவனின்) கண்ணைக் கொத்திய கதை கணபதி வழிபாட்டு மரபுடன் இணைக்கப்பட்ட நிலையில் வழங்குவதனைக் காணலாம். அந்தவகையில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் கணபதி வழிபாட்டுமரபு தொன்மையானதாக இருந்து வருவதனை உறுதிப்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. வடமராட்சியைப் பொறுத்த வரையில் கணபதி வழிபாட்டு மரபு எந்தளவிற்குப் பழமை வாய்ந்தாக இருந்து வருகின்றது என்பதனை விளக்குவதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது.

## வடமராட்சியில் கணபதி கோயில்களின் பரவல்

வடமராட்சியைப் பொறுத்தவரையில் கணபதிவழிபாட்டு மரபானது தனித்துவமான சமூக, பொருண்மிய வாழ்வுப் புலத்தின் பின்னணியில் வைத்து போஜிக்கப்படுவதனைக் காணமுடிகின்றது. கடற்கரையோரமாக செறிவான முறையில் அமைந்து காணப்படும் கணபதி கோயில்கள் ஒரு ரகமாகவும், உள்நாட்டு வயலும், நன்னீர் நிலைகளும் இணைந்து காணப்படும் இடங்களில் அமைந்துள்ள கணபதி கோயில்கள் இன்னொரு தனிவகையாகவும் இருப்பதனைக் காணலாம். வடமராட்சி கிழக்கில் உள்ள மண்டலாய் பிள்ளையார் கோவில் தென்கிழக்காசிய மரபிற்குள் அகப்பட்ட கணபதி வழிபாட்டு மரபினை வெளிப்படுத்தி நிற்பதாகச் சொல்லப்படுகிறது. அல்வாயில் உள்ள துளாயிற்பிள்ளையார், இன்பருட்டியில் உள்ள கற்பூரப்பிள்ளையார், தில்லையம்பலத்திலுள்ள மோதகப்பிள்ளையார், கரவெட்டியிலுள்ள கிராய் பிள்ளையார், நவிண்டிலுள்ள பூவற்கரைப் பிள்ளையார் ஆகியன போர்த்துக்கேயர் காலத்திற்கும் முற்பட்ட காலப்பரப்பிலிருந்து பூஜிக்கப்பட்டு வரப்படுகின்றன விநாயகர் ஆலயங்களாகும். மாயக்கையிலுள்ள தம்பசிட்டிப்பிள்ளையாரும் போர்த்துக்கேயர் காலத்திற்கும் முன்னரிலிருந்தே வழிபடப்பெற்று வரும் விநாயகராலயமாகும். இவை ஒவ்வொன்றிற்குமே தனித்துவமான தலபுராணக்கதைகள் நிலவி வருவதனைக் காண்கின்றோம்.

தில்லையம்பலத்திலுள்ள மோதகப் பிள்ளையாரின் வணக்க - வழிபாட்டு முறைகள் இற்றைவரைக்கும் ஆகம மரபு சாராத வகையிலேயே ஆற்றப்பட்டுக் கொண்டு வரப்படுகின்ற முறையைக் காணும்போது அதன் தனித்துவமும் தொன்மமும் வெளிப்படுவதனை உணரலாம். வாய்கட்டிப் பூசை செய்கின்ற முறையானது மிகவும் தொன்மை வாய்ந்தது மட்டுமல்லாது, பிராமணியமற்ற ஒரு பண்பாட்டு வளர்ச்சியை தக்க வைத்துக் கொண்டிருப்பதனையும் உணர்த்தி நிற்கின்றது.

தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலின் வணக்கமுறை, கிரியைமுறை, உற்சவமுறை ஆகியன முழுவதுமாக நெல் வயல் அறுவடை நடவடிக்கைககளையும், மாட்டுப்பட்டி பராமரிக்கப்பட்டு வரும் முகாமைத்துவ நடவடிக்கைகளையும் மையப்பொருளாகக் கொண்டதாகும். மோதக நைவேத்தியமே இங்குமிகப்பிரதானமான படையலாகும். Rice - Cake என அழைக்கப்படும் இந்நைவேத்திய முறையானது பெருங் கற்கால பூர்விகத் திராவிட - பழங்குடி மக்களது ஜீவனோபாயத்துடன் மிகவும் நெருங்கிய வகையில் இணைவு பெற்றதாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் காணப்படும் மாம்பழக்கணபதி வழிபாட்டு மரபுகளுக்கும் மோதகக் கணபதி வழிபாட்டு மரபுகளுக்குமிடையே காணப்படுகின்ற வேறுபாடானது ஆகமம் சார்ந்த ஆகமம் சாராத வணக்க - கிரியை முறைகளைக் கொண்டதாக உள்ளமையாகும். மாம்பழக் கணபதி தென்னிந்திய - வடஇந்திய மரபினையும் மோதகக் கணபதி தென்கிழக்காசிய நெல்வாணிப மரபினையும் எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது. வடமராட்சி கிழக்கிலுள்ள மண்டலாய் பிள்ளையார் மோதகக் கணபதியாகவே இருந்து கொண்டிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்காசியாவின் செல்வாக்கு வடமராட்சி கிழக்கில் ஏற்பட்டிருந்தமைக்கான ஓர் உதாரணமாகும்.

வடமராட்சியிலுள்ள கணபதி வழிபாட்டு மரபில் காணப்படுகின்ற இன்னொரு தனித்துவமான இயல்பு என்னவெனில் கற்பூரப்பிள்ளையார் என அழைக்கப்படுகின்ற ஒரு பிரத்தியேக கணபதி மரபாகும். தம்பசிட்டி இன்பருட்டியில் கற்பூரப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. மிகவும் புராதனம் வாய்ந்த துறைமுக நகராக விளங்கிய இன்பருட்டி (இம்பர் சிட்டி) பல்லவர் கால வாணிப நடவடிக்கைகளில் பெரும் பங்கு கொண்டிருந்தமைக்கான அகப்புறச் சான்றுகளையும் கொண்டு மிளிர்கின்றது. வியாபாரி மூலை என்ற வாணிப நகரின் வளர்ச்சியின் பின்னணியில் இன்பருட்டித்துறைமுகம் செயற்பட்டிருந்தமையைக் கண்டுகொள்ள முடிகிறது. இம்பர் என்ற பெயர் பல்லவர் வம்சத்திற்கு வழங்கிய மாற்றுப் பெயராகும். சிட்டி என்ற சொல் மதுரைத்தமிழ்ப் பேரகராதியில் மிதிகல் துறை என்ற பொருளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே இங்குள்ள கற்பூர விநாயகருக்கும் துறைமுக வாணிப நடவடிக்கைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்க வேண்டும். பல்லவர் பாணிக்குரிய சிற்பங்கள், திருவாசி வேல் என்பன இக்கோவிலில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இம்பர் சிட்டியிலுள்ள கற்பூரவிநாயகர் தொடர்பான வரலாற்றுநூல் ஒன்று 2002 கிருஷ்ணபிள்ளை சிவநேசன் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூலில் அக்கோவிலின் தொன்மம், மகிமை, அங்குள்ள கடம்பமரம், கற்பூரம் விளைந்த செயல் போன்றவை தொடர்பாக பல விடயங்கள் தரப்பட்டுள்ளன. மிகவும் உபயோகமான அந்நூலினை அடிப்படையாக வைத்து எதிர்காலத்தில் அத்துறைமுகப் பிரகாரத்தின் அமைப்பினையும், இயல்புகளையும் ஆராய முடியும்.

## முடிவுரை

மிகவும் சுருக்கமான ஓர் அறிவுரையுடன் அமைந்த இச்சிறு கட்டுரையின் கண் வடமராட்சியின் விநாயகர் வழிபாட்டுத் தொன்மத்தினை கருத்து அளவிலாவது பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொடக்கத்துடன் வைத்து எண்ணமுடிகிறது. வடமராட்சிமீதான வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வுகள் தொடர்ந்தவண்ண மிருப்பதால் விநாயகர் வழிபாட்டின் தொன்மத்தினைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாதுள்ளது. இருந்தும் வயலும், குளமும் சார்ந்த பிரதேசங்களில் அவ்வழிபாடு இயல்பாகவே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என எண்ணலாம். அப்பின்னணியிலேயே தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் வழிபாட்டு மரபுகளும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். வரணி - இயற்றாலை வீதியில் காணப்படும் இவ்வாலயத்தின் அருகாமையில் எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் தொல்லியல் அகழ் ஆய்வுகள் மூலமாகவே வடமராட்சியின் விநாயகர் வழிபாட்டு மரபின் தொன்மையத் திட்டவட்டமாக எடுத்துரைக்க முடியும்.

## இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படும் நூல்கள்


1. கிருஷ்ணபிள்ளை சிவனேசன்
கற்பூரவிநாயகர் (வியாபாரி மூலை - இன்பசிட்டி சித்தி விநாயகர் ஆலய வரலாற்று நூல்)
சுதர்சன் வெளியீடு, பருத்தித்துறை, 2002
2. V. Kanagaratnam
S. Rajagopal
P. Pushparatnam
V. Maheswaran(Editors), தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும்
By செல்லையா கிருஷ்ணபிள்ளை பத்மம்
Prof. S. Pathmanathan Felicitition Volume, Bavani Pathippakam, Jaffna.2004. pp. 01 - 08




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இந்துக்களின் விரத அனுட்டானங்கள்

**பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் (M.A, Ph.D.,) இந்து நாகரிகத்துறை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

இந்துக்களின் கடவுளரை வழிபடுவதற்கென அமைந்துள்ள கிரியை முறைகளில் விரதக் கிரியைகளும் ஒன்றாகும். 'விரதம்' என்ற சொல்லின் பொருள் வளர்ச்சியை ஆராய்ந்தால் 'விரத' என்ற சொல் 'ரித' என்ற வடமொழிச் சொல்லுடன் நெருங்கிய தொடர்புற்றிருப்பதை அறியலாம். 'ஒழுக்க நெறியினை நிலை நாட்டுதல்' என்னும் பொருளில் 'ரித' என்ற சொல் வேதங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'ரிதம்' என்கின்ற 'ஒழுங்கு முறைமையே' 'விரத' என்ற பொருளில் மனித வாழ்விலே ஓர்சீரான ஒழுக்கத்தினை வற்புறுத்தும் நோக்கிற் பிற்காலம் கருத்து வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

'வருணன் கடைப்பிடிக்கும் ஒழுங்கு ரிதம்
நியதி, விரதம் என்றெல்லாம் கூறப்படும்

எனவரும் பேராசிரியர் குருக்களின் கூற்று இவ் உண்மையினை உறுதிப்படுத்தும்.

இயற்கை ஒழுங்கு ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருப்பது போல, மனித வாழ்வும் குறித்த ஒரு கட்டுப்பாட்டிற்கமைய இயங்குவது நன்மை தருமெனச் சமயங்கள் யாவும் கூறுகின்றன. அந்த வகையில் விரதக் கிரியைகளும் மனித சமூகத்தை 'ஒழுக்கம்' என்ற கயிற்றினாற் கட்டி வைத்துப் பேணும் ஒரு சாதனமாகவே இந்து சமயத்திலே அமைந்திருக்கின்றன எனல் பொருந்தும்.

'வறுயதே ஸ்வர்க்கம், வறயந்தி ஸ்வர்கமனே னவா'

'எதன் மூலம் வானுலகடைய முடியுமோ அது விரதம். உண்ணாவிரதம் முதலிய புண்ணிய நோன்புகளை ஏற்றுக் கொள்ளுவதும் விரதம்' என அமரகோச நிகண்டும் கூறும். எனவே மேலான பதவி அல்லது உயர்நிலை அடைவதும் விரதம் என்பதன் ஒரு குறிக்கோளாகவும் இங்கு காட்டப்படுகின்றது.

ஈழத்து இந்துக்களிடையே சைவக் கிரியைகளில் ஒன்றான விரதக் கிரியை நீண்டகாலமாக வழக்கிலிருந்து வந்துள்ளது. இந்து சமய மறை நூல்களான வேதாகமங்களின் கருத்தினை அடியொற்றியே ஈழத்து அறிஞரும் 'விரதம்' பற்றிய அடிப்படைக் கொள்கையினை வகுத்துள்ளனர்.

'மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு
உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம்,
வாக்குக், காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை
விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல்'

என்பதே விரதம் என்பதன் பொருளாக இங்கு அமைந்துள்ளது. இதனையே சதபதப் பிரமாணம் பின்வருமாறு உணர்த்தியுள்ளது.

'மனிதன் எதுவித உணவுமின்றி
விரதநாட்களில் - உவாவாஸ
காலங்களில் கடவுளர் நினைவிலே
எந்நேரமும் மூழ்கியிருப்பர்'

ஆதலால் உணவின்றி இறை தியானத்திலே ஆழ்ந்திருக்கும் நிலை உபவாஸம் எனப்படலாயிற்று என்பது இங்ஙனம் புலனாகின்றது.

அத்துடன் விரதக் கிரியைகள் தோன்றுவதற்கு இதிகாச புராணங்கள் பெருமளவு வழிவகுத்துள்ளன. தவம், யோகம், முதலிய நெறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுவதற்குக் கடினமான வழியாகக் காணப்பட்டதால் எளிமையுடனும், பக்தியுடனும் கூடிய விரத நெறிகளை இதிகாச புராணங்கள் அறிமுகப்படுத்தி வைத்தன. அந்நூல்களில் தவம், தீர்த்தம், தோத்திரம், விரதம் எனச் சைவ வழிபாட்டு நெறிகள் பல்வேறு தோற்றங்களில் காணப்பட்டன. தவமும் யோகமும் காட்டிலே கைகூடுவனவாகக் கூறப்பட்ட அதே காலத்தில் விரதநெறிகள் வீட்டிலே கைகூடுவனவாகக் கூறப்பட்டன. விரதக் கிரியைகள் இவ்வாறு ஒரு புதிய வழிபாட்டு முறையாக ஆரம்பித்த போதிலும் ஒழுக்கமும், கட்டுப்பாடுமே அவற்றின் அடிப்படை இலட்சியமாக வேரூன்றி வந்துள்ளமையினை விரதக்கிரியைகளின் அனுட்டான முறைகள் புலப்படுத்தியுள்ளன. ஆதலால் விரத நெறிகளின் அடிப்படைக் குறிக்கோளானது ஈழத் தமிழ் மக்களிடையிலும் அவ்வாறே காலம் தோறும் போதிக்கப்பட்டு வந்துள்ளது.

'பூசை வழிபாட்டில் ஈடுபாட்டையும் பரிமளிப்பையும்

பெருக்குவதற்காக ஏற்பட்ட ஒரு வகை நியமங்கள் விரதங்கள்'

என்பதை எடுத்துக்காட்டி விரத நெறிகள் மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தும் கருவிகளாகுமென ஈழத்து இந்துக்கள் வற்புறுத்தியும் உள்ளனர்.

ஆகம நூல்களும் விரதக் கிரியைகளை இரண்டு பிரிவிலே கூறுகின்றன. ஆன்மார்த்தம், பரார்த்தம் எனப்படும் அவை முறையே காமிய விரதம், நிஷ்காமிய விரதம் என்ற பெயரிலே அழைக்கப்படுகின்றன. இது நீண்டகாலமாக நிலவுகின்ற ஒரு மரபாகும். ஆன்மிக ஈடேற்றம் கருதியும், பயன் கருதாதும் மேற்கொள்ளப்படும் விரதம் பரார்த்த காரியம் எனப்படும். மனிதன் தனது உலகியற் தேவைகளை முன்னிட்டு சுயநன்மை கருதிப் பின்பற்றும் விரதம் ஆன்மார்த்தமானது எனப்படும். இதுவே காமிய விரதமாகும். பொதுவாகப் பாவங்களில் இருந்து மீளல், பிராயசித்தம், தனதானியவிருத்தி, பொருட்செல்வம், சந்தான பாக்கியம், குடும்ப சௌபாக்கியம், முதலிய இஷ்ட காரிய சித்தியை அடைதலே காமிய விரதத்தின் குறிக்கோளாக விளங்குகின்றது. இஷ்ட காரிய சித்தியை வேண்டிப் பயன் கருதி விரதமிருப்பதே இன்று பொது வழக்காகக் காணப்படுகின்றது. இந்த வகையில் ஆன்மார்த்த விரதிகளே அதிகமானோர் சிறுபான்மை முதியோரிற் சிலர் பரார்த்தமாக விரதமிருப்பது சில இடங்களில் அருகியே காணப்படுகின்றது.

இந்தியாவிலும் ஈழத்து இந்துக்களாலும் பின்பற்றப்படும் விரதங்கள் பெரும்பாலும் ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பின்பற்றும் விதி முறைகளில் அவர்களிடையே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிவன், சக்தி, முருகன், திருமால், விநாயகர், சூரியன் போன்ற அறுவகைக் கடவுளர்க்கும் உரிய விரதங்கள் மூன்று பிரிவிலே அடக்கப்படும். அவை வார விரதம், திதி விரதம், நட்சத்திர விரதம், எனப்படும். இவ்விரதங்கள் யாவும் மாதங்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். குறிப்பாக ஓவ்வோர் இந்துவுக்கும் புண்ணியகாலம், சுபகரும நேரம், பிதுர் மாசிய விடயங்கள், ஆலய மகோற்சவ விபரங்கள் முதலியன பற்றியறியத் தரும் சாஸ்திர நூல் 'பஞ்சாங்கம்' எனப்படும். அந்நூலிலே 'விரதாதி நிருபணம்' என்ற தலைப்பிலே விரதங்களின் விபரமும், விரதகாலமனுட்டிக்கும் நேரங்களும் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன. ஈழத் தமிழ் மக்களாற் பின்பற்றப்படுகின்ற எல்லா விரதங்களும் அந்த நூல் பகுதியிலே தரப்பட்டுள்ளன. அவ்வாறான விரதங்களை ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கும் வசதிக்குமேற்ப அனுட்டிப்பதன் மூலமாக அநேகமாக எல்லா விரதங்களும் ஈழத்தின் ஏதோ ஒரு பகுதியில் அனுசரிக்கப்பட்டு வருகின்றன என்ற உண்மை புலனாகாமற் போகாது. இந்து சமய நியதிப்படி ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு வகையில் புண்ணிய காலமாக இருப்பதால் அவரவர் நோக்கத்திற் தக்கவாறு அனைவரும் ஏதோ ஒரு வழியைப் பின்பற்றும் வகையிலே இந்து விரதங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கடவுளை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு விரதங்களும் ஆக்கப்பட்டுள்ளன. அவரவர் தத்தம் குல தெய்வமாகக் கொண்டுள்ள தெய்வம் எதுவோ அத்தெய்வத்தை நினைந்து விரதத்தை மேற்கொள்ளுவர். ஒவ்வொரு மாதத்திலும் வரும் ஒவ்வோர் தினம் அந்த மாதத்தின் சிறப்பான விரத நாளாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. வார விரதமெனப்படும் அவற்றுள்

பங்குனித்திங்கள்
ஆடிச் செவ்வாய்
ஆவணி ஞாயிறு
புரட்டாசிச் சனி
ஐப்பசி வெள்ளி
கார்த்திகைத் திங்கள்

என்பன குறிப்பிடத்தக்க செல்வாக்கினை ஈழத்து இந்துக்களிடையில் பெற்றுள்ளன. இவ்விரதங்கள் எவ்வாறு, எதற்காக, மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றி ஈழத்திலெழுந்த விரத நூல்கள் அதிகமான தகவல்களைக் கூறுகின்றன.

வார விரதங்களுள் ஆடிச்செவ்வாயும், புரட்டாசிச் சனி விரதமும் ஈழத்து இந்துக்களால் பெரிதும் பேணப்படும் விரதங்கள் எனலாம். சோதிடத்தில் நம்பிக்கையுள்ள இந்துக்கள் பலரும் செவ்வாய் தோஷம், சனி தோஷம் முதலான கிரகதோஷ நீக்கத்தை வேண்டியே இவ் விரதங்களைப் பின்பற்றுகின்றர். ஆடிச் செவ்வாயைத் தொடக்கமாகக் கொண்டு தொடர்ந்து வருடம் முழுவதும் செவ்வாய் விரதம் பிடிக்கும் மக்களும் உள்ளனர். ஈழத்திலே செவ்வாய் விரதமும் அதோடு தொடர்புடைய தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயமும் பலவருடங்களாக மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளமை யாவரும் அறிந்ததே.

சனி தோஷமற்ற இந்துக்களும் பின்னரும் சனி தோஷம் தம்மைப் பற்றாதவாறு பயபக்தியுடன் சனி விரதத்தைப் பேணுவர். இந்த விரதமானது விஷ்ணு ஆலயங்களிலும், சிவாலயங்களிலும் அனுட்டிக்கப்படும் மரபு ஈழத்திலே வழக்கிலேயுள்ளது. இவ்வாலயங்களில் சனி தோஷம் சாந்தியாகும் வண்ணம் நவக்கிரக தேவர்கட்கு வழிபாடாற்றப்படும். புரட்டாசி மாசச் சனி வாரம் தோறும் இவ்விரதிகள் காலை உணவை விடுத்து எண்ணெய் ஸ்நானம் செய்து, காகத்திற்கு உணவிட்டுத் தாம் உணவு உண்பர். அத்துடன் ஆலயம் சென்று சனீஸ்வரனுக்கு எள்ளுச் சாதம், கறுப்புப்பட்டி சாத்தல், நல் (எள்) எண்ணெய்த் தீபமேற்றல் முதலிய வழிபாடுகளும் இவ்விரதத்தின் சிறப்பம்சங்களாக ஈழத்தில் விளங்குகின்றன. பாவமெனப்படும் கறுப்புத் துணியிலே எள்ளையிட்டு சனீஸ்வரனின் அருள் வெள்ளமாம் நல்லெண்ணையில் தீபமேற்றிப் பாவ விமோசனம் பெறுவதான ஒரு நம்பிக்கை இவ்விரதிகளிடம் காணப்படுகின்றது.

ஐப்பசி வெள்ளி விரதம் முருகக் கடவுளுக்குச் சிறப்பாகவும் விநாயகருக்கு குறிப்பிட்ட ஒரு சுக்கிரவார விரதமாகவும் பின்பற்றப்படுகின்றது.

"எள்ளரும் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்
வெள்ளி நாள் விரதம் தானே விண்ணவர் உலகம் காத்த
வள்ளல் தன் விரதமாகும்"

என கந்தக் கடவுளின் விரதமாகச் சுக்கிர வார விரதத்தைக் கந்தபுராணம் போற்றியுள்ளது அதன் சிறப்பினைப் புலப்படுத்துவதாகும். இந்த விரத காலங்களில் யாழ்ப்பாணத்து நல்லூரிலும், மாவைக் கந்தன் ஆலயம், இணுவில் கந்தசுவாமி கோயில் போன்ற ஆலயங்களிலும் சூரசங்காரம் சிறப்பான திருவிழாவாக இடம்பெறும் மரபு காணப்படுகின்றது. கார்த்திகைச் சோமவார விரதமும் தனிச்சிறப்பு வாய்ந்தது. இக்காலங்களில் சிவாலயங்களில் விசேட பூசையும், சங்காபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெறும். வார விரதங்களில் தற்போது வியாழக்கிழமையானது பகவான் சத்தியசாயி மகானின் விரத நாளாகவும் அனுட்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினை விட நட்சத்திர விரதங்களும் மாத ரீதியாக அனுட்டிக்கப்படும் வகையில் அமைந்துள்ளன. உதாரணமாகத்

தைப்பூசம்
மாசி மகம்
பங்குனி உத்தரம்
சித்திரைச் சித்திரை
வைகாசி விசாகம்
ஆனி உத்தரம்
ஆடிப் பூரம்
ஆவணி மூலம்
ஐப்பசி உத்தரம்
கார்த்திகைக் கார்த்திகை
மார்கழித் திருவாதிரை

போன்ற நட்சத்திர விரதங்கள் யாவும் ஈழத்து இந்துக்களினால் விரத காலமாகவோ அல்லது விசேட புண்ணிய காலமாகவோ பின்பற்றப்படுகின்றன. இந்த விடயம் பற்றி காரணாகமம் நட்சத்திர பூஜா விதிப்படலத்தில் பல குறிப்புக்கள் கூறப்படுவதிலிருந்து நட்சத்திர விரதங்களும் இந்துக்களிடையில் புராதன காலமுதல் கடைப்பிடிக்கப்பட்டு வரும் விரதமென அறிய முடிகிறது. இவ்வரலாற்றுச் சிறப்பினைத் 'தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்' என்னும் சம்பந்தர் தேவாரம் குறிப்பாக உணர்த்தியுள்ளது. இருபத்தியேழு நட்சத்திரங்களில் எட்டாவதாக வருவது தைப்பூசம். வியாழ பகவானை அதிதேவதையாகக் கொண்ட இவ்விரத மகிமை பழனித் திருத்தல புராணத்திலும் இடம்பெற்றுள்ளது. வியாழனும் குரு, முருகனுக்கும் சிவகுருநாதன் என்றும் ஒரு பெயருண்டு. எனவே இது அறிவுக்கு எடுக்கும் விரத விழாவாகவும் கருத முடியும்.

பிதுர் வழிபாட்டைக் குறிக்கும் புண்ணிய விரதங்களும் ஈழத்து இந்துக்கள் மத்தியில் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இறந்தோராகிய முன்னோர்களிடமிருந்து நற்கருமப் பலன்களையும், நல்லாசிகளையும் பெறும் பொருட்டும் அவர்களது பாவ கருமங்கட்கு விமோசனமளிக்கும் வகையிலும் பிதுர் விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய பிதுர் வணக்கத்தைக் குறிக்கும் விரதங்களாக சித்திரா பௌர்ணமியும், ஆடி அமவாசை விரதமும் விளங்குகின்றன. இந்து சமயத்தில் தொன்மைக் காலம் தொட்டு வழக்கிலிருக்கும் இந்த விரதம் பற்றி மனுதர்ம சாஸ்திரத்தில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சிராத்தம் பண்ணுவோன் பரிசுத்தமாகவும், தென்புறம் தாழ்ந்துள்ள இடத்தைச் சாணத்தால் மெழுகி... அந்தப் பரிசுத்தமான இடத்தில் வரிக்கப்பட்ட பிராமணர்கள் வந்தமர்ந்த பின்பு... பூசிக்கத்தக்க அவர்களை ஆசனத்திருத்தி... அவர்களைப் பூசித்து .. அக்கினியின் தென்புறத்தில் பிதுர்களின் பொருட்டு ஓமம் செய்து பிண்டப் பிராதானம் செய்யும் பூமியில் தெற்கு நுனியான தர்ப்பையில் மூன்றிடத்தில் எள்ளும் ஜலமும் கைமறித்து விட வேண்டும்'

என்பது சிரார்த்த விதியாகக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய மரபானது இன்று வரை ஈழத்து இந்துக்களிடமும் நிலைத்திருப்பது அதன் நீண்ட சமய பாரம்பரியத்தை உணர்த்துவதாகக் காணப்படுகின்றது. காரணாகமம் அமாவஸ்ய பூஜா விதிப்படலம் இதன் தன்மையை எடுத்துக் கூறும்.

பெற்றோர்களை இழந்தோர் ஒரு ஆண்டு கழித்து வருகின்ற முதற் பௌர்ணமி, அமவாசையன்று தொட்டு இவ்விரதானுட்டானத்தை ஆரம்பிக்கின்றனர். அத்துடன் வருடம் தோறும் இவ்விரதத்தை தொடர்ந்து பின்பற்றுபவர்களுமுண்டு. சித்திரையில் வரும் பௌர்ணமி தாயாருக்குரிய விரதமாகவும், ஆடி அமவாசை தந்தைக்குரிய விரதமாகவும் கூறப்படும். ஏனைய விரதங்களைப் போலவே பிதுர் விரதங்கட்கும் ஆலயங்கட்குமுள்ள தொடர்பு ஈழத்திலே குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்றது. சித்திரைப் பௌர்ணமியன்று ஈழத்து இந்துக் கோயில்கள் பலவற்றில் சித்திரைக்கஞ்சி வார்க்கப்படுவதுமுண்டு. இதற்கும் பிதுர் விரதத்திற்கும் தொடர்பிருப்பதாகக் கூறுவது மேலும் ஆய்வுக்குரியது. மனிதர்களின் பாவ புண்ணிய வினைகளை பதிவு செய்பவர் சித்திரகுப்தனார். அன்றைய தினம் அவரை நினைந்து விரதம் இருந்து கஞ்சி வார்த்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானம் முதலியவற்றினை ஆற்றுவதன் மூலம், மனிதர்கள் அறியாமல் செய்த தவறுகள் மன்னிக்கப்படுவதாகவும் ஐதீகமுண்டு.

சித்திரைச் சித்திரையில் சித்திரகுப்தனார் பிறந்ததாகப் புராணமரபு காணப்படுவதால் அன்று அனுட்டிக்கும் விரதம் சித்திரை விரதம் எனவும், அவரை நினைந்து ஆலயங்களில் பௌர்ணமியன்று கஞ்சி வழங்கப்படுமென்றும் ஒரு நம்பிக்கை ஈழத்து இந்துக்களிடையே நிலவி வருகிறது. சித்திரை நட்சத்திரத்துடன் சந்திரன் நிற்கும் காலமாதலால், சந்தரன் மாதுருகாரகன் எனச் சோதிடநூல் கூறுவதாலும் சித்திராப் பௌர்ணமி விரதம் தாயார்க்குரிய விரதமாகச் சிறப்பிக்கப்பட்டது. சித்திராப் பௌர்ணமி தென்னகத்திலே மதுரையிற் பெருவிழாவாக இந்திர விழாவிற்குச் சமமாகக் கொண்டாடப்படும். தமிழ்நாட்டில் எட்டுக் குடி முருகன் சந்நிதானத்திலும் இந்த விழா நடைபெறுகின்றது.

ஆடி அமாவாசை விரதத்திற்கும் மாவைக்கந்தன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் ஆடி அமாவாசைத் தீர்த்தமாகப் புகழப்படும். அன்று இந்த விரதிகள் யாவரும் மாவைக் கந்தனின் தீர்த்தக்கேணியாக நகுலாசல தீர்த்தத்தில் தீர்த்தமாடிப் பிதுர்கட்குத் தர்ப்பணமிட்டு, அந்தணர்க்குத் தானம் வழங்கி மாவை முருகனைத் தரிசித்து வீடு திரும்பி உணவுண்டு விரதத்தை நிறைவேற்றுவர்.

'அமாவாசை பௌர்ணமி நாட்களில் கடலில் தீர்த்தமாடிக்கடல் நீரைத் தமது பாவத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும் இறைவனது அருள்நீராகவும் நினைந்து காலம் சென்ற பிதுர்களை எண்ணி, அவர்களது பாவத்தைப் போக்கி அவர்கட்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டுதல்'

என்பதே பிதுர் விரதங்களின் குறிக்கோளாக மக்கள் நம்பிக்கையுடன் போற்றி வருகிறார்கள் என அறியக் கூடியதாயுள்ளது. மட்டக்களப்பு வக்கி எல்ல விஷ்ணு ஆலயத்திலும் ஆடி அமாவாசை விரதம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அடுத்துத் திதிகளை அடிப்படையாகக் கொண்ட விரத வகைகளும் ஈழத்துத் தமிழ் மக்களிடையில் செல்வாக்குப் பெற்றுள்ளன. அவற்றுள் ஆகமம் கூறுகின்ற பிரதோஷ விரதமும் சிவராத்திரி விரதமும், சோமவார விரதமும் சிவனுக்குரிய விரதமாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. விரத மகிமையைப் பேணுவதில் ஈழத் தமிழர்கட்குள்ள ஆர்வத்தினை விரத மான்மியம் பற்றி எழுந்த ஈழத்துப் புராண நூல்களிலிருந்தும் அறியலாம். சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார் கதை, கந்த புராணம், விநாயக புராணம் போன்றன சிறப்பான விரதங்களைப் பற்றிக் கூறும் ஈழத்திலெழுந்த நூல்கள் சிலவாகும். அனேகமாக இந்துக்களை நல்வழிப்படுத்தும் பொருட்டும், அறப்பயிற்சி, தானதருமம் இவற்றினை மக்களிடையே வளர்க்கும் பொருட்டும் மட்டுமன்றி, ஈழத்து இந்து சமயத்தைப் பேணும் முயற்சியில் எழுதப்பட்ட நூல்களாகவே இவை அமைந்துள்ளன. இவற்றிலே சமயத்தின் மகிமையை விரதங்களினூடாகப் பிரசாரம் செய்யும் நோக்கமே பெரும்பாலும் காணப்படுகின்றது. பிரமோத்தர காண்டம் போன்ற நூல் சிவவிரத மகிமை கூறுவதன் மூலம் சிவவழிபாட்டை மேம்படுத்துவதாக உள்ளது எனலாம். பொதுவாக விரதங்களின் குறிக்கோள் மூன்று வகையிலே கூறப்பட்டுள்ளன புண்ணியம் தேடுவதற்காக மேற்கொள்ளும் ஏகாதசி முதலிய நித்ய விரதங்கள் ஒருவகை, அடுத்தது பாவமன்னிப்பிற்காக நோற்கும் சாந்திராயனம் அல்லது நைமித்திக விரதம், மூன்றாவது இன்பம், செல்வம், ஆயுள் இவற்றினை வேண்டி நோற்கும் காமிய விரதங்கள் எனவும் இன்னொரு வகையிலும் விரத நோக்கங்கள் சொல்லப்பட்டுள்ளன.

திதி விரதங்களுள் சிவராத்திரி, நவராத்திரி, ஏகாதசி, கந்தசஷ்டி, விநாயக சதுர்த்தி முதலிய விரதங்கள் ஈழத்திலே மிகவும் பிரபல்யமானவையாகும் இப்பிரதான விரதங்களை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தின் பிரதான மகிமை கூறும் நூல்களே எழுந்தன எனில் அவ்விரதத்திற்கு இங்குள்ள செல்வாக்கு எத்தகையதென்பது புலப்படும். நாவலர் கலாசாரத்திற்கு முன்பிலிருந்தே திதி விரதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவும் வழக்கிலிருந்துள்ளன. ஈழத்தின் விரதக் கிரியைகளைப் பற்றி ஒரு அம்சத்தை இங்கே கட்டாயம் குறிப்பிடவேண்டும். யாதெனில் விரதக் கிரியைகள் யாவும் வீட்டில் மேற்கொள்கின்ற கிரியைகளாகவே ஆதியில் ஆரம்பமாயின. ஆனால் அந்த நிலையில் தற்போது பெருமாற்றம் ஏற்பட்டுள்ளது. விரதநெறிகள் யாவும் ஆலயங்களுடன் தொடர்புள்ள பெருவிழாவாக ஈழத்தில் தற்போது வளர்ச்சியடைந்திருக்கின்றன.

'புராணேதிகாச காலங்களில் விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, கேதார கௌரி விரதம், வரலக்சுமி விரதம், நவராத்திரி விரதம், சத்திய நாராயண விரதம் யாவும் இல்லங்களிலே அவ்வப் பிரதிமைகளைச் செய்து புரோகிதரை அழைத்துப் பூசை முதலியன செய்வித்து பூசித்த விக்கிரகத்துடன் தட்சணை கொடுப்பது முறையாக இருந்தது. ஆனால்,.... திருக்கோயில்கள் எழுந்த பின்னர் அவ்விடத்திலேயே விரதிகள் ஒன்றுகூடிச் சங்கற்பம் அபிடேகம், அலங்காரம், தபம், ஜெபம் முதலிய வழிபாடுகள் அனைத்தையும் செய்யத் தலைப்பட்டனர்'

என்ற கூற்றானது பிரசித்தி பெற்ற விரதங்கள் யாவும் மகோற்சவங்கட்கு இணையான திருவிழாவாக மாறிவிட்ட உண்மையினை எடுத்துக்காட்டும்.

விரதானுட்டானங்களில் சாதாரண நெறி, உயர்நெறி என இருவகை நெறிகள் பின்பற்றப்படுவதுண்டு. விரதி ஒருவன் ஒரு பொழுது காலை உணவு விடுத்து ஆராதனை, ஜபம், வழிபாடு இவற்றினை நிறைவேற்றி மதிய உணவு விடுத்து அன்றைய பொழுதுடன் விரதத்தை முடித்துக் கொள்ளுவது சாதாரண நெறியின் பாற்படும். உயர்நெறியானது அப்பெற்றி வாய்ந்ததல்ல. 'நோன்பிருத்தல்' எனப்படும் உபவாஸநெறி அதிலே சிறப்பிடம் பெறுகின்றது. உப + வஸ - எனில் நெருங்கி வசித்தல் அல்லது உடனுறைதல் எனப்படும். 'கடவுளுடன் ஒன்றாக ஒருமித்து வாழ்தல்' என்பது உபவாஸதம் எனப்பட்டது. உபவாஸ காலங்களில் கடவுளர் விரதிகளின் மனதிலே சான்னித்யமாகி அவர்களுடன் வசிப்பதால் அக்காலம் விரத காலம் ஆகக் கருதப்பட்டது. அக்காலத்தில் தூய உணவினை விரதியானவன் கடவுளிற்கு நிவேதித்த பின் அவன் ஆசீர்வாதம் பெறுவான். பெற்ற பின் விரும்பினால் இரவு ஒரு நேரம் மட்டும் உண்ணலாம் என விதிக்கப்பட்டது.

இந்த வேதகால மரபானது சிறப்பான திதி விரதங்களிலே உபவாஸ விரதி நியதியாகப் பிற்காலம் வளர்ச்சி பெற்றதை ஈழத்து இந்து விரத விதி முறைகளிலும் காண முடிகின்றது. உபவாஸ விரத நியமமானது சிவராத்திரி, நவராத்திரி, ஏகாதசி, கந்தசஷ்டி, விநாயக சதுர்த்தி முதலிய எல்லா விரதங்களிலும் பேணப்பட்டுள்ளது. சிவராத்திரி விரதம் ஈழத்தின் சிறப்பான சில விரதங்களில் ஒன்றாகும்.

'அறைதரும் விரதம் அனைத்தினுமுரைக்கும்
அரனிரவு அதிகமென்றறைமின்'

என சிவராத்திரி விரத மகிமை ஈழத் தமிழ் மக்களால் போற்றப்படும் பெற்றி வாய்ந்ததாம். ஈழத்தின் புகழ் வாய்ந்த சிவாலயங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம், காரைநகர் சிவாலயம் போன்ற பிரதான ஆலயங்கள் அனைத்திலும் சிவராத்திரி இரவு விசேட பூசை ஆராதனைகளுடன் கொண்டாடப்படுகின்றது. மக்களின் மித மிஞ்சிய பேராதரவு காரணமாகக் கேதீஸ்வரம் சிவராத்திரி விரத விழாவானது இலங்கை வானொலியிலும் எல்லாப் பக்தர்கட்காகவும் வருடம் தோறும் ஒலிபரப்பப்பட்ட காலமும் ஒன்றிருந்தது. மீண்டும் அந்நாள் விரைந்து வரவேண்டுமென்பதே இந்துக்களது வேணவா.

சிவராத்திரி விரத விழாவானது பெரும் சிவாலயங்களில் நான்கு யாமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வோர் யாமத்திலும் விசேட பூசை நடத்தப்பெறும். அதிலே நூற்றெட்டுச் சங்குகளைக் கொண்ட சங்கு பூசையும் நடேசரபிஷேகமும், விரிவான சிவலிங்க தீபாராதனையும் அதன் சிறப்பம்சமாகத் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக முன்னேஸ்வரத்தில் கடைசி யாமப் பூசையில் செங்கதிரோன் மூலவர் மீதுபட்டு ஒளி வீசுவது சிறப்பான ஒரு நிகழ்ச்சியாகும். சிவராத்திரி பூஜா விதிப்படலத்திலே ஆகமம் இவ்விரத மகிமை பற்றிச் சிறப்பிக்கின்றது. மலைநாட்டு மக்களிடையே சிவனொளிபாத மலைக்கு சிவராத்திரி இரவிலே பக்தர்கள் யாத்திரை செல்வது ஈழத்திலே பெரு வழக்காகி வருகின்றது. இரவு கண் விழித்து சிவநாம பஜனையுடன் மலையேறும் இந்துக்கள் சிவனின் பாத கமலங்களில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளியினைத் தரிசித்து அதிகாலையிற் திரும்புவர். சிவராத்திரி இரவிலே ஜோதிமயமான லிங்கத்தை விசேடமாக வழிபடுவதுண்டு. பிரம்மா, விஷ்ணு, இருவரும் சிவனின் அடிமுடி தேடிக் காணாது செருக்கிழந்து திரும்பி வந்து அக்கடவுளைப் போற்றியவிடத்துத் தோன்றிய ஜோதி வடிவே சிவலிங்க ரூபமாயிற்று எனப் புராணங்களில் பேசப்பட்டுள்ளது. அதனால் மட்டுமன்றி எல்லாத் திருவுருவங்கட்கும் நிலைக்களனாக விளங்கும் அருவுருவத் திருமேனி சிவலிங்க மூர்த்தமாகையால் சிவராத்திரி இரவில் சிவலிங்க பூஜைக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது.

அத்தகைய சிவராத்திரி விரத மகிமையானது தற்காலத்தில் மகிமை குன்றிக் கேலிக்குரிய நிகழ்ச்சியாகியிருப்பது உண்மை. இந்துக்களின் மனதை அது நிச்சயம் வருத்தமடையச் செய்யுமென்பதை பின்வரும் கூற்று மெய்ப்பிக்கும்.

'இவ்விரதத்தின் இக்கால நிலையினை நினைக்கும் போது வெட்கமும் துக்கமுமாக இருக்கின்றது... விரதங்கள், வந்தனைகள் வழிபாடுகளில் நம்பிக்கை குறைந்து விட்டது. விரதம் என்ற சொல்லி ஏதோ நடக்கிறது. அதுபோலச் சிவராத்திரி விழிப்பும் நடக்கிறது... எப்படியோ கண் விழித்து விட்டால் போதும் என்பது இக்காலக் கருத்து' அனேகமாக எல்லா விரதங்களுமே இன்று அவரவர் வசதிக்குத் தக்கவாறு உருமாறி விட்டதென்றுதான் கூற வேண்டும்.

நவராத்திரி விரதமும் இன்று ஈழத்து ஆலயங்களில் பெருவிழாவாக நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விரதத்தின் இறுதி நாள் மானம்பூ, மகிஷாசுரவதம், கன்னிவாழை வெட்டுதல் என்ற பல பெயர்களில் அழைக்கப்படும். சக்தியாகிய ஸ்ரீலோக மாதாவுக்கு வித்தியாலயங்கள், தேவாலயங்கள், மடாலயங்கள், இல்லங்கள் எங்கும் இவ்விரதமானது கோலாகலமாகப் பின்பற்றப்படுகின்றது. இந்திய நாட்டில் பரவலாக எல்லாவிடங்களிலும் இவ்விரத விழா நடத்தப்படுவதுடன் தென்னகத்திலே 'தசரா' என்ற பெயரிலும் இந்த விரத நிகழ்ச்சி செல்வாக்குப் பெற்றதாக விளங்குகின்றது. நவராத்திரி விழாவின் ஆரம்பத்தில் இந்துக்கள் அனைவரும் இல்லங்களில் பொம்மைக்கொலு வைப்பது ஈழநாட்டிலும், இந்திய நாட்டிலும் ஒரு மரபாகக் காணப்படுகின்றது. மரப்படிகளை அடுக்கடுக்காகக் கட்டி அவற்றில் அழகிய பொம்மைகளையும், விக்கிரகங்களையும் வைத்து அதனை ஒரு கலை விழாவாக மாற்றி விடுகின்றனர்.

ஈழத்தின் முக்கிய தேவாலயங்கள் அனைத்தும் நவராத்திரி விழாவிற்குப் பெருமதிப்பளித்து வருகின்றன. மாவைக் கந்தன் ஆலயத்திலே நவராத்திரி விரதத்தின் இறுதி நாளான விஜயதசமியன்று முருகக்கடவுள் தனது ஆலயத்திற்குத் தெற்கேயுள்ள துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளுவது அந்த விழாவின் ஒரு விசேட நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சமீவிருட்ச பூஜையும், மகிஷாசுர சம்காரமும் நடைபெறும். இதனை விட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல சிவாலயங்கள், அம்மன் கோயில்கள் என்பவற்றிலும், ஊர்க்கோயில்களாக உள்ள வைரவகோயில், காளிகோயில், முனியப்பர் கோயில் முதலியவற்றிலும் இவ்விரத தினங்களில் அம்பாளுக்குப் பொங்கி, கற்கண்டு, அவல், பழம் படைத்து விசேட பூசைகளும் ஆற்றப்படும். இவ்வாறான விரதங்களை விழாக்களாகக் கொண்டாடுவதன் மூலமாகக் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, வழிபாடு, வந்தனை என்பவற்றினடியாக சமூகத்தவரிடையில் கலை விழிப்புணர்ச்சியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையும், ஒருமைப்பாடும், தானதருமப் பண்புகளும் வளர இவ்விரதங்கள் ஓரளவு வழி வகுக்கின்றன எனலாம்.

ஈழத்து சிவாலயங்களுள் ஒன்றான முன்னேஸ்வரத்திலே வசந்த நவராத்திரி என்பது வருடம் தோறும் சாரதா நவராத்திரி உற்சவம் போல சித்திரை மாதத்திலே கொண்டாடப்படுகின்றது. இந்த விரதகாலத்தின் போது அந்த ஆலயத்திலே நூற்றிரெட்டுச் சங்குகளைக் கொண்ட சங்கு பூசையும், கும்பபூசையும், விசேட யாகப்பூசையும் பிரதான ஒரு குருவினால் நடாத்தப்படும் முக்கிய கிரியைகளாகும். ஒவ்வோர் சங்கிலும் விசேடமான மூலிகைகள் பண்டு தொட்டுப் போடப்பட்டு அபிடேகம் நடத்தப்படுவதால் முன்னேஸ்வர ஆலய அபிடேக தீர்த்தம் சக்தி வாய்ந்ததொன்றாக ஈழத்து இந்துக்களாற் போற்றப்படுகின்றது. நவராத்திரி விரத விழாவானது ஈழத்து இந்துக்களிடையில் நட்பு, நல்லெண்ணம், கலையார்வம் முதலியவற்றை அழியாது பாதுகாத்து வருகின்றதெனக் கூறலாம்.

கந்தபுராணத்திற்கும் ஈழநாட்டு முருக வழிபாட்டிற்குமுள்ள தொடர்பும் இணைப்பும் புராதனமானதெனவும் புனிதமானதெனவும் பேணப்படுகின்றது. எனவே கந்தக் கடவுளுடன் தொடர்புள்ள கந்தசஷ்டி விரதத்திற்குள்ள மகிமைக்கும் சிறப்பிற்கும் ஒரு எல்லை கிடையாது எனலாம். யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் 'கந்தபுராண கலாசாரம்' எனக் கூறுமளவிற்கு கந்தசஷ்டி விரதமும் பெருமை பெற்றுள்ளது. சிவமைந்தர்களான முருகனையும், விநாயகரையும் தியானம் செய்யும் நாள் 'ஷஷ்டி' எனப்படும். ஐப்பசியில் முருகனை வழிபடுவது கந்தசஷ்டி எனவும் மார்கழியில் விநாயகரை வழிபடுவது விநாயக சஷ்டி எனவும் கூறப்படும்.

நல்லூர்க் கந்தன், மாவைக் கந்தன், இணுவையூர்க் கந்தன் போன்ற ஆலயங்களில் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுவதுண்டு. அங்கு விரதிகள் ஒன்று கூடிக் காப்புக் கட்டி ஆறு நாட்களும் உபவாஸ நியமத்துடன் விரதமனுட்டித்து வருவதுண்டு. தினமும் காலையிற் தீர்த்தமாடி சங்கற்பித்து புனிதமாக இவ்விரதத்தை பேணுவர். ஆயினும் இல்லங்களிலிருந்தும் இவ்விரதத்தை மேற்கொள்வோர் தினமும் முருகாலயம் சென்று வழிபாடாற்றித் திரும்புவதுண்டு. பிரதான முருகாலயங்களில் எல்லாம் விசேடபூசை வழிபாடுகளுடன் இறுதியில் சூரசம்கார விழாவும், திருக்கல்யாண விழாவுடனும் கந்தசஷ்டி விரதம் முற்றுப் பெறுகின்றது.

மாவை ஆலயத்திலே ஆறு நாட்களும் முருகன் முறையே சிவத்த கடா வாகனத்திலும், கஜவாகனாரூடனாகவும், கேடக விமானத்திலும், எருது வாகனம், வெண்புரவி வாகனம் என்பவற்றிலும் இறுதி நாளன்று தேருடன் கூடிய மயில்வாகனத்திலும் வீதி உலா வருவது பிரதான அம்சமாக இடம்பெறும். ஆறு நாட்களும் ஆலயத்தில் கந்தபுராணம் படிக்கப்படுவதுமுண்டு.

'சொற்படு துலையின் திங்கள் சுக்கிரபட்சம் தன்னில்,
முற்பகலாதியாக மூவிருவைகல் நோற்றார்'

எனக் கந்தபுராணம் இவ்விரதத்தை விதந்து கூறுகின்றது. கந்தசஷ்டி விரதம் ஈழத்து இந்துக்களிடையில் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ள விரதங்களில் ஒன்றாக அன்று முதல் இன்றுவரை நிலவுகின்றது. யாழ் மாவட்டத்திலே கந்தசஷ்டி விரதத்திற்குள்ள மகிமை போல ஈழத்தின் முக்கியமான முருகாலயமாக விளங்கும் கதிர்காமத்தில் இவ்விரத விழா பெருமதிப்புடன் பேணப்படுவது அரிது எனலாம். ஈழத்து இந்துக்களின் புனிதமான யாத்திரைத் தலமாக வரலாற்றுப் புகழ் பெற்ற இந்தத்தலம் இந்துக்கள் குறைவாக வாழுகின்ற தென்னிலங்கையில் அமைந்திருப்பது இதற்கொரு காரணமாகலாம்.

சஷ்டி விரதங்களுள் விநாயகருக்குரிய விரதமானது கார்த்திகை மாதத்தில் இருபத்தியொரு நாட்கள் விநாயகரை நினைத்து அனுட்டிக்கப்படும். சிவராத்திரி, நவராத்திரி கந்தசஷ்டி விரதம் போலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவில் நடைபெறாவிடினும் ஈழத்திலுள்ள பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களிலெல்லாம் இவ்விரதம் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. இக்காலங்களில் பெரும்பாலும் வரத பண்டிதரது 'பிள்ளையார் கதை' என்ற நூல் ஆலயங்களில் விரத மகிமையை ஒட்டி வாசிக்கப்படும். ஆவணியில் வரும் சதுர்த்தி விரதமும் ஈழத்து இந்துக்களால் விநாயகருடைய வழிபாடாக நினைந்து பின்பற்றப்படும் ஒரு விரதமாக விளங்குகின்றது.

இவ்வாறு ஈழத் தமிழ் மக்களிடத்துப் பிரபல்யமடைந்துள்ள இன்னோர் விரதம் ஏகாதசி விரதமாகும். மாதம் தோறும் வரும் ஏகாதசி விரதத்தை விட மார்கழியில் வரும் ஏகாதசி விரதமே 'வைகுண்ட ஏகாதசி விரதமெனச்' சிறப்பிக்கப்படும். விஷ்ணுவுக்குரிய இந்த விரதமானது ஈழத்து இந்துக்களிடையில் ஏனைய திதி விரதங்களைப் போன்று அதிகம் பிரபல்யடையாதிருப்பினும் அதிகமான விஷ்ணு ஆலயங்களில் இவ்விரதத்திலன்று விசேட ஆராதனை அபிடேகங்கள் இடம் பெறுகின்றன.

'மாதங்களில் நான் மார்கழியாயிருக்கின்றேன்' என மகாவிஷ்ணு கூறியவாறு மார்கழி ஏகாதசியானது சிவன் இரவு போன்று மகாவிஷ்ணு இரவாக வைணவ அடியார்களால் மதிக்கப்படும் தன்மை வாய்ந்ததாகும். பொன்னாலை, வண்ணார்பண்ணை, வல்லிபுர ஆழ்வார் முதலிய விஷ்ணு ஆலயங்களில் ஏகாதசி விரதம் வருடம் தோறும் அனுட்டிக்கப்படுகின்றது. இந்த விரத காலங்களில் மேற்குறிப்பிட்ட ஆலயங்களில் ஏகாதசிப் புராணம் படிக்கப்படுவது வழக்கமாகும்.

'ஏகாதசி விரதமனுட்டித்தால் நூறு
அஸ்வமேத யாகம் செய்த பலனுண்டாகும்'

எனக் கூறப்படுவது விரத வழிபாட்டின் மூலம் ஒழுக்கத்தைப் பேணி இறைவனை வழிபட்டால் நினைத்த காரிய சித்தி உண்டாகும் என்ற நம்பிக்கையினை மக்களிடம் வளர்க்கும் பொருட்டே எனலாம்.

**பெண்களால் சிறப்பிக்கப்படும் விரதங்கள்**

இவை தவிரப் பெண்களுக்கெனச் சில விரதங்களும் ஈழத்து இந்துப் பெண்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றன. அவற்றுள் கேதார கௌரி விரதம், திருமலைப் பத்திரகாளி கோயில் சிறப்புப் பெற்றுள்ளதிலிருந்து திருகோணமலை வாழ் மக்களிடையே இவ்விரதத்திற்குள்ள பற்றுப் புலனாகும். யாழ் மாவட்டத்திலுள்ள ஒரு சில இடங்களில் கௌரி விரதமும், வரலக்சுமி விரதமும் பேணப்பட்டு வருகின்றன. குறிப்பாக அந்தணர் குலப் பெண்களிடையில் இவ்விரதங்கள் அதிக செல்வாக்கைப் பெற்றுள்ளன. 'பாவை நோன் பெனப்படும்' திருவெம்பாவை விரதமே ஈழத்து இந்துப் பெண்கள் அனைவரும் பின்பற்றும் பெருவிரத நெறியாகும். பெரியோர்களை விடச் சிறுவர்கட்கு இந்த விரத நெறியானது இறைபக்தியுடன் ஒழுங்கான பண்பினையும் ஆரோக்கியமான உள்ளத்தையும் வளர்க்க உதவுகின்றதெனக் கூறலாம்.

ஈழத்தின் பிரதான சிவாலயங்கள் அனைத்தும் இவ்விரதத்தைப் பேணி வந்த போதும் ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர்ச் சிவன் கோயில் திருவெம்பாவை விரத விழாவுக்குப் புகழ் பெற்ற ஆலயமாகும். காரைநகர் மணிவாசக சபையினர் இதில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள திருவெம்பாவை உற்சவத்தில் நடராஜர் இராதாரோகணமும், ஆருத்ரா அபிஷேகமும் தனித் தன்மையானவையாகும். இக்காலங்களில் திருவாசகம் முழுவதும் இங்கு ஓதப்படும். ஆனி, மார்கழி மாதங்களில் வரும் உத்தரம், திருவாதிரை முதலிய நட்சத்திரங்களில் சிதம்பரம் போன்று இங்கும் விரத நாட்களில் திருவிழா ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் ஆலயப் பாவை விரத விழாவும், வெள்ளவத்தை மாணிக்க விநாயகராலய பாவை நோன்பு விழாவும் கூட இலங்கை வானொலி ஒலிபரப்புமளவிற்குப் பிரசித்தமானவையாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலய மகோற்சவ விரத காலம்

இது மட்டுமன்றி ஈழத்திலுள்ள பிரதான இந்து ஆலய மகோற்சவ காலங்கள் யாவும் தற்போது விரத காலங்களாக மக்களால் பின்பற்றப்பட்டு வருவதும் ஈழத்திலே விரதக் கிரியைகட்குள்ள செல்வாக்கினைப் புலப்படுத்தும். நல்லூர் கந்தன் உற்சவம், மாவைக் கந்தன் உற்சவம், செல்வச் சந்நதி உற்சவம், கதிர்காம உற்சவம், துர்க்காதேவி உற்சவம், வல்லிபுராழ்வார் உற்சவக் காலங்கள் யாவும் இங்ஙனம் பின்பற்றப்படும் விரத காலங்களாக மாறியுள்ளன.

### விரத உணவு தயார் செய்தல்

இவ்வாறு மேற்கொள்ளப்படும் விரதக் கிரியைகளின் முக்கிய அம்சம் விரத உணவினைத் தயாரிப்பதிலும் அடங்கியிருக்கின்றது. ஆனால் விரதங்களைப் பின்பற்றும் எந்த இந்துவும் அதனை இன்று கடைப்பிடிப்பதாகக் கூறுவது கடினமேயாம். காலையில் நீராடி, தூய்மை செய்து, ஆலய தரிசனம் செய்து, சாதாரணமாக ஒரு பொழுதுணவை விடுத்து நியமப்படி உணவு தயாரித்து உண்பதுதான் விரதவிதியாகும். விரத உணவிலே இன்றியமைதாதது. ஹவிஸ் அல்லது அவியாகும். இது அக்கினியிற் சொரிதற்காக ஏற்பட்டதல்ல. தெய்வத்திற்கு நிவேதிக்கும் சமையல் எங்ஙனம் செய்ய வேண்டும் என்பதை அது குறிக்கும். அந்தச் சமையலுக்கு உதவுவதே அக்கினியாகும். இவ்வுணவு பொரித்தல், தாளிதமின்றிச் செய்யப்பட வேண்டும். அத்துடன் அதில் ஒரு பகுதியையே உண்ண வேண்டுமென்பதே விரத உணவின் நியமமாகப் பேசப்படுகின்றது. ஆனால் இன்று விரதத்திலன்றுதான் பொரியல், தாளிதத்துடன் விசேடமாகச் சமையல் நடைபெறுமளவிற்கு விரதக் கிரியைகள் செல்வ வளம் பொருந்தியவையாக மாறிவிட்டன.

விரத உணவின் நியமப்படி எல்லோராலும் உண்ணப்படும் சாதாரண உணவும், எளிமையும், சிக்கனமான இல்லறமுமே விரதங்கள் மனிதனுக்குப் போதிக்கும் இலகுவான உண்மைகளாகும். இன்று விரதங்களின் அடிப்படை நோக்கும் அதன் புனிதத் தன்மையும் இன்றிக் குன்றிவிட்டதையே வழக்கிலே பின்பற்றப்படும் விரத நெறிகள் புலப்படுத்தப்படுகின்றன எனலாம். மேலும் விரத காலங்களில் போக பாக்கியங்களைத் தவிர்த்தது, புலன்களையடக்கி உபவாசமிருந்தும், உறக்கம் நீத்தும் பின்பற்றுமிடத்து தானம், தயை, ஆசாரம், ஒழுக்கம் என்பனவே விரத நெறி அறிவுறுத்தும் பிரதான பண்புகளாயிருந்தன. உபவாசம் நிறைவெய்தியதும் மறுநாட்காலை சாதுக்கட்கு அன்னமிட்டு பாறணை செய்யும் மரபே விரதநெறியில் பெருவழக்காகக் காணப்பட்டது. இன்றோ அந்த வழக்கமும் மறைந்து விட்டதுடன் விரதங்கள் விழாக்களாகவும், ஆடம்பரமாகவும், அமைதிக்குப் பதில் ஆரவாரத்துடனும் நடைபெறும் ஒரு சடங்காக நடைமுறையில் காணப்படுகின்றன.

### நிறைவுரை

இவ்வாறு விரதக் கிரியைகளின் இலட்சியம் இன்று முற்றிலும் மாறுபட்டதுடன் வசதிக்கேற்ற விரதமாக அவை மாற்றப்படுவதற்குச் சில சமூகச் சூழலும் ஒரு காரணமென்பதைை மறுக்க முடியாது. தற்கால சமூகச் அமைப்பில் ஆண், பெண், இருபாலரும் வேலைக்குச் செல்வதும், ஓய்வின்மையும், அதிக வேலைப் பளுவும் விரதக் கிரியைகளில் மாற்றம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணயாக விளங்குகின்றன எனலாம். புறத்தூய்மை, அகத்தூய்மை, இரண்டுக்கும் வழிவகுப்பதே விரதக் கிரியைகளாகும். விரதங்களை அளவுக்கு அதிகமாகக் கடைப்பிடிப்பவர்கட்கு ஏற்படுவதாக விஞ்ஞான உலகம் சில குற்றச் சாட்டுக்களை கூறினும் அது முற்றிலும் உண்மையாகாது. ஏனெனில் சில மனிதர்கள் விரதம் என்ற பெயரில் உபவாசமாகவிருந்து உடலைப் பட்டினி போட்டு கால, நேரம் கடைப்பிடியாது விரத ஒழுங்குக் கட்டுப்பாடு குலைவதனால் வயிற்றிலே புண் ஏற்படும் வாய்ப்புகள் உண்டாகின்றன. உபவாஸ தினங்களில் மனோசக்தி, ஆத்மசக்தி அதிகரிப்பதனால் உடலில் வெப்பநிலை அதிகரித்துக் குடலில் அஜீரணக் கோளாறு ஏற்பட ஏதுவாகிறது. அக்காலங்களில் விரத நியதியின் படி மனம், வாக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமாகிய உடலையும், குளிர்ந்தவாறு வைத்து இருந்து கோப, தாப, மோகமிவற்றைக் கைவிட்டு பழரசம், இளநீர், பால் அருந்தி வந்தால் உடல் வெப்பநிலை சமப்படும் உபவாஸ நியமங்களைக் கைவிட்டு விரத நியதிகளைக் குற்றம் சொல்வது ஏற்புடையதாகாது.

இவ்வாறு விரத அனுட்டானங்களைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள் நேர்மை, வாய்மை, செயல்தூய்மை, கொல்லாமை, கள்ளாமை, கடமையுணர்வு, தார்மீக நெறி இவற்றின் வழிநின்று முறைப்படி வாழ்க்கை நடத்துவதன் மூலம் மிகப் பெரிய இல்லற நோன்பை அனுட்டித்த பயனை அடைய முடியும். இது விரதங்களை அனுட்டித்த பயனை விட அதிகளவு ஆத்ம பலன்களைத் தர வல்லதாகும். இவையே விரதக் கிரியைகளது அடிப்படைத் தாற்பரியம் எனவும் கூறலாம்.

ஒருவன் தனது எண்ணத்தை நினைத்தபடி நிறைவேற்றற் பொருட்டு கடவுளைக் கொண்டு அதனை அடைவிக்கும் ஒரு வகை முயற்சியே விரதக் கிரியையாகக் கூறப்படுகிறது எனலாம். எனவே இஷ்ட காரிய சித்தியே விரதக் கிரியைகளின் பொதுப் பயன்பாடென்பது சொல்லாமற் பெறப்படும். மேலும் விரதங்களைப் பின்பற்றுவதன் மூலம் பட்டினி இருந்து நமது பூர்வ பாவங்கட்காக நம்மை நாமே மறைமுகமாக தண்டிக்கும் ஒரு ஆத்ம தண்டனையாகவும் விரதங்களைக் கருத இடமுண்டு. ஆயினும் இன்று விரதத்தின் மூலம் பாவவிமோசனம் தேடுவோர் வெகு குறைவேயாகும்.

சமூகத்தில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தும் சாத்வீக சாதனங்களுள் ஒன்றாகத்தான் விரதநெறிகள் இந்து சமயத்திலே இடம் பெற்றுள்ளன. ஒவ்வொருவரும் தத்தம் நெறிகளில் நிற்கப் பழகுவதால் சமூகத்தில் சிறந்த குடும்பத் திட்டம், பண்பாடு, உடல் ஆரோக்கியம், தூய்மை, கொடை, அழகு, சுகாதாரம், எளிமை, அடக்கம் முதலாம் சிறந்த பண்புகள் உருவாகவே விரத நெறிகள் வழிகாட்ட விரும்புகின்றன என்று கூறலாம். ஆகையால் வெறுமே உபவாஸமிருந்து கொண்டு சகல விதமான அழுக்காறுகளுடனும் விரதம் பூணுவதை விட எளிய பண்புகளை வளர்த்துச் 'சத்திய விரதம்' பூண்டொழுகுவதே உண்மையான விரதநெறியாக இந்து மதம் வகுத்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடு, நியதிகளை உள்ளடக்கியனவாக உள்ள விரதக் கிரியைகள் ஈழநாட்டு இந்துக்களிடையிலும் பண்டு முதல் வழக்கிலேயிருந்து வந்துள்ளமை இவ்வாறு புலனாகிறது.

## அடிக்குறிப்புகள்

1. இருக்கு வேதம் IV.54.3
   VII.23.9
   VII.94
   X.133.6
2. A. கைலாசநாதக் குருக்கள், கா. வடமொழி இலக்கிய வரலாறு, முதற்பாகம், முதற்பதிப்பு, கொழும்பு 1962. பக். 55
   B. ஸ்வாமி, பரமேஸ்வரானந்தா: ஹிந்து தர்ம பரிச்சயம், ஸ்ரீ கிருஷ்ண மந்திர், கன்னியாகுமரி, 1983, பக். 386
3. ஆறுமுக நாவலர், சைவவினாவிடை, இரண்டாம் பாகம், பத்தொன்பதாம் பதிப்பு, சென்னை, 1967, பக். 96.
4. சதபதப் பிராமணம், 1.7 - 8
5. கைலாசநாதக் குருக்கள், கா., மு. கு. நூ., பக். 47.
6. கந்தையா. மு., சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், மானிப்பாய், இந்து சமயாபிவிருத்திச் சங்கம், முதற் பதிப்பு, 1978, பக். 48.
7. இரகுநாதையர், ஈ.சி., வாக்கியஞ்சாங்கம், கொக்குவில், யாழ்ப்பாணம், பக். 45 - 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சுப்பிரமணியம், த., சைவசமய புண்ணிய காலம், இரண்டாம்பதிப்பு, யாழ்ப்பாணம், 1969, 'பொருளடக்கம்' என்ற பகுதி பார்க்கவும்.

9. சுப்பிரமணியம், த., மே. கு. நூ., பக். 60

10. கந்தபுராணம், கந்தவிரதப் படலம், பா. எ. 3

11. A. சண்முகசுந்தர முதலியார் (பதிப்பு), காரணாகமம், சிவஞானபோத யந்திரசாலை, சென்னை, 1900.!; 109
B. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி. 10, 1988, பக். 880.

12. இராமானுஜாச்சாரியார், (தமிழ்மொழி பெயர்ப்பு), மனு தர்ம சாஸ்திரம், பாரதி அச்சுக்கூடம், சென்னை, 1929, 206 ; 209 ; 214;

13. காரணாகமம், 1˙ 107.

14. பி. ஹி., விழா விரதம் பண்டிகை, முதற் பதிப்பு, சென்னை, 1960, பக். 10 -12.

15. சுப்பிரமணியம், த., மு. கு. நூ., பக், 37.

16. A. காரணாகமம், 1 ; 106
B. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 9, 1988, பக். 66. ஹிந்து தர்ம பரிச்சயம், பக். 387.

17. கைலாசபிள்ளை, த., ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, மூன்றாம் பதிப்பு, சென்னை. 1954, பக். 37; 60

18. பாலசுந்தரக் குருக்கள், கு., ஈழநாட்டுச் சைவக் கிரியைகளும், சடங்குகளும், திருக்கேதீஸ்வரம் திருக்குடமஞ்சன மலர், திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு, 1976, பக். 141.

19. சதபத பிராமணம், 1; 1. 7 - 8

20. மே.கு. நூ., 1; 4. 1 - 2

21. வரத கவிராசர், சிவராத்திரி புராணம், மூன்றாம் பதிப்பு, ஸ்ரீ கதந்தா அச்சகம், யாழ்ப்பாணம், 1970, சிவராத்திரி உற்சவச் சருக்கம், 20.

22. காரணாகமம், 1. 117.

சீரும் திருவும் நிறைந்த உடுப்பிட்டிக் கிராமத்தில் அருள்பாலிக்கும் விஸ்வகுல விநாயகப் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருப்பது அறிந்து ஆனந்தமடைகின்றேன். இமையாணன் பதியில் இடர்தீர்க்கும் ஞானமுதல்வனின் அருட்கோவிலை முன்னோர் வழியில் காத்துவரும் அடியவர்கள் பாராட்டுக்குரியவராவர்கள். தெய்வத்திருத்தலங்கள் புனிதம் பெற அடியார்கள் அயராது உழைக்க வேண்டும். எம் வாழ்வின் விடிவுக்கு இறை வழிபாடே அத்தியாவசியம் என்பதை சமூகம் உணரும் வகையில் ஆலய அறங்காவலர்கள் ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து, நெறிப்படுத்த வேண்டும். கல்வி, கலை வரலாறு கொண்ட உடுப்பிட்டி கிராமத்தின் எழிச்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இவ்வாலய கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற துர்க்கை அம்பாளை இறைஞ்சி அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"Sivagama Sithantha Gnana Thesiga Banu"
"Predhisdalankara Siddhanda Sagaram"
"Predhasda Sironmani"

*Sivasri*
***S.Thandabanikathesigar, J.P***
Chief Priest
Sri Muthumari Amman Temple
Valvettithuri, Sri Lanka.
T. Phone : 0602 212267, 021-2263185



"சிவகாம சித்தாந்த ஞான தேசிக பானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோன்மணி"
சிவஸ்ரீ
சோ. தண்டபாணிக தேசிகர்
சமாதான நீதிவான்
பிரதமகுரு
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
வல்வெட்டித்துறை

........................ 200........

பிரதிஷ்டா பிரதமகுரு,
"சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு" "பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்" "பிரதிஷ்டா சிரோன்மணி" சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், J.P. அவர்களின்

# ஆசிச்செய்தி

"உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஸ்வகுல திருவருள்மிகு வீரகத்தி "விநாயகர் பெருமை" எனும்

மலர் சிறக்க அடியேனின் ஆசிகள் பலகோடி

நான்கு பக்கங்களும் இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ள இலங்காபுரியின் ஈழவள நாட்டில் வடபால் பெருங்குடிமக்கள் வாழுமிடம் யாழ்ப்பாணம். இவ்யாழ் நகர் தன்னில் வடமராட்சியில் உடுப்பிட்டியில் இமையாணன் மேற்கு விஸ்வகுல திருவருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் இவ்வூர் மக்களின் அருந்தெய்வமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகம் 06-06-2008 இல் நடைபெற்று மண்டலாபிஷேக பூர்த்தி விழா 20-07-2008 அன்று நடைபெறுவதும் அதனையிட்டு "விநாயகர் பெருமை" என்னும் நூல் வெளியிடப்படுவதும் பெரும் புண்ணிய நிகழ்ச்சியாகும்.

44வருடமாக யாழ் மாவட்டத்தில் பெரும் பிரதமகுருவாக இருந்து வடமராட்சியில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் தனில் மகாகும்பாபிஷேகம், பிரம்மோற்சவம், மற்றும் சங்காபிஷேகங்கள் பல நடாத்தி அது மட்டுமன்றி யாழ் மாவட்டத்தில் பல ஆலயங்கள் உட்பட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, போன்ற வட மாகாணத்தின் பல ஆலயங்களிலும் மேற்படி விழாக்களை அடியேன் தனித்து நின்று நடாத்தி வைத்ததுடன் எமது சமயத்திற்கும், மக்களுக்கும் அரும்பணியாற்ற இறைவன் என்னைக் கருவியாக பயன்படுத்தி இருக்கின்றான். என்றால் அடியேனது தனிப்பட்ட செயலல்ல அடியேனுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள அதாவது அடியேன் செய்த சிவத்தொண்டின் பேறாகும்.

மனிதன் வாழ்கின்றான், மற்றைய உயிர்களும் வாழ்கின்றன ஆனால் மனிதன் மன உணர்வோடு வாழ்கின்றான் மற்றைய உயிர்களிற்கு இந்த உணர்வில்லை. மனிதனிற்கு இந்த உணர்வு இருந்தாலும் இலட்சியத்தோடு இந்த வாழ்க்கை அமையுமாயின் அங்கே அமைதியும் ஆனந்தமும் பொங்கும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனென தொழுமே"

என்பதால் இதனை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நன்குணர்ந்து உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஸ்வகுல அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வாழ் சைவமக்கள் விநாயகப் பெருமான் திருக்கோவிலை மீளவடிவமைத்து செப்பனிட்டு திருப்பணி செய்து மகாகும்பாபிஷேக விழாவை நடாத்தி மண்டலாபிஷேக பூர்த்தி விழாவை எடுக்கின்றார்கள். என்றால் விநாயகப் பெருமானிற்கு இம்மக்கள் செய்த அரும்பணியின் பேறாகும்.

எம்பெருமானது கும்பாபிஷேக விழாவும் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது என நாம் மனப்பூர்வமாக நம்புகின்றோம். இதில் எமது பணி ஒன்றுமில்லை. அவன் செய்விக்கின்றான், நாங்கள் செய்கின்றோம் எனவே இதை நிறைவேற்றி வைத்ததற்குரிய பாராட்டுக்கள் அனைத்தும் அவனுக்கே உரியதாகும்.

இவ்வாலயமானது செய்யப்பட்டது மிகக்குறுகிய காலத்தில் கட்டட வேலைகள் நடைபெற்று மீள்நிர்மாணிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் நடைபெறுகிறது. என்றால் அது இவ்வாலயத்தின் திருப்பணிச் சபையினரின் சிறந்த செயற்பாடும் அர்ப்பணிப்புமேயாகும். இவ்வாலயம் மென்மேலும் சிறப்படைய இவ்வூர்மக்களது பெரும் பங்கு அவசியம் என்பதுடன் எனது நல்லாசிகளையும் வழங்கி இவ்வாலயம் சிறப்பித்து விளங்க பங்களிப்புச் செய்ய வீரகத்தி விநாயகரை மனத்திருத்தி நிறைவு செய்கின்றேன்.

"அழிப்பும் அவன் செயல் ஆக்கமும் அவன் செயல்"

**"சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு" "பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாபரம்" "பிரதிஷ்டா சிரோண்மணி" சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், J.P.**
**(பிரதமகுரு, அருள்மிகு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்)**

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராட் விஸ்வப் பிரம்மனே நம

அகில இலங்கை விஸ்வகர் மகுல சங்கத்தின் முன்னைநாள் செயலாளரும், சமூகசேவையாளரும், சமாதான நீதவானும், நீர்வை அன்பனுமாகிய திரு. தா. பரராசசிங்கம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

த. பரராசசிங்கம், நீர்வேலி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருகும் உருவாக்கும் - ஆதலால்
வானோரும் ஆனைமுகத்தானைக் காதலால்
கூப்புவர் தம் கை

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஸ்வகுல விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதும் பேறு கிடைத்தமையையிட்டு பெரிதும் மகிழ்ச்சிடைகின்றேன்.

உடுப்பிட்டிக் கிராமத்திலே வாழும் விஸ்வகர் மகுல மக்களால் நீண்டகாலமாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற பழம் பெருமை மிக்க 'விஸ்வகுல விநாயகர் ஆலயம்' அண்மையிலே புனருத்தாரணம் செய்யப்பட்டு பெருஞ் சாந்தி என்கின்ற மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியமை பெருமைக்குரியதே.

இப்படியாக ஆலய கும்பாபிஷேகங்கள் நடைபெறுவது ஆலய சூழலுக்கு மட்டுமன்றி அக்கிராமத்துக்கே சிறப்பான ஒரு நிகழ்வாகும். கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசிக்கின்ற பேறுபெற்றவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்று கூறினால் மிகையாகாது.

இற்றைக்குப் பலநூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. அதன் கட்டடங்கள் சுண்ணாம்பும், கண்ட கல்லும் கொண்டு கட்டப்பட்டு, கட்டடங்கள் காலாவதியானதால் மிகவும் பழுதடைந்திருந்தமையை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத்தால் எனக்கு வழங்கப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் முதன்முதலாக இந்த விஸ்வகுல விநாயகரைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். காலம் உருண்டோடின மீண்டும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கோயில் மூர்த்தங்கள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்தபோது அன்று இவ்வாலய மண்டபத்தில் நடைபெற்ற அன்னதான நிகழ்விலும் கலந்து கொண்டேன். அன்றைய தினம் இந்த ஆலயத்துக்கு அமைந்த 'விஸ்வகுல விநாயகர்' என்பதற்குரிய விளக்கத்தை அறிந்து, குலப்பெருமை சார்ந்த பெயர் சூடியமையையும், இவ்வூர் மக்களது விருந்தோம்பல் பண்பையும் நன்கு புரிந்து கொண்டேன். இவ்வூர் மக்கள் இந்த விநாயகர் மீது கொண்ட பத்தியையும், பற்றுதலையும் நன்கு அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கடந்த 13-04-2008இல் இவ்வாலய வளவினுள் என்னைப் பிரவேசிக்க வைத்தது. அந்த விஸ்வகர்ம குலசங்கம் அங்கு நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது. அழகுக்கோலம் கொண்ட புதிய அமைப்புகளுடன் கூடிய சிற்பக்கலை ததும்பும் ஆலய கட்டடங்கள், விமானங்கள் பரிவுரை மூர்த்தியாகிய முருகனின் தனி ஆலய அமைப்பு மீது மினுப்பான தரைத்தோற்றம் இவையெல்லாம் அந்த விநாயகப் பெருமானின் பேரருளையும், அடியவர்களின் கடவுள் நம்பிக்கையையும் அப்பகுதி அடியார்கள் ஒத்துழைப்பின் வலிமையையும் எடுத்தியம்புவனவாக அமைந்தன.

'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்பதைப்பிரதி பலித்தன. அடியவர்களின் பக்தியின் வலிமையையும், விநாயகர் மீது கொண்ட பற்றுதலையும், முயற்சியின் உயர்ச்சியினையும் பாராட்ட இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

திருப்பணி வேலைகள் இனிது நிறைவேறி மகாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் அனைத்தும் சிறப்புற நடைபெறவும், சிறப்பு மலர் வெளியிடவும் உழைத்த அனைவருக்கும் விநாயகரின் பேரருள் என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

வாழ்த்து

சீரோங்கு உடுப்பிட்டி விஸ்வகுல மக்கள் வாழ்க!
பேரோங்கு விநாயகர் ஆலயம் புதுக்கியோர் வாழ்க!
பாரோங்கப் பணிபுரியும் நற்தொண்டர் வாழ்க!
திறனொடு திருப்பணிகள் செய்திட்ட சபையோர் வாழ்க!
பண்பினொடு பரிபாலனஞ் செய் சபையோர் வாழ்க!
நித்தியம் தவறாப் பூசைகள் செய் அந்தணர் வாழ்க!
பக்தியொடு விநாயகர் பதம் போற்றும் அடியவர்கள் வாழ்க!
சிறப்புமலர் வெளியீட்டுக் குழுவும் வாழ்க!
நீதிநெறி நிலைத்து இந்து தர்மம் நிலைத்து வாழ்க!

வாழ்த்தும்

த. பரராசசிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியத் தமிழகத்தின் திருச்சியைச் சேர்ந்த ஸ்தபதியும் ஓவியருமாகிய**
**விஸ்வப் பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தன் ஆச்சாரியார் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

**உண்மையுள்ள தி. வ. சோமஸ்கந்தன் ஸ்தபதியும் ஓவியரும்.**

யாழ்ப்பாணத் திருநாட்டில் சிறந்து விளங்கும் ஆலயங்களில் ஒன்றாகிய இமையாணன் மேற்கு, விஸ்வகுல விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேக நிகழ்வை ஒட்டி வெளிவருகின்ற பண்பாட்டுச் செறிவுமிக்க சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் யான் மிகுந்த மன மகிழ்வு கொள்ளுகின்றேன். இவ்வாலயத்தில் முருகமூர்த்தி சந்நிதி கட்டிய பெரும் பேறு எமக்கு கிடைத்தமையை இட்டு பெருமையடைகின்றேன்.

எல்லாம் வல்ல விஸ்வகுல விநாயகர் திருவருள் பெருமை பேசும் இச் சிறப்பு மலர் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

உண்மையுள்ள
தி. வ. சோமஸ்கந்தன் ஸ்தபதியும் ஓவியரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுப்பிட்டி இளையாணன் மேற்கு விஸ்வ குல விநாயகப் பெருமானின் புனராவர்த்தன பஞ்ச குண்ட**

**பெருஞ்சாந்தி குடமுழுக்கு பெரு விழா சிறப்புப் மலருக்கான**

# ஆசியுரை


**சிவஶ்ரீ க. ஜெயக்குமார் குருக்கள்**

**விஸ்வ குல விநாயகப் பெருமானின் விஸ்வ குல பத்திரகாளி அம்பாளின் பிரதமகுரு**


துவிநேத்ரம் துவி புஜாம்சீயாமாம் பூணர்சந்நிதவதனாம்
சர்வசேஷண சம்யுக்தாம் வல்ல பாஞ்ச கரோத்பலம்
சித்ராவஸ்தாரதராம் திவ்வியாம்
சர்வாத பரண பூஷிதாம்

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு பதியிலே பன்னெடுகாலமாக வீற்றிருந்து அருட்சக்தியாகவும் கருணை நிறைந்த விநாயகப் பெருமானிற்கு புனராவர்த்தன பஞ்சகுண்ட பெருஞ்சாந்தி பெருவிழா

இறைவனின் கருணையுடன் முப்பத்து முக்கோடி தேவர்களின் அருட்பிரவாகத்துடன் வேதாகமகியா தந்திராசாரத்துடனும் திருமுறை நாதஸ்வர தவில் சங்கு வாத்திய மங்களத்துடனும் விநாயகப் பெருமானின் குடமுழுக்கு பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் வாக்கு ஆகும். அதற்கு இணங்க உடுப்பிட்டி பதியிலே விஸ்வகுல விநாயகர் ஆலயம் சிறப்பான முறையிலே அமைந்துள்ளது.

இறைவனின் அருவுருவத்தை உருவமாகும் முறையை ஆகமங்கள் விபரித்து சொல்கின்றன எனது மனதில் எழுந்த ஆசை இப்பிள்ளையாருக்கு திருப்பணி வேலையை தொடங்கி மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்று நினைத்தேன் அதே போல எம்பெருமானிற்கு வலு விசேடமாக கும்பாபிஷேகம் நடைபெற்றது விநாயகப் பெருமானின் அருள் உலகம் எங்கும் பரவி சாந்தியும் சமாதானமும் நிறைவுபெற பிரார்த்திப்போமாக. கும்பாவிசேக தரிசனம் கோடி புண்ணியம்

சர்வே ஜனகா சுகிணோ பவந்து
மேன்மைகொள் சைவநீதி விளங்கும் உலகமெலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

**சிவஸ்ரீ தி. சுப்பிரமண்யக் குருக்கள்**

**பிரதம குரு,**

**கம்பூதூா காட்டுக் கந்தன் தேவஸ்தானம்**

விநாயகப் பெருமானின் பெரும் சாந்தி விழா வேழமுகத்து விநாயகனின் கும்பாபிஷேகம் இனிதே விநாயகன் அருளால் நிறைவுற்று மண்டலாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் வேளையிலே விநாயகனின் திருவருள் பக்த கோடிகள் எல்லோர்க்கும் கிடைக்க எங்கள் அருள் ஆசிகள்.

பெருமானின் இந்நிகழ்வு பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும். எமது முன்னோர் செய்த பாக்கியமாகும். அவன் அருளாலேயே அவன் தான் வணங்கி என்ற சொற்பதத்தின்படி விநாயகனின் அருளாலேயே நடைபெற்ற இந்த மகாகும்பாபிஷேக நிகழ்விலேயே, எம்மால் ஆவது ஏதும் இல்லை. கலைகள் அனைத்தும் ஊட்டப்பட்டு திருவருள் சக்தியை ஜபித்து வேதமோதி கா்மங்களை செய்ததினால் பெருமாள் திருவருள் மயமாகி எமக்கு திருவருள் கடாட்சம் பெற வாய்ப்புக் கிடைப்பதே கும்பாபிஷேகம் ஆகும்.

சிறப்பு நன்மை பொருந்திய இந்த சாந்தி விழாவிலே உடுப்பிட்டி விஸ்வகுல வீரகத்தி விநாயக பெருமான் விஸ்வகுல மக்களும் அவர்களை சார்ந்தவர்கள். ஏனைய பக்திமான்கள், பழமை வாய்ந்ததும் புனிதம் நிறைந்ததும் புகழ் பெற்றதுமான இவ் ஆலயத்தின் பெருமான் விநாயகனின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ நல்லாசிகள் உரித்தாகுக்.

அவன் தாழ் பணி,

**சிவஸ்ரீ தி. சுப்பிரமணிக் குருக்கள்**



வடமராட்சியை வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர்

உயர்திரு சி. புஸ்பலிங்கம் B.Com. Dip.in Edu, M.Ed, S.L.E.A.S. III.

அவர்களின்

# வாழ்த்துரை

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு, விஸ்வகுல விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு வெளிவரும் 'விஸ்வகுல விநாயகர் பெருமை' என்னும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் யான் அகமகிழ்வு கொள்கிறேன். விக்கினங்கள் தீர்ப்பதில் முன் நின்று உதவுபவர். விநாயகர் என்பது எமது இந்துசமய மரபு. அம்மரபுக்கு ஏற்ப விநாயகரையே தமது முதல் தெய்வமாக முன்னிறுத்தி ஆலயம் அமைத்து, அதன் புனருத்தாரணப் பணியைச் சீரும் சிறப்புமாக ஆற்றி மகா கும்பாபிஷேக நிகழ்வை நடாத்திவரும் - உடுப்பிட்டி வாழ் விஸ்வ சமூக மக்கள் எல்லோரதும் பாராட்டுக்கு உரியவர்களாகின்றனர்.

மகா கும்பாபிஷேக நிறைவு நாளில் வெளிவரும் இச்சிறப்புமலர், இந்துப் பண்பாட்டின் பலதரப்பட்ட கூறுகளையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றத. மகா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், விநாயக விரதங்கள், விநாயக வழிபாடு, பஞ்சமுக விநாயகர், இந்து மரபு பேணும் சிற்பி, ஈழத்தில் பிராமண குலங்கள், விரத அனுட்டானங்கள், கிரியைகள் முதலாம் துறைகளுடன் ஆலய வரலாற்றுச் செய்திகளையும் தாங்கி வருவது பலதரப்பட்ட வாசகர், அறிஞர்களுக்கும் பயனுடைத்தாகும் என்பது எமது அபிப்பிராயமாகும்.

திருப்பணியை நிறைவு செய்த ஆலயத் திருப்பணிச் சபையினரே மலர் வெளியீட்டையும், செய்வது போற்றுதற்குரியதாகும். 'விநாயகப் பெருமை' பேசும் இச்சிறப்புமலர் மலர்ந்து கல்வி, சமயம், உலகெல்லாம் அறிவொளி பரப்பி நிற்க விநாயகரை வேண்டி இவ்வாழ்த்துரையை வழங்குகின்றேன்.



சி. புஸ்பலிங்கம

யாழ்ப்பாணம்.

யா - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அதிபர்

திரு. க. தர்மலிங்கம் B. Sc, Dip. in. Edu, அவர்களின்

# வாழ்த்துரை

ஆலயங்கள் இந்துக்களின் பண்பாட்டுச் சின்னங்களாகத் திகழ்கின்றன. மனிதாத்மாக்களை மகாத்மாக்களாக்கும் சமூக இசைவாக்கத்திற்குப் பின்புலமாக நின்று வலுவூட்டுகின்றன. மன ஒருமைப்பாட்டினையும் வாழ்வியல் தரிசனத்தையும் ஆன்ம ஈடேற்றத்தினையும் வழங்கும் களமாக மலர்ந்துள்ளன. இந்துக்களின் இறையியல் தத்துவத்தின் பிரகாரம் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகன் முதன்மை நிலையில் வைத்து வழிபட வேண்டியவராவார். எளிய உருவிலும் எழுந்தருளும் சிறப்புமிகு தெய்வமாக மிளிர்கிறார். ஆத்மா, எதிர்பாராத பலன்களையும் நல்கும் பரப்பிரம்மமாக ஐங்கரன் காட்சிதருகின்றார். அத்தகைய சக்தி வாய்ந்த பரம்பொருளான விஸ்வகுல விநாயகர், வரமருளிக் கொண்டிருப்பது பக்தர்களாகிய நாம் புரிந்த நல்வினைப் பயனின் விளைவுகளேயன்றி வேறென்ன? !

எம் கல்லூரி மாணவர்களுக்கு அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது. திருக்கோயில்களின் வரலாறுகள் முழுமையும் அறியுமாறு அமைந்திருப்பதில்லை என்னும் நியதிக்கேற்ப இத்தலத்தின் சரித்திரமும் கால இருட்டினுள் கலந்துள்ளது. அக்கால இருட்டினுள் இருந்து அறிவுலகிற்குத் தெளிவாக விளக்கவல்ல தகவல்களையும் தாங்கியதாக வெளிவரவுள்ள 'விஸ்வகுல விநாயகர் பெருமை' என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குமாறு என்னை ஆட்கொண்டருளிய விநாயகப் பெருமானை மனதிலிருத்தி வழிபடுகின்றேன்.

தேசம் அமைதி பெறவும் மக்கள் நிம்மதி அடையவும் மாணவர்கள் கல்வியில் உயர்நிலை பெறவும் கணநாதனைக் கரம் கூப்பி வேண்டி இவ்வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்து நிற்கின்றேன்.

க. தர்மலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையாணன் மேற்கு கிராம உத்தியோகத்தரின்

# வாழ்த்து செய்தி

**(நாகரத்தினம் மகாநேசன் கிராம உத்தியோகத்தர் இமையாணன் மேற்கு J / 359)**

அன்புள்ளவர்களுக்கு,

நம் வாழ்க்கையில் துன்பதுயரங்களை நீக்குவதற்கு கடவுள் அருள் இன்றியமையாததாகும். ஓர் கிராமத்தின் சிறப்ப அவ்வூர் மக்களின் சிறப்பான வாழ்க்கையிலேயே தங்கியுள்ளது. கிராம மக்களின் வாழ்க்கை பொலிவு பெறக் காரணம் அவ்வூரில் அமைந்துள்ள கோயில்களே ஆகும். அவ்வகையில் பழைமையும், பெருமையும், புதுமையும் நிறைந்த விஸ்வகுல வீரகத்தி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது. இவ் ஆலயத்தில் கடந்த பல வருடங்களாக நடைபெறாமல் இருந்து தற்போது அபிஷேகமாகிய கும்பாபிஷேகம் நடைபெற்றது ஆலயத்திற்கும், பொது மக்களுக்கும் புனிதத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

துன்ப துயரங்களை நீக்கும் விநாயகப் பெருமானுடைய வழிபாடு இந்து சமயத்தில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. அவ்வகையில் இவ்வாலயத்தில் விநாயகராக எழுந்தருளி அனைவருக்கும் துன்பதுயரங்களை நீக்குவராக விளங்குகின்றார்.

இவ்வூர் விஸ்வகுல மக்களுக்கும், அயலூர் மக்களுக்கும் அருள் நிறைந்த இடமாக மிளரச் செய்துள்ளமை போற்றத்தக்கதுமாகும். அத்துடன் திருப்பணிகள் யாவும் நிறைவுற்றது. விஸ்வகுல மக்கள் விநாயகப் பெருமானின் மீது கொண்ட பக்தியினாலும், மன எழுச்சியினாலும் ஆகும்.

அவ்வகையில் இவ்வூர் மக்களுக்கு இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி விஸ்வகுலப் பகுதியில் எழுந்தருளி அருள்புரியும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு முடிவுறுவதை பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எம்மக்களின் அமைதியும், நாட்டில் சமாதானமும், நிறைவான வாழ்வும் சகல செல்வங்களும் கிடைக்கப்பெற விஸ்வகுல வீரகத்தி விநாயகர் அருள் புரிவராக என்று கூறி எமது இமையாணன் மேற்கு கிராம மக்கள் சார்பாக எமது ஆசீர்வாதத்தை தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**யாழ்ப்பாண மாவட்டக் கணக்காய்வு அத்தியட்சகர்**

**உயர்திரு சி. சண்முகம்,**

**சமாதான நீதவான் அவர்களின்**

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு பகுதியின் எழுந்தருளி இருந்து இன்று மஹா கும்பாபிஷேகம் காணும் விஸ்வகுல வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு ஆலய திருப்பணிச் சபையினர், வெளியீடு செய்து நிற்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் யான் பெரிதும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

விக்கினங்கள் தீர்ப்பதில் முன்னின்று உதவுபவன் ஆதலால் விக்கினேஸ்வரன் என்று பெயர் பெற்ற விநாயகர் தனக்கு மேல் நாயகன் இல்லாமையால் 'விநாயகர்' எனப் போற்றப்படும் பெருமையுடையவர் அத்தகு பெருந் தெய்வமாகிய விநாயகப் பெருமான் இமையாணன் மேற்குப் பகுதியில் விஸ்வகுல விநாயகராக எழுந்தருளி நின்று அருள்பாலித்து நிற்பது, எம்எல்லோருக்கும் கிடைத்திருக்கும் அரும் பெரும் பேறே என்பதில் ஐயமில்லை.

விஸ்வகுல விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேக பூர்த்தி நிகழ்வு சிறப்புறவும் அதையொட்டி விஸ்வகுல விநாய்கர் பெருமை என்னும் சிறப்பு மலர் வெளியீடு சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளைப் பிரார்த்தித்து நிற்பதுடன் அவரது அருளாசி கும்பாபிஷேக நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தி வரும் ஆர்வலார்கள் ஏனையோர் அனைவருக்கும் கிடைப்பதாகுக என்று வேண்டி வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**சி. சண்முகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி இமையாணன் பதி, விஸ்வகுல வீரகத்தி விநாயகர் தேவஸ்தான

பரிபாலன சபையினரின்

# பிரார்த்தனை உரை

உடுப்பிட்டி, இமையாணன் பதி, விஸ்வகுல வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவின் நிறைநன்னாளில் வெளிவரும் 'விஸ்வகுல விநாயகர் பெருமை' என்னும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரிதும் மனமுவக்கின்றோம். சிதிலமடைந்திருந்த ஆலயத்தைப் புனருத்தானம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட 'விஸ்வகுல விநாயகராலயத் திருப்பணிச் சபையானது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைமைகளை எல்லாம் தளராது, அர்ப்பணிப்புடனும், துடிப்புடனும் செயற்பட்டு திருப்பணியை நிறைவு செய்து மஹாகும்பாபிஷேகம் கண்டிருப்பது எம்மெல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

உண்மையிலேயே இவ்வரும் பெரும் செயல் 'விஸ்வகுல வீரகத்தி விநாயகப் பெருமான், எங்கள் திருப்பணிச் சபையின் வாயிலாகத் தனக்குத்தானே செய்வித்துக் கொண்ட செயல் அல்லால் வேறென்ன? என்றே அடியேம் யாம் எண்ணுகின்றோம்.

இலங்கையில் பிரபல்யம் பெற்று விளங்கும் குரு பீடாதிபதிகள், சமயப் பெரியோர்கள், பேரறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், என்றின்னோரன்ன பெருமக்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பண்பாட்டுக் கருவூலங்களையும் மட்டுமன்றி எங்கள் 'இமையாணன் பதி விஸ்வகு விநாயகர் ஆலய வரலாற்றினையும் தாங்கி வெளிவருவதையிட்டு யாம் பெரிதும் உவகை அடைகின்றோம்.

விஸ்வப்பிரம்ம சமூகத்தினரின் புராதன மாட்சி விஸ்வகுல விநாயகர் ஆலய வரலாறு அற்புதம் போன்ற சிறப்புக்களைப் பேசும் 'விஸ்வகுல விநாயகர் பெருமை' என்னும் இச்சிறப்பு மலரை வெளியீடு செய்து நிற்கும் ஆலயத்திருப்பணிச் சபையினர், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக - சமூக நிறுவனங்கள், அவற்றைச் சேர்த்துதவிய எங்கள் சமூக இளைஞர்கள் சிறப்புற அச்சேற்றித் தந்த ஏ. சி. எம் அச்சகத்தினருக்கும் விடயதானம் செய்தோர் ஆகிய எல்லோருக்கும் எல்லாம் வல்ல உடுப்பிட்டி, இமையாணன் பதி விஸ்வகுல வீரகத்தி விநாயகரின் திருவருள் கிடைப்பதாகுக என்று இறைவனைப் பிரார்த்தித்து இவ்வுரையை நிறைவு செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

## "விஸ்வகுல விநாயகர்"







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

வடமராட்சி இமையாணன் மேற்கைச் சேர்ந்த விஸ்வப் பிரம குலத்தார் ஏத்தும் வீரகத்தி விநாயகர் ஊஞ்சல், எச்சரிக்கை பராக்கு, லாலி, மங்களம் என்பன

உடுப்பிட்டி ஆசிரியன் காங்கேயன் நீலகண்டன் அவர்கள்.

## காப்பு

### எண் சீர்விருத்தம்

மேருவரை மீதுகதை விரித்த மெய்யன்
விளம்புமறை நான்காக விளங்குந் தூய்யன்
கூருமொளி வேலவற்குத் தமைய னானோன்
குலவுவள வீமையாணன் கோவில் கொண்டோன்
தேருமதி விஸ்வகுலம் சிறக்க வார்வோன்
சிந்துரமா முகங்கொண்ட தேவ தேவற்
காருமிய லூஞ்சலவ னருளி னாலே
யனமந்திடுவ தெளியேன்ற னாற்றலன்றே.

## நூல்

### எண் சீர்விருத்தம்

மதியினொளி காலுமணி மண்ட பத்து
மலர்த்தருக்கள் நாற்புறமும் வயங்க நாட்டிப்
புதிய வொளி வரைத்தூண் பொருந்தப் பூட்டிப்
பொன்விட்டந் தாங்குமல ருஞ்ச லேறி
அதிசவுந்தர்ய மென்மடவார் வடந்தொட் டாட்ட
அன்ப ரெலா மகங்குழைந்தே யருகி லார
விதியழிய விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடி ருஞ்சல் -1

மின்விளக்க நிரையிருளை விரட்டி யோட்ட
மென்மலரின் சுகந்த மின்பை மேன்மை யூட்ட
தென்றமிழ்தன் சுவையெட்டுத் திசையும் நாட்ட
திருநீறு கண்டிகைதஞ் சிறப்பைக் காட்டப்
பன்னுமன்பர் கையுறைகள் பணிந்து நிட்ட
பாவையர்க ளுளமுருகி வடந்தொட் டாட்ட
மென்மையுள விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடி ருஞ்சல் -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யதமி ழுலகெங்குஞ் செழிப்புற் றேற
திருநீற்றின் மகிமையெந்தத் திசையுந் தேற
துய்யமறை யாகமங்கள் துலங்கி வீற
சூது கொலை கள்களவு தொடர்ந்து நீற
மெய்யடியார் கூட்டமின்ப மேவி யாற
வீறுகுன்றி நாத்திகப்பேய் வீழ்ந்து பாற
வெய்யவரில் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் -3

கந்தருவ ரெனவிசைஞர் கானம் பாட
கருதுலய விந்யாசம் காதை மூட
சுந்தரமின் னார்பரதஞ் சோர்வற் றாட
தொண்டரகந் தொறுமின்பந் தொடர்ந்து நீட
அந்தணர்தம் மந்திரவொலி யமைவாய்க் கூட
அன்பரகத் தவமாயை யழிவுற் றோட
விந்தைபுரி விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் -4

இந்திரவி வெண்கொற்றக் கவிகை தாங்க
இணைக்கவரி யிருமருத்து மிசைவாய் வாங்க
அந்தணன்மால் வட்டந்தாங் கின்பா லோங்க
அசைதுவசந் தாங்கிமையோர் வெள்ளந் தேங்க
அந்தகனிந் திரன்வாடாங் கமைவிற் றூங்க
அடர்க்குமலந் தனதுவலி யற்று நீங்க
விந்தையருள் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் -5

ஓங்குமொளி நுதலிலங்கு மோடை யாட
ஒன்று செவிக் கவரிதும்பிக் கைதானாட
பாங்குறுமுப் புரிநூல்பொற் பதக்க மாட
பன்னுதர பந்தனம்பட் டாடை யாட
பூங்கமலத் தாட்டண்டை கலினென் றாட
புடைமருவு மன்பரெலாம் புளகித் தாட
வீங்குபுகழ் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல் -6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுமறைப் பொருளான வொன்றே யோலம்
ஒப்பிலவ்வைக் கருள்புரிந்த கன்றே யோலம்
மாதுவள்ளி முருகனுற வைத்தா யோலம்
வலியகய முகவனிற வதைத்தா யோலம்
தீதுவரா வணங்காப்பா யோல மென்று
செகமனைத்தும் பணிந்திறைஞ்சி யோலஞ் செய்ய
வேதனுநான் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாட ருஞ்சல் - 7

போற்றுகணப் படையாரே யாட ருஞ்சல்
புவியிலெமைப் படையாரே யாட ருஞ்சல்
மாற்றலர் பாற் பரியாரே யாட ருஞ்சல்
வயவாகுப் பரியாரே யாட ருஞ்சல்
மாற்றநிலை யில்லாரே யாட ருஞ்சல்
வணங்குமக வில்லாரே யாட ருஞ்சல்
வேற்றுமையில் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாட ருஞ்சல் - 8

மோதகமார் கரத்தாரே யாட ருஞ்சல்
முடிவிலருள் வரத்தாரே யாட ருஞ்சல்
நாதவடி வானாரே யாட ருஞ்சல்
ஞானமுடி வானாரே யாட ருஞ்சல்
பாதமல ரிணையாரே யாட ருஞ்சல்
பரவுமன்பர் துணையாரே யாட ருஞ்சல்
வேதனுநான் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாட ருஞ்சல் - 9

அடையலருட் கரியாரே யாட ருஞ்சல்
ஐந்துகரக் கரியாரே யாட ருஞ்சல்
கடையேமைக் காப்பாரே யாட ருஞ்சல்
கருமலத்துக் காப்பாரே யாட ருஞ்சல்
மிடையொளிச்செஞ் சடையாரே யாட ருஞ்சல்
வீரவிருணெஞ் சடையரே யாட ருஞ்சல்
விடைபோற்றும் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகரே யாட ருஞ்சல் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

மறையவரும் வானவரு மாவும் வாழி
மழை முகிலுஞ் செங்கோலு மண்பும் வாழி
மறை நெறியுந் திருமுறையும் மகமும் வாழி
வண்டமிழுந் தமிழகமும் மாண்பும் வாழி
நிறைகற்பு மனையறமும் நிறையும் வாழி
நேரிலிசை யிமையாணன் மேற்கில் வாழும்
மிறைக்கவி சொல் விஸ்வகுலம் வேண்டி யேத்தும்
வீரகத்தி விநாயகர் மென் தாட்பூ வாழி.

## எச்சரிக்கை

சிவனார் முதற் புதல்வாமறை முதல்வா யெச்சரிக்கை
சிறியேமிடர் கழையோ ரருட்கடலே யெச்சரிக்கை
பவவாழ்விதி ஓழலாதெமைப் புரப்பா யெச்சரிக்கை
பண்ணார் தமிழ் சொல்வார்க்கருள் சுரப்பா யெசசரிக்கை - 1

சுகனேயுமை மகனேயிப முகனே யெச்சரிக்கை
சொல்லாரிமை யாணன் வதி சுகனே யெச்சரிக்கை
சகமேவுயிரகமே யொரு மருந்தே யெச்சரிக்கை
தமிழேசெழு நறவேயுயிர் விருந்தே யெச்சரிக்கை - 2

## பராக்கு

அன்றுகுறு முனியுடனா டல் செய்த பையா பராக்கு
அழகுமதிப் பிறைபோலு மெயிறுடைய வையா பராக்கு
ஒன்றுபுனற் காவிரியை யிந்திரற்குத் தந்தாய் பராக்கு
உயர்கயிலை வெற்பவ்வை யுறவருள் புரிந்தாய் பராக்கு
மன்றுநடச் சிவனூர்ந்த ரதவச்சை யொடித்தாய் பராக்கு
மால்பெற்ற பெருஞ்சாப மதையறவே முடித்தாய் பராக்கு
என்றுமெங்கள் வேண்டுதலுக் கிரங்கியருள் மெய்யா பராக்கு
இமையாணன் விஸ்வகுலம் மேத்துமிபத் தூய்யா பராக்கு

## லாலி

நம்பியாண்டார் நம்பி கண்ட தந்தி முக லாலி
நம்பினரைக் காத்தருளு மைந்துகர லாலி
தம்பிதனக் காகவனஞ் சார்ந்தவரே லாலி
தமயந்தி வாழவருள் கூர்ந்தவரே லாலி -1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவெலி வாகனத்தி லூர்பவரே லாலி
சித்தி புத்தி யிருபுடையு மார்பவரே லாலி
கன்னலவல் பயறெள்ளுக் கானவரே லாலி
கனிக்குமையாள் சிவனைவலம் போனவரே லாலி - 2

சித்தியெலா மெத்தவருள் முன்னவரே லாலி
திருமுறையி னிருப்பிடத்தைச் சொன்னவரே லாலி
பத்திமிகும் விஸ்வகுல வுத்தமரே லாலி
பழகுதமிழ்க் கிரங்கியருள் வித்தகரே லாலி -3

மங்களம்

ஆதியந்தமற்ற சோதி வடிவார்க்கு மங்களம் - சகத்
தாமெதற்கு மானதனி முடிவார்க்கு மங்களம்
நீதிநெஞ்சு தொறு நிற்பார்க்கு மங்களம் - அன்பர்
நினைந்துருக வற்றருளும் பொற்பார்க்கு மங்களம் -1

தும்பி முகத் தைந்துகரத் தூயருக்கு மங்களம் - நிதந்
தோத்திரஞ்செய் தேத்துவோர்ச காயருக்கு மங்களம்
செம்மைவள விஸ்வகுல நாதருக்கு மங்களம் - அருட்
செல்வமென்றும் நல்குபர போதருக்கு மங்களம் - 2

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுப்பிட்டி, இமையாணன் பதி விஸ்வகுல விநாயகர் தேவஸ்தான வரலாறு
## - தோற்றம், வளர்ச்சி பற்றி அறிமுக ஆய்வு -

**வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்,** B.A.Hons, M.Phil.,
**பகுதி நேர துணைவிரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

### அறிமுகம்

**இமையாணன்: இட அமைவும் விளக்கமும்**

புராதனப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அதன் வடகிழக்குத் திசையில் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை நெடுஞ்சாலையின் உடுப்பிட்டிச் சந்திக்கு அண்மித்து 100m தூரத்தில் இமையாணன் பதி விஸ்வகுல விநாயகர் எழுந்தருளி இருக்கும் புனிதபதி அமைந்துள்ளது. இமையாணன் என்னும் கிராமம், வடமராட்சியில் மிகவும் புகழ்பெற்ற புராதனக் கிராமங்களில் ஒன்றாகும். இமையாணன் விஸ்வப் பிரம்ம சமூகத்தைப்பொறுத்தளவில் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவு மக்கள் தொகையைக் கொண்டு விளங்கும் குடியிருப்புக்களில் ஒன்றெனும் சிறப்பினைத் தமதாக்கியிருக்கும் பெற்றியது.

யாழ்ப்பாண அரசுக் காலத்தில் அதன் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்ட பிரதம தளபதிகளில் ஒருவராக விளங்கிய **'இமையாண மாதாக்கன்,'** இமையாணன் பதியில் பிரதம கோட்டையில் பணி ஆற்றியதாக வரலாற்றியலாளர் கருதுவர்.

### ஆலயத்தின் அமைவிடம்

உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து 100 m தூரத்தில் அல்வாய் வீதியின் தெற்கே கிழக்கு நோக்கிய சந்நிதியாக எழுந்தருளியிருக்கும் இமையாணன் பதி, விஸ்வகுல விநாயகர், 9 1/2 பரப்பு நிலத்தைத் தனது வளாகமாகக் கொண்டிருப்பவர். தெற்கு, தென்கிழக்கே துவாளிப் பிள்ளையார், துவாளிக் கண்ணகையம்மன், மேற்கே சந்திரசேகர வீரபத்திரசுவாமி, இமையாணன் பதி பத்திரகாளி அம்மன், வடகிழக்கே வல்லைவாழி விநாயகர், கிழக்கே பெரியதம்பிரான் ஆகிய ஆலயங்களின் நடுமையத்தில், **"இமையாணன் பதியின் அருளாட்சி நாயகன் நானே"** என்று தத்துவ விளக்கம் செய்பவராக விளங்குபவர் இவர். அதுமட்டுமன்றி யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய கல்வி நிறுவகங்கள், விநாயகர் சனசமூக நிலையம், விநாயகர் பாலர் பாடசாலை போன்ற அரசு, தனியார் நிறுவகங்களையும் தம்மருகே கொண்டு விளங்குபவர். விஸ்வப் பிரம்ம சமூக மக்கள் மத்தியில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் விநாயகர் ஆலயத்தின் மேற்கே அவர்தம் குல தெய்வமாகிய ஸ்ரீ பத்திரகாளி அம்மன், வடக்கு நோக்கி வீற்றிருப்பது, இவ்வாலய அமைவிடத்தின் புனிதத் தன்மையினை எடுத்துக் காட்டும்.

### ஆலயத்தின் அடிப்படைக் கட்டமைப்பு

ஆகம-சிற்பநூன் மரபுகளுக்கமைய மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம், முக மண்டபம், மடப்பள்ளி, மணிக் கூட்டுக்கோபுரம் என்பவற்றைக் கொண்ட இவ்வாலயம், சுற்றுப் பிரகாரத்தில் முருகன், வைரவர் ஆகியோர்தம் கருவறைகளுடன் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் முன் வீதியில் அதாவது கிழக்கு வீதியில் வட-கிழக்குத் திசையில் பழுதடைந்த நிலையில் மடம் ஒன்று காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் கருங்கற் சிலைகளாக மூலஸ்தான விநாயகர், வள்ளி-தேவசேனை சமேத முருகன், வைரவர் ஆகிய தெய்வ வடிவங்கள் விளங்குகின்றன. ஒரேயொரு எழுந்தருளி மூர்த்தியாக விளங்குபவர் பஞ்சமுக விநாயகரே.

பிரதான கருவறை, ஏகதன விமானத்துடன் உத்தரமட்ட வேலையாக அமைந்துள்ளது. தற்போது புதிதாக அமைக்கப்பட்ட முருகன் ஆலயம், உத்தரமட்ட வேலையாக அமைந்திருப்பினும் விமானம், முருகனுக்கேயுரிய சிறப்புக்கோணமாகிய அறுகோணத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**விநாயகராலயத்தோற்றமும், வளர்ச்சியும்.**

**ஆலயத்தோற்றம்: வரலாற்றுப் பின்னணி**

விஸ்வகுல விநாயகர் ஆலயத் தோற்றமானது சுமார் இரு நூற்றாண்டுகளையே வரலாறாகக் கொண்டதென்று பலராற் கருதப்பட்டு வருகின்ற போதிலும் சரியானதும் தெளிவானதும் ஆகிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாவிடினுங்கூட இப்பிரதேசத்தில் நிலவிவரும் செவிவழி வரலாற்றுச் செய்திகளையும் பெரியோர் வாய்க்கேட்டறிந்த தகவல்களையும் ஆதாரமாகக் கொண்டு இவ் ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளமை, இவ்விடத்திற் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

தற்போதைய விநாயகராலயம் அமைந்துள்ள நிலையத்தின் வடபால் சனசமூக நிலையத்திற்குப் பின்னால் உள்ள தெருக்கிணற்றடியில் பூவும் நீரும் வைத்து வழிபடப்பட்டு வந்த மிகச்சாதாரண நிலையே அதன் தோற்றநிலை ஆகும். இவ்விநாயகர், பருத்தித்துறையிலுள்ள மூக்கத்தி முனை என்னும் குறிச்சியிலிருந்து எடுத்து வரப்பட்டவர் என்று போற்றப்படுபவர். பருத்தித்துறையை தனது பூர்வீகமாகக் கொண்ட இவ்விநாயகர் பெரும் பாரம்பரியம் ஒன்றின் பிரதிநிதியாக விளங்குகின்றமையை நாம் அவதானிக்க முடிகின்றது. வடமராட்சியைப் பொறுத்தளவில் மட்டுமன்றி முழு யாழ்ப்பாணத்திலுமே தனிச் சிறப்புப் பெற்ற விஸ்வகர்ம சமூகப் பண்பாட்டுக் கிராமங்களில் ஒன்றெனவிளங்கும் மாதனை இந்தியத் தமிழக - இலங்கைத் தொடர்புகளுக்கு மிகவும் பொருத்தமானதோர் கேந்திரமாகவும் துறைமுகம் ஒன்றின் அண்மையிலும் அமைந்திருப்பது பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் ஏற்ற வாய்ப்பினை அதிகளவிற் கொண்டிருக்கும் தன்மையது. உடுப்பிட்டி, கரணவாய், கரவெட்டி ஆகிய கிராமங்களுடன் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட தொடர்புகளும் பண்பாட்டு வளர்ச்சி நிலையின் ஊடாட்டமானதோர் பரிணமிப்பையே ஏற்படுத்திற்று எனலாம்.

கடல்வழிப் போக்குவரத்து வசதி வாய்ப்புக்களை அதிகளவிற் கொண்ட, விஸ்வப் பிரம்ம சமூக நகர்ப் பிரதேசமாக விளங்கும் பண்பாட்டு வளர்நிலையில் அதீத வளர்ச்சி கண்டிருந்த மாதனையின் 'மூக்கத்து முனை'யிலிருந்து உடுப்பிட்டிக்கு எடுத்து வரப்பெற்ற மூலவர், இமையாணன் பதியில் தெருக்கிணற்றடியில் தனது செந்திருவடியை முதற்படியாகப் பதிக்கலானார். மிகவும் எளிமையான முறையில் சிறுகொட்டிலில் இருந்து, நீரும் பூவும் கொண்டு பரிபாலகர்கள் உவந்தளித்த பூஜையில் அகமகிழ்வு கொண்ட விநாயகர், வழிபடுவோர்க்கு வரந்தருவதில் பெரியவராகவே விளங்கலானார்.

**ஆலயத் தோற்றக் காலம் : வரலாற்று நிர்ணயம்**

விஸ்வகுல விநாயகர் ஆலயம், சுமார் 175 வருடங்கள் பழைமையானதென்று சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது 100 வருடங்களுக்கு உட்பட்டது' என்று மறுத்துரைக்கும் போக்கினையும் அவதானிக்க முடிகின்றது. ஆலயத்திற்கான உறுதிகள் யாவற்றையும் அலசி ஆராய்ந்தபோது, 1937 பங்குனியில் 16388ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட 'நியமனம்' என்னும் வகையிலான உறுதியில், **கூநம்பூரவர்களின் வழிபாட்டுக்காய் வீரகத்திப் பிள்ளையார் கோவிலென்னும் திருநாமத்தோடு. ஏறக்குறைய 99 வருடங்களுக்கு முன்னரே எங்கள் முன்னோரால் கட்டப்பட்ட குறித்த கோவிலும்©** என்னும் கருத்துரை எம் கவனத்தை ஈர்த்தது. ஆக, இவ்வுறுதி நிறைவேற்றப்பட்ட 1937ல் இருந்து 99 ஆண்டுகள் பின் நகர்த்தலில் 1838 ஆகின்றது. இக்கருத்தினை நாம் சரியானது என்று கொண்டால் இதன் தோற்றக் காலம் 1830 – 1840ற்குமிடைப்பட்டது என்றே கருத வேண்டி இருக்கும். **அதன் பரிணமிப்பிற்கு, இந்தியத் தொடர்புகளின் வாயில் என விளங்கும் மாதனைக் கிராமத்தின் 'மூக்கத்து முனை'க் குறிச்சியினைப் பூர்வீகமாகக் கொண்ட, மிகவும் சாதாரண கல்வடிவிலான விநாயகர், வருகை தந்து உவந்து விற்றிருந்து உதவியுள்ளார் என்பது ஏற்கத்தக்கதே என்று முடிபு செயவதிற் தவறேதுமில்லை.**

## விஸ்வகுல வீரகத்தி விநாயகர்: பெயர் நோக்கிய வளர்ச்சி

தெளிவான வரலாற்றியல் மூலங்கள் இல்லாத நிலையில் ஆலயத்திற்கான ஆதனங்கள் வழிச்சென்று அதன் உருவாக்கம், படிமுறை மாற்றம் என்பன தொடர்பில் சிந்திக்கும் பிராரம்ப முயற்சியாக இப்பகுதி அமைகின்றது. இமையாணன் மேற்கு, விஸ்வகுல வீரகத்தி விநாயகர் என்னும் திருநாமம் அரசியல், பிரதேச எல்லை நிர்ணயம், அதன் பெயர் மாற்றம் போன்றவற்றுடன் தொடர்புபடுவதால் வரலாற்றியலில் வளர்நிலையில் உருவாகியது என்பதே சரியானது.

வயிரவி முருகர் என்பவரால் 1942.11.22ம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட, 7539ம் இலக்க உறுதியில், '**இமையாணன் குறிச்சி, செம்பாடு என்னும் காணியிலிருக்கும் வீரகத்திப் பிள்ளையார்**' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயின் 1994.08.22ம் திகதிய, 8255ம் இலக்கமுடைய, பொறுப்பாட்சி நிறுவனப் பத்திரம்' என்னும் வகையில் முடிக்கப்பட்ட உறுதியில் '**உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு விஸ்வகுல வீரகத்தி விநாயகர்**' என்னும் குறிப்பு ஒன்று இடம் பெற்றிருப்பது. அக்கால கட்டத்திலேயே இப்பெயர் நிலைபேறு எய்தியிருந்தது என்பதைக் காட்டுகின்றது. ஆலயம், பக்தி – தெய்வீக நிலையை நோக்கிய அறிவின்பாலும் ஈர்க்கப்பட்டமையை நாம் சில இடங்களில் அவதானிக்கலாம்.

1967.02.2ம் திகதிய 3890ம் இலக்கத்தில் தருமநன்கொடை என்னும் வகையில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் "**வீரகத்திப் பிள்ளையார் சுவாமி**" என இடம்பெறும் குறிப்பு, ஆகம – சிற்பநூன் மரபினை நோக்கிய வள்ர்ச்சியைப் பிரதிபலிக்கின்றமை தெளிவு.

## நிறுவக மயப்படுத்தப்பட்ட ஆலய பரிபாலனம்

**மகாசபை தொடக்கம் பரிபாலன சபை வரையில்**

குடும்பங்களின் இணைவில் தோற்றம் பெற்று வளர்ந்து வந்த வநாயகராலயம், பொதுமைப்படுத்தப்பட்டு ஒரே ஊர்வாழ் விஸ்வகுல மக்களுக்கென்னும் நோக்கத்துடன் 1937 பங்குனி மாதம், 16388ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்டதும் 25 உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதுமாகிய ஆதனத்தில்,

**"உடுப்பிட்டிக் கோவிற்பற்று தனக்காரர் குறிச்சியிறைக்குச் சேர்ந்த செம்பாடும் மறுபிரிவும் என்னும் காணியில் இருக்கும் எங்கள் சாகியத்தாராகிய நம்மூரவர்களின் வழிபாட்டுக்காய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரகத்திப் பிள்ளையார் காணியென்னும் திருநாமத்தோடு எங்கள் சாகியத்தாரின் பொதுவில் .......... எங்கள் முன்னோரால் கட்டப்பட்ட குறித்த கோவிலும்.....”**

என்று குறிப்பிடப்பட்டுள்ளமை இவ்விடத்தே விதந்துரைக்கப்பட வேண்டியதும் அனைவரதும் கவனிப்பிற்கு உரியதுமாகும்.

விநாயகர் ‘ஆலயம், கிணறு என்பவற்றின் திருத்தம், ஆலய பூசை முதலிய விடயங்களைச் செவ்வனே நடாத்துவதற்குமாக’ ஆலயத்தின் கிழக்கு வீதியில் 1937.03.04ம் திகதி இரவு 8மணி ஓர் மகாசபை கூட்டி அச்சபைக்கு விசுவசமுப மகாசபை என்னும் பெயர் வைக்கப்பட்டது .இச்சபையே ஆலய வரலாற்றில் அமைக்கப்பட்ட முதலாவது சபை ஆகும்.

இச்சபை ஏற்படுத்தப்பட்டு சரியாக 57 ஆண்டுகளின் பின்னர், 1994.08.22ம் திகதிய, 8255ம் இலக்கமுடைய இ. சதானந்தன் (சட்டத்தரணியும் நொத்தாரிசும், புலோலி கிழக்கு). அவர்களால் **‘பொறுப்பாட்சி நிறுவனப் பத்திரம்’** என்னும் வகையில் நிறைவேற்றப்பட்ட உறுதியில், **‘உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு விஸ்வகுல வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை’** என்னும் பெயர் சுட்டப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையின் யாப்பு நிறைவேற்றம் தொடர்பாக 1994.01.28ம் திகதி வெள்ளிக்கிழமை மு.இ. 8.00 மணிக்கு திரு. கந்தையா ஐயாத்துரை தலைமையில் 100 பேர் சமுகந்தந்து கலந்துரையாடியதாக அறிய முடிகின்றது.

‘இவ்வாலயம் அமைந்துள்ள ஆதனங்கள் யாவும் இந்தக் கோவிலின் முன்னேற்றத்துக்காகவும் விஸ்தரிக்கும் நோக்கத்துடனும் அதன் சொந்தக் காரர்களும் உரித்து சோந்தை உடையவர்களும் சொத்துரிமை மேலாட்சியெடுத்து தர்மசாதன நன்கொடையாகவும் அறுதியாகவும் கொடுத்து அதற்கான வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இதற்கு ஏகோபித்த ஆதரவு நல்கி அவ்விதம் பொதுச் சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது என்றும் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம் இந்த ஆலயத்திற்கும் வழிபாட்டுக்கும் ஆலய பரிபாலனத் தேவைக்குரியதென பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஆலய வளர்ச்சியில் ஒருங்கிணைக்கப பட்ட உறுதிகள் விபரம்

| இல. | | திகதி | நொத்தாரிசு பெயர் |
|---|---|---|---|
| 1. | 6120 | 1956.04.16 | ச. அய்யாத்துரை |
| 2. | 3421 | 1963.05.06 | இ.இ. தருமரத்தினம் |
| 3. | 3890 | 1963.02.26 | கே. இராமலிங்கம் |
| 4. | 7539 | 1942.01.22 | வி. சேனாதிராசசேகரம் |
| 5. | 6454 | 1897.04.08 | இ. ஆறுமுகம் |
| 6. | 8246 | 1994.08.10 | இ. சதானந்தன் |
| 7. | 8247 | 1994.08.10 | இ. சதானந்தன் |

‘மேலும் பல நன்கொடை செய்துள்ளார்களென்றும் அவர்களின் உறுதி விபரங்கள் மறைபொருளாக இருக்கிறதென்றும் குறிப்பிட்ட ஆதனம் முழுவதும் இக்கோவில் பாவனைக்காக சொத்துரிமை மேலாட்சி செய்யப்பட்டதென்றும் இவ்விதம் குறிப்பிட்ட ஆதனம் இவ்வாலயத்தின் தேவைக்காகவே உற்பத்தி காலம் தொட்டு நெடுங்காலமாக ஆட்சி செய்யப்பட்டதென்றும் தனி உரிமை கோர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும் இவ்வித தீர்மானத்தை பொதுச்சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளதென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றோம்.’

இவ்வுறுதிகளின் சரியான அளவுத்திட்டத்தின் அடிப்படையில் வல்வெட்டியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி அவர்களால் உருவாக்கப்பட்ட ‘ஆலய ஆதன வரைபடம்’, 1994.08.10ம் திகதியன்று யாழ். செயலகத்தின் பதிவு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வகுல விநாயகர் ஆலய வளாகமானது பெரும் பரப்பு நிலத்தைக் கொண்டமைந்துள்ளது. இது ஆலய வளர்ச்சியின் ஒரு படியே.

திருப்பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் 2002.08.05ல் நியமிக்கப்பட்ட மேற்படி ஆலய திருப்பணிச் சபையானது சர்வதேச வர்த்தமானியங்களால் பெரிதும் பாதிக்கப்படலாயிற்று. 2002.08.10 பாலஸ்தாபனம் செய்யப்பட்ட போதிலும் தொடர் செயற்பாடு மந்த நிலையிலேயே நகர்ந்தது. 2005 அளவில் மறுசீரமைக்கப்பெற்று உத்வேகம் கொண்ட திருப்பணிச்சபை, துடிப்புடன் செயற்படலாயிற்று. இக்காலப் பகுதியில் நிறைவேற்றப்பட்ட திருப்பணிகள் பின்வருமாறு:

01. மூலஸ்தானம், விமானம் இடிக்கப்பட்டு மீளமைக்கப்பட்டது. இது பழைய அமைப்பு முறையை ஒட்டியே நிர்மாணிக்கப்பட்டது. கோட்டங்களில சுதைச் சிற்பங்கள் இடம் பெறுதல், புத்தாக்கமாகும்.

02. வசந்த மண்டபம் புனரமைப்பு

03. உள்சுற்றுப் பிரகாரத்தின் வடக்கு தெற்கு வீதிகளின் கிழக்குப் பகுதிக் கொட்டகை புனரமைக்கப்படல்

04. பரிவார முருகன் ஆலயமும் மண்டபமும்

05. ஆலயத்திற்குக் கெம்பீரமும் பிரம்மாண்டத்தோற்றமும் தந்து நிற்கும் முகமண்டபம்

அலங்கார உற்சவங்களின் போதும் ஏனைய விசேட விழாக்களின்போதும் மூலவரை, எழுந்தருளி மூர்த்தியாக உள்வீதி, வெளிவீதி கொண்டு வருவதற்கென உருவாக்கப்பட்ட எலி, யானை, கேடகம், திருவாசி, அன்னம் ஆகிய வாகனங்கள் இடம்பெறுகின்றன.

பொதுவாக விநாயகராலயங்களில் நடைபெற்றுவரும் விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி சித்திர பௌர்ணமி, திருவெம்பாவை போன்ற தினங்கள், விரதங்கள் இங்கும் பின்பற்றப்பட்டு வரும் கண்கூடு. ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு 10 தினங்கள், அலங்கார உற்சவம் கண்டு வரும் விஸ்வருப விநாயகர் பெருமான், 10 அலலது 15 தினங்கள் கொடியேற்றத்திருவிழாக் காணும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதில் ஐயமேதுமில்லை.

## விநாயகர் அருளிச் செயல்கள்

காலந்தோறும் அற்புதங்கள் நிறைந்த அருளிச் செயல்களை நிகழ்த்துவதில் புகழ்பெற்றவர், விநாயகர் என்பது இந்து பௌராணிக மரபு. திரிபுர சங்காரம் செய்யப்புறப்பட்ட முழுமுதலாம் தந்தையார் சிவனையே நிலைகுலைய வைத்து அவர் தம் தேரின் அச்சினை உடைத்தவர் அல்லவா விநாயகர்? அகத்திய மாமுனிவர் கமண்டலத்தில் இருந்து காவிரி நதியைப் பெருக்கெடுத்து ஓட வைத்த விநாயகர் 'சிவபூமி' என்று போற்றப்படும் எமது இலங்கைத் திருநாட்டிலும் பல திருவிளையாடல்களை நிகழ்த்தி இருப்பது பௌராணிக வல்லுநர்தம் கருத்தியலாகும்.

அற்புதங்கள் நிகழ்த்துவதில் முன்னிற்கும் விநாயர் உடுப்பிட்டி, இமையாணன் பதி விஸ்வகுல விநாயகர் தேவஸ்தானத்திலும் சில அருளிச் செயல்களைச் செய்துள்ளமை, ஈழத்து இந்து பௌராணிகவியல் வரலாற்றில் விதந்து குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஆலய சமூகத்தைச் சேர்ந்த பக்தர் குழாம், ஆன்மீகப் பெரியோர், அநுபூதிச் செம்மல்கள் ஆகியோர் உள்ளிட்ட பெரியோர்கள் தம் 'செவிவழி – வாய்வழிப் பாரம்பரியம் ஒன்றினுள் மறை பொருளாய் நிலவிவரும் அருளிச் செயல்கள் இங்கு எழுத்தியற் பாரம்பரியத்திற் பதிவாகின்றது.

அருளிச் செயல் : ஒன்று

**'தெய்வ மேறிச் சொல்லுதல்'**

விஸ்வகுல விநாயகராலய முதற் கும்பாபிஷேக நிகழ்விற்கு முற்பட்ட அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் உடுப்பிட்டியின் விநாயகராலய வளர்ச்சியில் தன்னை இணைக்கவல்ல ஒருவரை விநாயகரே தீர்மானம் செய்து அருள்வாக்குக் கொடுத்தமை, விதந்து குறிப்பிடப்பட வேண்டியது. 'தெய்வமேறிச் சொல்லும்' அதாவது 'கலை வந்து சொல்லும் திரு. வேலுப் பிள்ளை கந்தையா (பிள்ளையார் கந்தையா) அவர்கள். **''இக்கிராமத்தில் முதுகில் மச்சத்துடன் ஒரு குழந்தை பிறக்கும் விநாயகர் என்றுதான் பெயர் வைக்க வேண்டும்''** என்று ஒரு தம்பதியினருக்கு அருள்வாக்குக் கொடுத்திருந்தார். அச்சம்பவத்தின் பின்னர், உடுப்பிட்டி வைத்திலிங்கம் தம்பதிக்கு ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தை, அவ்வருள் வாக்கிற்கு ஏற்ப, முதுகில் மச்சத்துடன் இருந்ததைக் கண்ட பெற்றாரும் மற்றோரும் கந்தையாவின் அருள்வாக்கிற் சொல்லப்பட்ட குழந்தை இதுவென்றே நினைந்து, விநாயகர் திருநாமங்களில் அவருக்கே உரிய கனங்களின் அதிபதி என்னும் அதிகாரத்தை வெளிப்படுத்தி நிற்கும் கணபதிப் பிள்ளை என்று பெயர் வைக்கப்பட்டது என்றும் அவரே இவ்வாலய வளர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்டார் என்றும் ஆலய சமூக வட்டம் தெய்வீக பரவச நிலையில் விதந்து போற்றி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகின்றது.

அருளிச் செயல் : இரண்டு

**'விநாயகர் உணவருந்துதல்'**

இந்தியத் தமிழகத்தில், பொள்ளாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி என்றும் சிறுவன் மீது கருணை கூர்ந்து படைக்கப்பட்ட உணவாம் அமுது செய்தருளியமை இந்து சமய பௌராணிகம் கூறும் விநாயகர் அருளிச் செயல்களில் முதன்மையானது. மூலஸ்தானம் சென்று திரும்பிய பெரியவர் ஒருவர்,

**''மூலஸ்தானத்திலை பிள்ளையார் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார். போய்ப்பாருங்கோ''**

என்று சொல்லியதைக் கேட்டு உள்ளே சென்ற செல்லையா கணபதிப்பிள்ளை, அங்கே படைக்கப்பட்டிருந்த மோதகம், அமுது உணவுகளை விநாயகர் துதிக்கையால் அருந்தி மகிழ்வதைக் கண்டிருக்கின்றார். காண்பதற்கு அரியதும் கிடைக்கப்பெறாததும் ஆகிய அதிசய நிகழ்வைக் கண்ட பேரின்பத்திளைப்பில் பேரதிர்ச்சி கொண்டராகத் திரும்பி ஓடிவரும் போது மயங்கியே வீழ்ந்து விட்டார். அங்கே நின்றிருந்தோர், தண்ணீர் தெளித்து, அவர் தம் மயக்கத்தைப் போக்கி எழுப்பி உதவினர்.

விநாயகரின் பேரருள் பெற்ற கணபதிப்பிள்ளை பெறற் கரும்பேறு பெற்றவராகவும் அன்புள்ளம் கொண்ட ஒருவராகவும் பலரால் இன்றும் போற்றப்பட்டு வருதல் விதந்துரைக்கத் தக்கதாகும்.

## ஆலய வளர்ச்சிப் பாதையில் தம்மை இணைத்துக் கொண்ட பெரியோர்கள்

ஆலய வளர்ச்சிக்கு அடிகோலிய பெரியோர்களில் காலத்திற்குக் காலம் பெருந்தொண்டாற்றிய பலர் இருந்துள்ளமை அறியப்படுகின்ற போதிலும் அவர்கள் தொடர்பிலான தெளிவானதும் சரியானதுமாகிய எழுத்தியற் சான்றுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவரவில்லை. மூலவர்களில் ஒருவராகப் போற்றப்பட்டு வரும் வைரவி அல்லது வயிரவி என்பவர் பணி பலராலும் விதந்துரைக்கப்படு கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆலய வரலாற்றில் 1913, 1942, 1965 என மூன்று தடவைகள் ஏற்கனவே கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள நிலையில் ஆலயக் கட்டமைப்பு, காணிகளின் அன்பளிப்பு, வழங்கப்பட்ட சேவை, ஏனைய நிதி ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆலய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பெரியோர்கள் அனைவரையும் தற்போதைய திருப்பணிச்சபை, சபைசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்கள் விதந்து போற்றி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கும்பாபிஷேகங்களை நிகழ்த்திய சிவாச்சாரியார்கள்

இவ்வாலயத்தில் 1942ம் ஆண்டு நிகழ்ந்த இரண்டாவது கும்பாபிஷேகம், கரணவாய்க் குருகுலத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்களின் தலைமையில் நிறைவேறியது. அதைத் தொடர்ந்து 1965ம் ஆண்டு, மூன்றாவது கும்பாபிஷேகம், கரணவாய்க் குருகுலத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ செல்வந்திநாதக் குருக்கள் தலைமையில் எழுச்சியுடன் நிகழ்ந்தேறியது. தற்போதைய ஆலயத்திற்கான அடிப்படைக் கட்டமைப்பு, இக்காலத் திருப்பணியின் போதே உருவாக்கப்பட்டு, '**திறன் மிகு அருட்கொலு**' ஒன்று ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகின்றது.

பிற்பட்டகாலத்தில் இவ்வாலய வளர்ச்சியில் தன்னை இணைத்துக்கொண்டவராக கரணவாய், சிவபிரம்ம கை. நமசிவாய குருக்களவர்கள் திகழ்வது இங்கே குறிப்பிடப்படவேண்டியதாகும். இவர் குருமுதல்வராக விளங்கி, அருட்கடாட்சம் நிறைந்த கிரிஜைகளை நிகழ்த்தியமை போற்றப்படவேண்டியதே.

அதன் பிற்பட்ட 43 ஆண்டுக் காலகட்ட வரலாறு இந்த 2008.06.06ம் திகதி நடைபெற்ற 4வது மகாகும்பாபிஷேகத்துடன் மேலும் '**தெய்வீக அருள் வீச்சினை**" இங்கே அதிகரிப்பதாகும் என்பது பக்தர்தம் கருத்தாகும்.

இக்கும்பாபிஷேகத்தை அகில இலங்கை சைவக் குருமார் சம்மேளன பீடாதிபதியும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தலைமை தாங்கி நடாத்தி வைத்தார். இவர், கல்விப் புலமையிலும் கிரியைகள் நிகழ்த்துவதிலும் தேர்ந்த குருமார்களில் ஒருவராக யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, முழு இலங்கையிலுமே போற்றப்படுபவர் என்பது யாம் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

பிரதம குருவின் தலைமையில் யாழ்ப்பாணம், வடமராட்சியின் பல பிராந்தியங்களையும் சேர்ந்த குருமார் இணைந்து நிகழ்த்திய இக்கும்பாபிஷேகம், ஆலயத்தையும் சிறப்பாக தெய்வ விக்கிரகங்களையும் விதிமுறைகளுக்கு ஏற்ப நிலை நிறுத்தி, உடுப்பிட்டி வாழ் விஸ்வப் பிரம்ம சமூகத்தினர்க்கும் உடுப்பிட்டி வாழ் ஏனைய சமூகத்தினர்க்கும் தெய்வானுக்கிரகம் வழங்கி நிற்கும்.

### நிறைவுரை

**இவ்வாய்விற் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது உடுப்பிட்டி, இமையாணன்பதி, விஸ்வகுல விநாயகர் ஆலயம், யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற பூர்வீக ஆலயங்களில் ஒன்று என்பதும், அது காலத்தின் கோலத்தில் சிக்குண்டு பிற்பட்ட காலத்தில் வளர்ச்சி பெற்றது என்பதும் புலப்படும். சுருங்கச்சொல்வதாயின் இமையாணன்பதி விஸ்வகுல வீநாயகர் பூர்வீக சிறப்புடைய தெய்வீக வரலாறுடையவர் என்பது சாலவும் பொருத்தமானதே.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விநாயகராலய முகப்புத் தோற்றம்



மஹாமண்டபத்தின் அழகிய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Spekta Line Hot Line : 0112690469 / 0773-416799 / 0773-416820





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுற்றுப்பிரகார முருகன் ஆலயத்தின் அழகுத் தோற்றம்



யானை வாகனத்தின் அழகிய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகும்பாபிஷேகத்தில் கலசாபிஷேகம்







கும்பாபிஷேகக் கிரியையின் ஆரம்பம்



குருமார்கள், கலச ஊர்வலம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹாகும்பாபிஷேக ஆரம்ப வேளையில் நிகழ்ந்த வரவேற்பு நடனத் தோற்றம்



வரவேற்பு நடனத்தின் உச்சநிலை



வரவேற்பு நிகழ்வில் மேள நாதஸ்வரக் கலைஞர்களின் இசைவேள்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed By- A.C.M. PRESS 464 Hospital Road, Jaffna. T.P. No. 021 222 9102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org